# இணுவில் பொது நூலகம்

# சனசமூக நிலையம்

# திறப்புவிழா சிறப்பு மலர்

2002

-

03

-

1



020.6
இணுவி.
SL IPR

# இதோ! யாழ்ப்பாணத்தில் ஓடுகளுக்குப் பதில் சீமெந்துக்கூரை ஓடுகள்

ஜீ.ரீ.சற், (G.T.Z) மற்றும் அரச, அரசசார்பற்ற
நிறுவனங்களால் புனரமைப்புச் செய்யப்படும்
வீட்டுத்திட்டங்கள், பாடசாலைக் கட்டடங்கள்
போன்றவற்றிற்கும் பயன்படும்

சீமெந்துக் கூரை ஓடுகள், முகட்டோடுகள்

மற்றும்

இயந்திரங்கள் மூலம் தரமாகத் தயாரிக்கப்பட்ட சிமெந்துக்
கொங்கிறீட் கல் வெவ்வேறு அளவுப் பிரமாணங்களில்
விற்பனைக்குண்டு

தொழிற்சாலையும் விற்பனை நிலையமும் கூரை ஓட்டுத்
தயாரிப்பில் புதிய பரிணாமத்தை
அறிமுகப்படுத்தியிருக்கும்.

## லோகேஸ் கூரைஓட்டுத்தொழிற்சாலை

# LOGES SHEET INDUSTRIES

INUVIL

**MICRO CONCRETE ROOFING SHEET**

[L.M.C.R.S]

ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

# இணுவில் பொது நூலக

## திறப்பு விழா சிறப்பு மலர்



இணுவில் பொது நூலகம்
சனசமூக நிலையம்
மலர்க்குழு

2002

# இணுவில் பொது நூலகம்
# சனசமூக நிலையம்
# சிறப்பு மலர்

**2002**

**இதழாசிரியர்கள்**

திரு.கு.ஐங்கரன் திரு.இ.ஜெயமூர்த்தி

உண்மையே உயர்ந்த செல்வம்
வளமுடன் வாழ்வோம்

## பொருளடக்கம்


ஆசியுரை

தலைவரின் இதயத்தில் இருந்து

மலர்ஆசிரியர்களின் உட்கிடக்கை

வாழ்த்துரை

கட்டுரைகள்

சமய சமூக நிறுவன வாழ்த்துச் செய்தி

கவிதை நாடகம்

வெளிநாட்டில் இருந்து

அறிவியல் தரவுகள்

நூலக விபரம்

பொருளாளரின் அறிக்கை

நன்றியுரை

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| **மலரின் பெயர்** | திறப்புவிழா சிறப்பு மலர் |
| **வெளியிடும் அமைப்பு** | இணுவில் பொதுநூலகம் சமூகநிலையம் |
| **முகவரி** | இணுவில் மானிப்பாய் வீதி இணுவில் தெற்கு |
| **மலர் ஆசிரியர்கள்** - | திரு.கு.ஐங்கரன் திரு.இ.ஜெயாமூர்த்தி |
| **பதிப்பு** | 2002 மே.26 |
| **அச்சுப்பதிப்பு** | ஐங்கரன்(டொட்)கொம் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார், கோயிலடி, இணுவில் தெற்கு, தொ.பேசி. 070.212636 |

சீரிணுவைப் பெரும் பொது நூலகம் வாழி



பரராஜ சேகரப் பிள்ளை யாரும்
பரிந்திடும் அபயகரம் அசைத்தே ஆசி
வரமாகத் தென்னிணுவைப் பொதுநூ லக
வளர்கல்விக் குழந்தை க்கு அள்ளி நலகப்
புரமான தென்னிணுவைப் பொது நூலகப்
பூங்குழவி நூன்மலரால் கணேசன் பாதம்
பெருமானை அருச்சிக்க இளம் தொண் டர்கள்
பெறற்கரிய கல்விகலைப் பேறு பெற்றார்

கலைமகள் வாழுகின்ற திருக்கோ விலாய்க்
கல்விகலை வளர்க்கின்ற பெரும்வா யிலாய்
நிலைபெறும் தலையாய கல்விச் செல்வம்
நீடுபுகழ் கலைச்செல்வம் மலிந்து வாழ
அலைகடலும் கடந்துதிர வியங்கள் தேடி
அணிநகராம் நல்லிணுவைக் கலைம களின்
பலகலையின் பொதுநூல கத்தை ஆக்கும்
பண்பாளர் வாழி இளம்தொண்டர் வாழி!

கல்வியொடு கலைவளர்க்கும் பொதுநூ லகம்
கவின் இணுவைப் பதியினிலே நீடு வாழி!
செல்வமொடு கல்விதரு வீரம் கொண்டே
செழுஞ்சைவ இளைஞர்கலை மிளிர்ந்தே வாழி!
பல்விதத்தொ ழில்நுட்ப அறிவும் பெற்றே
பண்பான தொழில் வளமும் பெற்றே வாழி
செல்வி கலை மகளினாசி செழித்து ஓங்கச்
சீரிணுவைப் பெரும்பொதுநூ லகமும் வாழி!

''சுபம்''

இங்ஙனம்
''கலாரத்னா'' ''கலாபூஷணம்'' ''கவிமாமணி''
''மஹாவித்துவான்''
யாழ்ப்பாணம்- இணுவில்
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயர் (M.A) J.P

## இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து ...............

ஈழமணித்தீவினிலே முத்துப்பதித்தாற் போல் விளங்கும் யாழ் குடாநாட்டிலே சைவமும் தமிழும் திகழ்ந்தொளிரும் இணுவையம்பதியிலே ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் துணையுடன் எமது பொது நூலகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதையிட்டு அகமகிழ்கின்றோம்.

1930ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது பொது நூலகமானது பல இன்னல்களுக்கு மத்தியில் முற்று முழுதாக தனது செயற்பாட்டை இழந்து விடாது சிறியளவில்தன்னும் இயங்கிக் கொண்டு இருந்தது ஆனாலும் தற்பொழுது இன் நூலகத்தை பெரியளவில் விஸ்தரிப்பதற்கு திருவருள் கூடியுள்ளது.

இவ்வாறு உருவாகும் இப் பொது நூலகமானது மாணவர்களுடைய அறிவினை வளர்க்கும் அறிவியல் சம்மந்தமான நூல்களையும் சிறுவர்கள் முதியோர்கள் போன்ற அனைவருக்கும் ஏற்றவகையில் சகலவிதமான நூல்களையும் பெறும் அளவிற்கு விருத்திசெய்யப்படுவதுடன் சிறுவர்பூங்கா, பாலர்பாடசாலை, இணையத்தளம்,சர்வதேசவலைப்பின்னல், கணணி போன்ற நவீனவசதிகளும் இணைக்கப்படுவது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்தகைய இந் நூலகத்திறப்பு விழாவை முன்னிட்டு "இணுவில் பொது நூலகத் திறப்பு விழா சிறப்பு மலர்" என்னும் இன் நூலை வெளியிடுவதில் பெருமகிழ்சி அடைகின்றோம் அத்துடன் இன் நூலில் கதை, கட்டுரை,விளையாட்டுச்செய்திகள், இணையத்தளம்பற்றிய ஓர் அறிமுகம் போன்ற பல ஆக்கங்கள் பெரும்பான்மையோர்க்கும் பயன்படக் கூடியவிதத்தில் இணைக்கப்பட்டுள்ளமையும் முக்கியமான சிறப்பம்சமாகும்

இச் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக்கள் கவிதைகள்,கட்டுரைகள்,போன்ற பல ஆக்கங்களையும் தந்துதவிய அனைத்துப் பெரியோர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன் நூலகத்திற்கு உதவிய சகல நெஞ்சங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன் நூலக விஸ்தரிப்பிற்கு சகல விதத்திலும் உதவிய அனைத்து நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
இணை இதழாசிரியர்கள்
**த.ஐங்கரன்** **இ.ஜெயமூர்த்தி**

## தலைவரின் உள்ளத்திலிருந்து...............

எல்லாம்வல்ல ஞீபரராஜசேகரனின் திருவருளால் இணுவையம்பதியிலே பொது நூலகம் ஒன்று உருவாகி இருப்பது மனதுக்கு பெரும் உவகையை அளிக்கின்றது.கலை,கலாச்சாரங்களுக்கு மணிமகுடமாக விளங்கும் இவ்வூரில் பொது நூலகம் ஒன்று இல்லாத குறை இன்றுடன் பூர்த்தியடைகின்றது.மேலும் இப் பொது நூலகத்துக்கான விதையை 1930ம் ஆண்டளவில் எமது மூத்தோர் இட்டுச்சென்றுள்ளனர். அது இன்றுதான் பெரு விருச்சமாக வளர்ந்து பெரும் பயனைத் தருவதற்காக காத்துநிற்க்கின்றது.இப் பொதுநூலகத்தின் ஊடாக இணுவையம்பதி இன் நாட்டுக்கு பல சேவைகள் புரிவதற்கு ஒரு வாய்பை ஏற்ப்படுத்திக் கொண்டது. இந்நூலகத்தின் ஊடாக கணனிப்பிரிவு, பல அரியநூல்த் தொகுதிகள்,பாலர்பாடசாலை உள்ளக,வெளியக விளையாட்டுக்கள், கருத்தரங்குகள் சிறுவர்பூங்கா போன்றவற்றை நடாத்தி இந் நாட்டின் எதிர் கால சிற்பிகளை உருவாக்கும் மகத்தான பணியை மேற் கொள்ளவுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.இன்றைய காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு எமது நாட்டின் அறிவுப்பசியை நீக்குவது இப் பொதுநூலகத்தின் தலையாய கடமையாகும்.விவேகானந்தர் கூறினார் "**ஒருகல்விக்கூடத்தை அமைப்பதன் மூலம் ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றது**" என்று இவருடைய கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை தற்கால நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றது. பாட்டுக்கொரு புலவன் பாரதி சொன்னான்-

இன்னறுங்களிச் சோலைகள் செய்தல்
இனியதிர்தன் சுவைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிநித்தல்
அன்னயாயிலும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கொழுத்தறித்தல்

ஆகவே இவ்வாறான அறிவுப்பணியை செய்யும் பெருங்கரியத்தில் எமது ஊரைச்சேர்ந்த வெளிநாட்டு நண்பர்கள் லண்டன்,கனடா,அவுஸ்ரேலியா,டென்மார்க் ,இந்தியா,சுவிஸ்,கொழும்பு,மற்றும் இதரநாடுகளில் இருந்து பெருமளவு நிதியை எமது நூலகத்துக்கு தந்து இப்பெரும் பணியை செய்து முடிப்பதற்கு உதவி உள்ளனர் இவர்களுடைய பணி மேன்மேலும் வளரவேண்டும் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம் '.மேன்மேலும் இப் பொது நூலகத்தின் ஊடாக ஏழைகளுக்கு முதியவர்களுக்கு எல்லாம் உதவும் ஓர் நல்லநோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.எனவே இப்பொது நூலகம்.பெருவிருட்சமாக வளரவேண்டும் என்று எல்லாம்வல்ல ஞீபரராஜசேகரனை வேண்டி நிற்க்கின்றோம்.

"முடியாது என்ற சொல்லை இல்லாது ஒழிக்கவேண்டும் என்று கூறினார் ஹீட்லர்"

"எண்ணித்துணிக கருமம்-துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

சொ.ஹரிகஜன்
தலைவர்
இணுவில் பொதுநூலகம்

## அன்புள்ளங்களுக்கு...

இணுவில் பொது நூலகத்திற்கு புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" இதனை உணர்ந்த மனிதன் கிராமங்கள், நகரங்கள், வீடுகள், கோவில்கள், பொது இடங்கள் அனைத்திலும் நூலகங்களை அமைத்து மனிதனுடைய அறிவையும், தெளிவையும், சிந்தனையையும் வெளிக்கொணர்ந்து பூரணமான வாழ்வு வாழ வழிகாட்டுகின்றன. இதனை உணர்ந்த இணுவில் மக்கள் இங்கு வாழும் மக்களுக்கு சனசமூக நிலையம் மூலமாக பொது நூலகத்தை அமைத்து சிந்தித்து செயற்பட வழிவகுத்து தந்திருக்கின்றனர். கல்வியிலும், சமயப்பண்பாட்டிலும், இயலிசை, முத்தமிழில் சிறப்புடைய இணுவில் மக்கள் மேலும் தங்களை உயர்த்திக் கொள்ள பொது நூலகப்பணியை ஆரம்பித்துள்ளனர். இந்நூலகத்தை நல்லமுறையில் பயன்படுத்துவது ஒவ்வொரு மனிதனின் கடைமையாகும். நூல் என்ற சொல் பல வடிவம் பெறுகின்றன. கல்வியினுடைய அடையாளத்திலும் வளைந்து போன பொருளை நேராக்குவதற்கும் பிரிந்து போனபொருளை ஒன்றாக்குவதற்கும் இச் சொல் பயன்படுகின்றது. மனிதனுடைய வாழ்வை சீர்செய்ய நம்மவர் நமக்கு நூல் மூலமாக பல அறிவுக்கருத்துக்களை தந்துள்ளனர். இதனை ஒவ்வொரு மனிதனும் பயன்படுத்தி மனித வாழ்வை மேம்படுத்துவோமாக. இந் நூல் நிலையத்தை நமக்கு தந்து உள்ள சனசமூக அன்புள்ளங்களைப் பாராட்டுகின்றோம். மக்கள் எல்லாம் இந்நூல் நிலையத்தை சிறப்பாகப் பயன்படுத்த இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இரண்டாம் குருமஹா சந்நிதானம்.
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

## பசுப்புண்ணியம் சிறக்கவாழ்த்துகின்றோம்

மனிதர்களாகப் பிறப்பது அரிது அவ்வாறு மனிதராகப் பிறந்தாலும் தர்மம் செய்வது அரிது. அறவழியில் பொருள் சேர்த்து தர்மம் செய்யவேண்டும். தர்மத்தில் பதி புண்ணியம், பசு புண்ணியம் என இருவகை உண்டு. பதி புண்ணியம் என்பது இறைவனுக்காகக் கோயில் கட்டுவது, கும்பாபிஷேகம் செய்வது போன்ற திருப்பணிகளாகும். பசு புண்ணியம் என்பது ஆன்மாக்களுக்கு அதாவது மக்களுக்கு செய்கின்ற தர்மங்களைக் குறிக்கும். மக்களுக்கு வேண்டிய அன்னதானங்கள், தர்மசாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், நூல்நிலையங்கள் போன்றவற்றை அமைப்பதாகும். செல்வத்துள் சிறந்த செல்வமாகிய கல்விச்செல்வத்தைப் பெற நூல்நிலையம் இன்றியமையாதது. மாணவர்கள் கல்லூரிகள் பாடசாலைகளில் கற்கும் கல்வி அவர்களை ஒரு நெறிப்படுத்துகின்றன. ஆனால் நூலகங்களே அவர்களுக்குப் பரந்த கல்வியினை புகட்டுகின்றது. இந்நூலகம் நவீனமுறையில் கட்டப் பெற்று பலலட்சம் ருபாய் பெறுமதியான நூல்களையும், மாணவர்களுக்குத் தேவையான கணனிகளையும் கொண்டுள்ளது. இதனை ஆக்குவதற்கு வெளிநாடுகளில் பணிபுரியும் எம்மூர் இளைஞர்கள் பதி புண்ணியமாகிய ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாருக்கு சரியைத் தொண்டினையும் பசு புண்ணியமாகிய இந் நூலகத்தை பெரு முயற்சியாலும், அயராத உழைப்பாலும் உருவாக்கியுள்ளார்கள். இவ்வாறு இந்நூலகத்தை உருவாக்கிய எல்லோரும் பலவளங்களும் பெற்று பல்லாண்டு வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக்குருக்கள்**
பிரதம குரு
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்.

மனித வாழ்வில் சமய, கலை, கலாச்சார, கல்வி வளத்தை மேம்படுத்துபவை முறையே கோயில்கள்,(ஆலயங்கள்) கலாலயங்கள் கூட்டுறவு.வித்தியாலயங்கள் (பாடசாலைகள்) எனலாம் கோயில்களும் வேதாகம சிரேட்டர்கள் பாவலர்கள்,பண்டிதர்கள்,இசைவாணர்கள் நிரம்பிய இணுவையம்பதியில் பல பாடாசாலைகளும் உள்ளன.

இத்தகு சிறப்புப்பெற்ற இணுவில் நகரில் புகழ்பூத்த ஆனைமுகன், ஆறுமுகன் ஆலயங்களுக்கு நடுவில், ஊர் நடுவில் நீர்த்தாகம் தீர்க்கும் நன்னீர் ஊறுணிபோல் அறிவத்தாகத்தை தீர்க்கும் பொதுநூலகம் அமைவது எமக்கெல்லாம் மிகுந்த மகிழ்வைத் தருகின்றது.

சேவை மனம் கொண்ட இணுவை மக்கள் எடுக்கும் இப் புண்ணிய மிகு கைங்கரியம் பூராணத்துவத்தையடைய அனைத்து அறிவு ஜீவிகளும் அர்ப்பணிப்புடன் பங்களிபு செய்வதன் மூலம் இதனை அறிவாலயமாக மாற்ற வேண்டும் வரலாறு,விஞ்ஞானம் கலை என எல்லா வகை நூல்களும் களஞ்சியப்படுத்தப்பட்ட நூலகமாக அமைக்கப்படவேண்டும்.

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்பதற்கமைய எமது எதிர்கால சிறுவர்களும்இதனை முற்றுமுழுமையாக பயன்படுத்தி பெருமையுற வேண்டும்.இவையெல்லாம் சிறப்பாக கைகூடிவர தன் திருக்கையில் ஞானவேல் தாங்கிய இணுவில்கந்தன் கருணை புரிய வேண்டுமென பிரார்த்தித்து ஆசிகள் வழங்குகிறோம்.

ந.உருத்திரமூர்த்திக் குருக்கள்.
பிரதமகுரு
இணுவில் கந்தசுவாமி கோயில்.
இணுவில்,
யாழ்ப்பாணம்.
31.03.2002

## செயலாளரின் உள்ளத்திலிருந்து ........

இணுவையம்பதியில் காலத்திற்குக்காலம் ஞானிகளும், சித்தர்களும் தோன்றி தமிழொடு சைவம் வளர்த்து பெருமை தேடினர். மேலும் அணிசெய்வனவாக இணுவில் பொது நூலகம் விளங்குகின்றது.

நூலகமானது பல்வேறு பரிணாமங்களில் நிறைவுபெற்று திறப்புவிழா நடைபெற்றமையையிட்டு ஆழ்ந்த உள்ளக்களிப்பில் உவகை அடைகின்றேன்

காலத்தின் தேவையுணர்ந்து பல்வேறு வளர்ச்சிநிலையுடன் கூடியதான அமைவாக அமைந்துள்ளமை சிறப்பான அம்சமாகும். மாணவரிடையே வாசிப்புப்பழக்கம் அருகி வரும் இக்காலகட்டத்தில் வாசிப்புப்பழக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் கற்பதற்குரிய சூழலை ஏற்படுத்தி உள்ளது எனலாம். தற்போதைய கல்வி முறை மாற்றங்களினால் மாணவர்கள் பல் வேறு நூல்களையும் அறிவுத்தேடலாகக்கொள்ளும் இவ் வேளையில் பாடசாலை மாணவர்கள்,பல்கலைக்கழகமாணவர்கள், ஆய்வு கற்கை நெறிகளைமேற்கொள்ளும் மாணவர்களுக்கு இப் பொதுநூல்நிலையம் பெரிதும் பயனுடையதாக அமையும் என்பதுடன் இந் நூலகத்தின் செயற்பாடுகள் காலத்தின் செயற்பாடுகள் உணர்ந்து பல்வேறு வளர்ச்சி நிலைகளுக்கு இட்டுச்செல்லவேண்டும் என எல்லாம்வல்ல இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

க.பார்த்தீபன்
செயலாளர்
இணுவில் பொதுநூலகம்

## நூலகச் சேவை சிறக்க வாழ்த்துகின்றேன்

இந்த நாட்டின் மகத்தான சொத்து கல்வியேயாகும். இந்தக் கல்வி யறிவை வளர்க்கும் முதன்மையான இடமாக விளங்குவது நூல் நிலையமேயாகும். இந்த வகையில் இன்று நூலகங்கள் அரசாங்கத்தாலும், கல்வி நிறுவனங்களாலும், பொது அமைப்புக்களாலும் நிறுவப்பட்டு வருகின்றமை கண்கூடு. இதே வரிசையில் இணுவில் கிராமத்திலும் பொது நூலகம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டு இருப்பது வரவேற்க்கத்தக்க நிகழ்வாகும். திரு.க. தேவராஜா அவர்களினால் திறக்கப்பட்டு இருப்பது குறித்தும் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

மனிதனாக பிறந்தவனுக்கு எத்தனையோ பாக்கியம் உண்டு. அதில் மேலான பாக்கியம் பிறருக்கு சேவை செய்வதாகும். சமயவாழ்வு என்பது மற்றவர்களுக்கு நன்மை செய்து தான் நலனடைதலாகும். இவ்வாழ்வுக்கு அமைய நூலகப்பணி அமைவது வரவேற்கத்தக்க விடயமாகும் இந்நூலகப்பணியில் ஈடுபட்ட அனைத்துப் பெருமக்களையும் வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன். இந்நூலகத்தினால் பல்வேறுபட்ட தரப்பினரும் பயன் அடைந்து மேன்மையடைய திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை

## வாழ்த்துரை

பொன் பெருகு வளம் பொங்கித் தெய்வ திருத்தலம் பொங்கி
புனித நெறி அறிஞர் பொங்கி
பொறியாளர் இசையாளர் மறையாளர் வைதீக
புராண இதி காச சீலர்
இன்பமிக உயிர்காக்கும் வைத்தியத் திறலாளர்
ஏராளர் முத்தமிழ்த்தேன்
இனித்தகவி வல்லாளர் நாடகக் கலையாளர்
இதய வெளி யோக முனிவர்
தன்பெரும் புகழாகத் தாங்கி மிளிர் இணுவிலூர்ச்
சன்மார்க்க மக்கள் தந்த
தக்கசன சமூகநிலை யமும் பொது நூலகமும்
சர்வகலைப் பழங்கள் சொரியும்
அன்புமலர்க் கற்பகம் போன்று தமிழ் மக்களுயர்
ஆட்சியும் சுக வாழ்க்கையும்
அறிவொளிக் காட்சியும் நல்கி ஓங் காரனின்
அருள் பொங்கி வாழி வாழி!!

நாகேஸ்வரம்
அளவெட்டி

அன்பன்
**கவியோகி**
**அருட்கவி. சீ. விநாசித்தம்பி** (M.A)

## ஆசியுரை

இணுவில்த் திருவூரில் வரலாற்றுத் திருக்கோயிலாக விளங்குவது, அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில். இத்திருக்கோயில் முன்றலில் எமதருமை இளைய சகோதரர்கள் ஒன்றுகூடி நூலகம், கணணிக்கல்விக் கூடம், சிறுவர் பாடசாலை, உருவாக்கியிருப்பது பெருமை தருகின்றது. "நல்லன எல்லம் நன்றே உருவாக", மனதில் தூய எண்ணம் கொண்டு உழைக்கும் இளைய சமுதாயம் ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக வேண்டும். ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் திருத்தொண்டுப் பணியில் அயராது உழைக்கும் இளைஞர்கள் அறிவுசார் பணியில் ஒன்றிணைந்து பெரும்பணியை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இவர்களின் இப்பணியை அடுத்த சந்ததியும் தொடரக்கூடிய வகையில் செயற்திட்டங்களை உருவாக்கி ஆற்றுப்படுத்த வேண்டிய கடமை இன்றைய உறுப்பினர்களின் பிரதான கடமையாகும். அறிவுசார் நிலையமாக உருவாகியிருக்கும் இளைஞர்களின் அறிவுச்சாலை அறநெறியில் இளையவர்களை பயிற்றும் தர்மகூடமாக விரிவடையவேண்டும். என்று வாழ்த்தி, இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவவரையும் பாராட்டி இறையருளை வேண்டி ஆசிர்வதித்து வாழ்த்தி அமைகின்றேன்.

பாலாவி மருதனார்மடம்,
இணுவில்
செற்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்.

திறப்பு விழா நிகழ்வுகள்









திறப்பு விழா சிறக்க வாழ்த்துகின்றோம்

# K.R.SIVALOGANATHAN & CO


No. 96, (6) STANLEY ROAD, JAFFNA
K.R.S T.P: 021-3347

*Dealers in:*
*Rice mill Machinery, Engines, Pumps, Motors, Generators, Tools, Etc.*




சு.இ.சிவலோகநாதன் அன் கோ.
இல. 96 (6), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## மலர் சிறக்க வாழ்த்துக்கள்



[redacted]

நவநாகரிக புடைவைத் தினிசுகளையும்
இன்றைய ஆடவர் ,நங்கையர் ரசனைக்கேற்ப
உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

*இல.77 பெரிய கடை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மலர் சிறக்க வாழ்த்துக்கள்.

# கணேஷன் ஜீவல்லர்




நவநாகரிக தங்க உலகில்
காலத்துக்கேற்ற தேவையை நிறைவு செய்யும்
ஒரே ஸ்தாபனம்.

**கே.கே.எஸ் வீதி,**
**கோண்டாவில்**



# பெஷன் ஹவுஸ்

இல.203(65) கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்



- எம்மிடம் அலுமினியம்,
  எவர் சில்வர் பாத்திரங்கள்,
- அழகு சாதனப்பொருட்கள்
- சூட்கேஸ் வகைகள்,
  சிறுவர் சைக்கிள்கள்,
- விளையாட்டுப்பொருட்கள்,
  அன்பளிப்புப் பொருட்கள்,
- நாகரிகப் பொருட்கள்,



- யாவும் நியாயமான விலையில்
  பெற்றுக்கொள்ள
  யாழ்நகரில் புகழ் பெற்ற ஸ்தாபனம்.

# FASHION HOUSE

NO,203 (65) K.K.S ROAD JAFFNA
Phone.021 2197

உங்கள் திருப்தியே  எங்கள் வளர்ச்சி



சிறப்பு விழா சிறப்பு மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்.



## திகழ் கல்வி நிறுவனம்

K.K.S வீதி. இணுவில்

A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு

GAQ, B.A PART I, II பரீட்சை.

வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள்

## NEWTRON

DEGREE CENTER

342, STANLY ROAD, JAFFNA

வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள்

GAQ, B.A. PART i, ii யாழ் பேரூதனை.


திறப்பு விழா சிறப்பு மலர் சிறக்க நல்வாழ்த்துக்கள்

Sangar

# சங்கர் றக்கோடிங் ஸ்பொட்

# SANGAR RECORDING SPOT

- சகலவிதமான ஓடியோ,வீடியோ,கொம்பக்டிஸ்க் மூலம்
- பழைய புதிய பாடல்களும் மற்றும் வீடியோ கசற்றுக்களும்
- சிறந்த முறையில் குறைந்த செலவில் பதிவு செய்து
- தருபவர்கள் உங்கள் றக்கோடிங் ஸ்பொட்



"கமலாம்பிகை பவனம்"
இணுவில் மேற்கு

கிளை: நீர்வேலி தெற்கு நீர்வேலி

திறப்புவிழா சிறக்க நல்வாழ்த்துக்கள்!!

# கரன் தொலைத் தொடர்பு நிலையம்

இரவு பகல் சேவை

இணுவில் மானிப்பாய் வீதி.
இணுவில் தெற்கு.

local.070.212635
idd.0094.70.212635




அழகு சாதனப்பொருட்கள் அன்பளிப்பு பொருட்கள்
அத்தனையும் ஓரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**karan fancy**

மக்கள் வங்கியடி,
இல.01
நவீன சந்தை சுன்னாகம்.

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்



உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான வைபவங்களுக்கு மகிழ்வூட்டும் குளிர்பான வகைகளை வழங்கிட.....

# வெஸ்கோ கிறீம் ஹவுஸ்

ஸ்ரீபராராஜ சேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மானிப்பாய் வீதி
இணுவில் தெற்கு

திறப்புவிழாசிறப்பு மலர்சிறக்க வாழ்த்துகின்றோம்

# சாந்தி புடவை அகம்



- சோளிகீற்
- சேட்டிங்
- ஸ்கேட்
- பிளவ்ஸ்
- கவுண்
- சில்வர்
- இந்தியன்சாறி
- பேபிசூட்
- மற்றும்




157,158
நவீனசந்தை (மின்சாரநிலையவீதி)
யாழ்ப்பாணம், தொ.பே.021.2045

கிளைநிறுவனம்:
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு,
தொ.பே 070.212738.

மலர்சிறக்க வாழ்த்துகின்றோம்..




# இணுவை ராகவர்த்தனா



# இசைக்குழு

பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மானிப்பாய்வீதி,
இணுவில் தெற்கு.

## இணுவில் பொதுநூலகம் எமது மண்ணிற்கு எடுத்க்காட்டாக விளங்க வாழ்த்துகின்றேன்

மக்களின் அறிவுக்கண்ணாக விளங்கும் நூல் நிலையமொன்று எமது கிராமத்தில் உருவாகுவது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இணுவில் பொது நூல் நிலையமாக கடந்த ஏழு தசாப்தங்களுக்கு முன்பே உருவாக்கப்பட்டிருந்தாலும், அது தனது முழுக்கிளையையும் பரப்பிய பெருவிருட்சமாக மலர்ந்துநிற்பதையிட்டு எமது மக்கள் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியாது "தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தருக்கு கற்றணைத் தூறும் அறிவு" என்ற பொய்யா மொழிப் புலவனின் கூற்றுக்கு இணங்க மக்களின் அறிவுக் கடல் பெருகிட இணுவில் பொது நூல் நிலையம் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

இணுவில் பொதுநூல் நிலையத்தை உருவாக்கிய இளைஞர்கள் இன்று உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழ்கின்றனர். அவர்களின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடே இப் பொது நூல் நிலையத்தின் தோற்றமாகும். இங்கிலாந்து, சுவிஸ், கனடா, போன்ற மேலத்தேய நாடுகளில் பரந்துவாழும் இணுவில் வாழ் இளைஞர்களின் அயராத உழைப்பினால் எமது கிராமத்தற்கு ஒரு வரப்பிரசாதமாக இந் நூல் நிலையம் அமைந்துள்ளது. இப் பிரதேசத்தின் இளைஞர்களின். முயற்சியால் இப்பொது நூல்நிலையத்தின் வளர்ச்சியானது எதிர் காலத்தில் வியக்கத்தக்கதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இணுவில் பொது நூல் நிலையத்தின் தொழிற்பாடுகள் பாராட்டப்பட்டவையாக இருப்பது மட்டுமன்றி காலத்தின் தேவையை பூர்த்தி செய்யக்கூடியனவாகவும் இருக்கும். என்பதில் சந்தேகமில்லை. நூல் நிலையம், வாசிகசாலை, கணணிப்பயிற்சி, முன்பள்ளி, கருத்தரங்குகள், உள்ளகவிளையாட்டுக்கள், சிறுவர்பூங்கா, தண்ணீர்பந்தல், எனப் பல்வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டதாக இணுவில் பொதுநூலகம் மிளிருகின்றது. பல்வேறுபட்ட தேவைகள் கொண்டவர்களும் இப் பொதுநூல் நிலையத்தினூடாக திருப்தி காணமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

இணுவில் பொதுநூலகம் நிர்வாக ஆளுமை கொண்ட இளைஞர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதால் அதன் வளர்ச்சியை எவரும் எண்ணிப்பார்க்கத் தேவையில்லை. இத்தகைய பொது நூலகம் சிறப்பாக இயங்கி, இணுவில் கிராமத்தின் ஒரு மயிற்க்கல்லாக அமைய வேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுவதுடன் இந்நூல் நிலையம் இப்பிரதேசத்திலும், இலங்கையிலும், உலகத்திலும் இயங்கி வரும் பொது நூலகங்களுக்கு எடுத்துக்காட்டாக இயங்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி

க. தேவராஜா
தலைவர்
வணிகத்துறை
யாழ்பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

ஆண்டவன் கருணையினாலே இணுவில் பொது நூலகம் இன்று புதுப்பொலிவு பெற்றிருக்கின்றது. இணுவையிலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் இதுவரை நிலவிவந்த பெரிய ஒரு குறை இதன் மூலம் நீங்கி இருக்கின்றது. பல இன்னல்கள் மத்தியிலும் அதன் சேவை விஸ்தரிக்கப்பட்டு இருப்பதையிட்டு நாங்கள் அனைவருமே பெருமைப்பட வேண்டும். இது எமது மக்களின் கல்வியிலும், சிந்தனையிலும், மேலும் ஒரு பரிமாணத்தை, ஆரோக்கியமான ஒரு இலக்கை எட்டமுடியம் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்கமுடியாது. இந்த நூலகத்தின் வளர்ச்சிக்கும், அதன் சேவைகளுக்கும் இணுவில் பொது நூலகத்தின் கொழும்புக் கிளை தோளோடு தோள் நின்று மேலும் வலிமை சேர்க்கும் என்று நாங்கள் உறுதி கூறுகின்றோம்.

எமது எந்த திட்டத்திற்கும் சிந்தனைதான் சரியான அஸ்திவாரம் சிந்தனை தைரியத்தை தூண்டுகின்றது. செயலுக்கும் அது தான் பூர்வாங்கம். சிந்தனை அற்ற செயல் பயன் தருவதில்லை. ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கும் காரணம் அவனது எண்ணங்களும், சிந்தனையும்தான். நல்ல எண்ணங்களை நமக்குள் எப்படிக் கொண்டு வர முடியும்? நிட்சயமாக வாசிப்பதால்தான். நிறைய நிறைய வாசிக்க வேண்டும், நிறைய சிந்திக்க வேண்டும். எங்களைப்பற்றி, எங்கள் கல்வியைப் பற்றி, எங்கள் தொழிலைப்பற்றி, எங்கள் வாழ்கையைப்பற்றி, எங்கள் மக்களைப்பற்றி, தன்னுடைய இனத்தைப் பற்றித்தானே சிந்திக்காத எந்த இனமும் உருப்பட்டதாக உலகவரலாறு கிடையாது. எங்கள் தேவைகளையும், சமுதாயத்தின் தேவைகளையும் நாம் சுயமாகவே நிவர்த்திசெய்து கொள்ள வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். பூரணம் பெற்ற ஒவ்வொரு மனிதனும் எங்கள் சமுதாயத்தின் ஒவ்வொரு தூண்கள், எங்கள் தேவைகளும் அதுதான். அந்த தேவைகளைப் பூர்த்திசெய்யும் பாரிய பொறுப்பும் எங்கள் கொழும்புக்கிளை மீது சுமத்தப்பட்டு இருக்கின்றது. கொழும்புக்கிளை இந்தத் தேவைகளை எந்த எந்த வழிகளில் முன்னெடுக்க போகின்றது என்பதில் நாங்கள் மிகவும் தெளிவோடும், உறுதியோடும் இருக்கின்றோம்.

இணுவில் பொதுநூலகத்தின் கொழும்புக்கிளையை நாங்கள் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி வெள்ளவத்தையில் திரு.கருணானந்தம் அவர்களின் இல்லத்தில் சிறப்பாக ஆரம்பித்தோம். நாங்கள் யாருடைய வேண்டுதலும் இல்லாமல் சுயமாகவே இந்தக்கிளையை ஆரம்பித்தது இதன் சிறப்பம்சமாகும். கொழும்பு வாழ் பெரியவர்களினதும், இளைஞர்களினதும் பூரணஆதரவு எங்களுக்கு கிடைத்தது. இங்குள்ள பெரியவர்களெல்லாம் உரிய நேரத்தில் சரியாக எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தை பெரிதும் பாராட்டினார்கள். என்றைக்கும் எங்கள் ஆதரவு உண்டு என வாழ்த்தினார்கள். எத்தகைய உதவிகளையும் செய்வதற்கு முன்வந்தார்கள். கொடுப்பதற்கு பொருள் தேவையில்லை மனம் இருந்தாலே போதும் இந்த முயற்சி சிறுபிள்ளை வேளாண்மை ஆகிவிடக்கூடாது வீடுவந்து சேரவேண்டும் என்பதால் இதற்கான நிர்வாகக்குழுவை இரண்டு விதமாக அமைத்துக் கொண்டோம். இங்குள்ள கல்விமான்கள் தனவான்கள் கருனையுள்ளம் கொண்ட பெரியவர்களை அமைப்பாளராகவும், போசகராகவும், ஆலோசகராகவும் கொண்டும் இளைஞர்களை செயற்குழுவாகக் கொண்டும் இந்தக் கொழும்புக்கிளையின் நிர்வாகம் அமைந்திருக்கும். எங்கள் இந்தக் கொழும்புக்கிளை இரண்டு விதமான நோக்கங்களைக் கொண்டது. அதில் முதலாவதும் முக்கியமானதுமான நோக்கம் இணுவில் பொது நூலகத்தின் தேவைகளைப்பூர்த்தி செய்வது. இரண்டாவது கொழும்பு வாழ் எம்மவர்களை ஒன்றிணைப்பது. இந்த நோக்கங்களை வெகு விரைவில் எட்டிவிடுவதோடு இந்தக்கிளை விரிவுபடுத்தப்பட்டு அதன் செயற்திட்டங்களும் பயன் பெறத்தக்க வகையில் அமைந்திருக்கும். என்பதை திட்டவட்டமாக கூறிக் கொள்கின்றோம்.

பொதுவாகவே பல விதமான இன்னல்கள் மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் பகுதி மக்களுக்கு சாதாரன ஒரு செய்திப் பத்திரிகையைக்கூட பணம் கொடுத்து வாங்குவதற்கு இயலாத நிலமை. தவிர கொழும்பில் இருந்தும் சில தமிழ் வாரப்பத்திரிகைகள்



இணுவில் பொது நூலக கொழும்புக் கிளை உறுப்பினர்கள்

நூலக பழைய தோற்றம்



நூலக அங்கத்தவர்கள் இறை பணியில்



பரிசளிப்பு விழா - திருமறைக் கழகம்



லண்டன் கிளை அமைப்பாளர் அங்கத்தவர் மத்தியில் உரை



அங்கு போய்க் கொண்டு தான் இருக்கின்றன. அதிலும் தொழில்சார் கல்வி பற்றி தெளிவின்மையும், சரியான வழிகாட்டி இல்லாமலும் அங்குள்ள உயர் கல்வி மாணவர்கள் பெரிதும் பின் தங்கி இருக்கின்றார்கள். உதாரணமாக (**SUNDAY OBSERVER**) பத்திரிகைக்கும் எமது மக்களுக்குமான தூரம் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தூரத்தை விடவும் அதிகம் ஆகும். சிறுவயதில் நாங்கள் “அம்புலிமாமா” என்ற சிறுவர் நூலை நிறையவே படிப்போம் ஆனால் இப்போது அங்குள்ள சிறுவர்களை அம்புலிமாமா என்று கேட்டால் வானத்தைத்தான் பார்க்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும் முன்னரெல்லாம் கல்கியின் பொன்னியின் செல்வனிலிருந்து செங்கைஆழியனின் கங்கைக்கரையோரம் வரையில் பலவிதமான நாவல்களையும், சிறுகதைகளையெல்லாம் எம் முன்னோர்கள் நிறையவே வாசித்து இருக்கின்றார்கள். ஆனால் இப்போது உள்ளவர்களுக்கு அப்படி வாசிப்புப்பழக்கம் இல்லை. அதற்கு இதைப்போல் ஒரு நல்லநூல் நிலையம் இல்லாமையே ஒரு காரணம் ஆகும். சாதாரணமாக சமகால நிகழ்வுகளை தாங்கி வரும் நூல்கள்கூட அங்கு சரியாகக் கிடைப்பதிலை. அவை வடபகுதிக்கு போய்ச் சேராமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. உதாரணமாக தமிழ்நாட்டில் வெளியிடப்படும் ஆனந்தவிகடன், குமுதம், கல்கி, கல்க்கண்டு, கணையாழி, போன்ற நூல்களையும், கொழும்பில் வெளியிடப்படும் மல்லிகை, கெம்பியூட்டர்ருடே, பொருளியல் நோக்கு போன்ற நூல்களையும் கொழும்புக் கிளையாகிய எம்மால் இலகுவாக பெற்றுத்தர முடியும் என்று நம்புகின்றோம். அது தவிர நாங்கள் வாழ்ந்து கொண்டு இருப்பது புத்தாயிரம் நூற்றாண்டில். புதிய தொழில் நுட்பம் மேலும்மேலும் விரிபுபடுத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. அதற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் நாங்களும் கொம்பியூட்டர், ஈமெயில், இன்ரநெற் போன்ற துறைகளைப்பற்றி சிறிது அறிந்து கொள்வதோடு, அதில் பயிற்சியும் பெற்றுக் கொள்ளவேண்டி இருக்கின்றது. இதன் நிமிர்த்தம் நாங்கள் (e-Library) ஒன்றையும் இணையத்தளத்திலும் நிறுவியுள்ளோம். இன்னும் சில வருடங்களில் உலகமே இணையத்தளம் ஊடாக தனது தொடர்புகளையும் வாசிப்புக்களையும், மேற்க்கொள்ளப்போகின்றது. அதற்கு முன்னேற்பாடாக இந்த (www.inuvillibrary.com) என்ற இணையத்தள வாசிகசாலையையும் நிறுவியுள்ளோம். மேலும்மேலும் ஏற்படுக்கின்ற புதிய சூழ்நிலை, தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் ஏற்றவகையில் எங்கள் கொழும்புக்கிளை அதன் செயற்பாடுகளையும் விரிவுபடுத்திக்கொள்ளும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இருக்கமுடியாது.

நாங்கள் தொழில் நிமித்தமும், கல்வியின் நிமித்தமும் ஏதோ ஒரு விதத்தில் எங்கள் சொந்த ஊரிலே வாழமுடியால் போனது, எங்கள் துரதிஷ்டமே! எங்கள் அங்கலாய்ப்பு எல்லாம் எங்கள் கிராமங்கள் மறுமலர்ச்சி பெறவேண்டும்! எங்கள் மண்ணின் மைந்தர்கள் மாண்பு பெறவேண்டும்! நாங்கள் பிறந்த மண்ணை நேசிப்பவர்கள் உயிரிலும் மேலாக நேசிப்பவர்கள் எங்கள் ஒவ்வொரு நிமிட சிந்தையையும் எங்கள் ஊரின்மீது தான். ஊரின் வளர்ச்சி மீது தான். இணுவில் பொது நூலகத்தின் சேவைகள் மேன்மேலும் தொடர, அதன் சிறப்பு அகிலம் எல்லாம் பரவ வேண்டும்.என்பதே இணுவில் பொது நூலகத்தின் கொழும்புக்கிளையின் இலட்சியமாகும்.

“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

நன்றி

தலைவர்
இணுவில் பொது நூலக கொழும்புக்கிளை

# நிரந்தரம் நீ பெற்றாய்

ஆண்டுகள் பல கடந்தும் நாட்டு நிலமையில்
போகும் இடம் தெரியாது திக்கற்ற நிலையில்
நின்று சேவைபுரியாது நீதவித்த காலங்களில்
உன்னை உருவாக்கிய ஆரம்ப கர்த்தாக்களின்
மனங்களில் தோன்றிய வேதனையும் ஏக்கமும்
சொல்ல முடியாது. ஆனால் பிரராஜசேகரனின் அருள்
கைகூடிய வேளையில் இலண்டனில், கனடா
சுவிஸ், டென்மார்க் திருவாளர்கள் மனம் தளராத
சேவையில் இன்று நிரந்தரமான இடத்தில்
ஆனைமுகத்தானின் அருபார்வையில்
பொது நூலகமும் சனசமூக நிலையமுமாய் நீ
திகழப்போகின்றாய். நிரந்தரம்
நீ பெற்றாய்!

இன்று நடைபெறும் மலர் வெளியீட்டு விழாவுடன் சிறப்பும் மேன்மையும் பெற்று எம் சமூகத்திற்கு தன் சேவைகளைப் பல வழிகளில் ஆற்றவேண்டும் என்று வாழ்த்துவதுடன் இம் மலரின் ஊடாக வாழ்த்துக்களையும், பாரட்டுக்களையும் தெரிவிப்பதற்கு இடம் தந்த இம் மலர்க்குழுவுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் பல.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

அன்புடன்
ஆ. க. விவேகானந்தன்
தலைவர்
இணுவில் மக்கள் ஐக்கிய ஒன்றியம்
பெரிய பிரித்தானியா

## இணுவில் பொது நூலக செயற்பாடுகள் . ஒரு நோக்கு

வாழ்வின் அடிப்படையாக இருப்பது ஆத்மீகம் அது உள்த்திற்கு மன மகிழ்ச்சியையும் உலக வாழ்விற்கு அனுபவத்தையும் அளிக்கிறது. அந்த வகையில் இந் நூலகம் நம் முன்னோரின் முயற்சியால் ஆலயத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டு, காலத்திற்கு காலம் தன் செயற்பாடுகளை பன்முகப்படுத்தி இன்று இணுவில் பொது நூலகமாக காட்சி அளிக்கின்றது'

இணுவில் பொது நூலகம் பல செயற்பாடுகளை கொண்டுள்ளது குறிப்பாக.

வாசிப்புபகுதி,நூல்இரவல்கொடுக்கம்பகுதி, சிறுவர்பாடசாலை, இலக்கியத்துறை, கலை கலாசாரப்பிரிவு, கணனித்துறை, விளையாட்டுத்துறை, இலவசகருத்தரங்குகள், சிரமதானம், ஏனையசமூகசேவைகள்.

வாசிப்புத்துறையில் எமது நிலையம் பல அபிவிருத்திகளை செய்யஇருக்கின்றது அந்த வகையில் யாழ் மத்தியகல்லூரிமுறைசாராப்பிரிவும் யாழ்பல்கலைக்கழகமும் இணைந்து செயற்ப்படுத்தும் நூலக விஞ்ஞான பிரிவுக்கு எமது பிரிவில் வாழும் இளைஞர்களை பயிற்சிக்கு அனுப்பிவைத்துள்ளது மேலும் உள்ளூர் பத்திரிகைகள் மட்டுமன்றி கொழும்பு பத்திரிகைகள் பல்வேறு சஞ்சிகைகளை வாசகர்களின் விருப்பிற்கேற்ப தெரிந்து வாசிக்கக்கூடிய பரந்த ஒரு நிறைவான சேவையை இப் பகுதி வழங்கும் இப் பிரிவு சிறப்பாக இயங்குவதற்க்கு கொழும்புக்கிளை முன் வந்துள்ளது.

நூல் இரவல் வழங்கும் பகுதி

இவ் வசதியை பொது மக்கள் கணிசமாக பயன்படுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது வாசகர்களின் தொகையை அதிகரிப்பதற்கும் அவர்களின் திருப்திக்கும்மான நூல்களை ஒழுங்கு படுத்தியுள்ளோம் நல்லபல நூல்களை தங்களிடம் வைத்திருப்பவர்கள் அவற்றை நூலகத்திற்கு வழங்குவதன் மூலம் அவற்றால் அடையும் பயன்பாட்டை அதிகரிப்பதுடன் ஆத்மதிருப்தியையும் அடையலாம்.

நவீனமயமாக்கப்பட்ட சிறுவர் பாடசாலை

பாடசாலை கல்வியின் முக்கியத்துவம் அனைவராலும் உணரப்பட்ட இக் காலத்தில் பாலர்பாடசாலை சமூகத்தில் அவசியமாகின்றது எமது நிலையம் சமூகத்தின் தேவையறிந்து காலத்துக்கு பொருத்துமான பாடவிதானத்தை அமைத்து மிகவும் சிறந்த முறையில் பாடசாலை முன்கல்வியை சிறார்களுக்கு மகிழ்விக்கும் வகையில் நடாத்திவருகின்றது. இது தொடர்பாக வருடாந்த விளையாட்டுப்போட்டி சிறுவர் தின கலை நிகழ்ச்சிகள் சிறார்களது துடிப்புக்களை நடிப்புக்களாகவும் ஆட்டங்களாகவும் ஆக்கவுள்ளோம்.

கணனிப்பிரிவு

இன்றைய உலகின் வேகத்திற்கேற்ப்ப நாமும் வேகமாக செயல்ப்படவேண்டும் அந்த வகையில் கணனிப்பிரிவை ஆரம்பிக்க வேண்டும் என்பது செயற்குழுவின் அவா. இந்நாட்டின் அவசிய தேவை பலவற்றுக்கெல்லாம் அறைகூவல் வரும் போது அலுக்காது அவாவுடன் ஓடிச்சென்று அரும் பணிகளை நமது உறுப்பினர்கள் ஆற்றியுள்ளனர். இவை அன்னதானம் சிரமதானம் ,இரத்ததானம்,என்று தானங்களாக நீண்டு செல்கின்றது இவ்வாறு சமூக பொருளாதார கலை,பண்பாட்டு வளர்சிக்காக எமது நிலையம் ஆற்றுகின்ற பணிகள் நாட்டின் நல்லாறாக என்றும் சலசலத்து,கலகலத்து ஓடட்டும் அதை நாடி நல் மக்கள் கைநீளட்டும்.

திரு.ஞான.திருக்கேதீஸ்வரன்
யாழ்மத்தியகல்லூரி (ஆசிரியர்)

## அறிவு சார் செயற்பாடு சிறக்க வாழ்த்துகின்றேன்

மண்வளமும், மனவளவும் சிறந்து விளங்கும் இணுவில் கிராமம் கலை, கலாச்சாரங்களுக்குப் பெயர் போனது இக்கிராமத்தில் ஒரு பொதுநூலகம் அமைத்துத் திறக்கப்பட்டுள்ளமை. இங்குள்ள பெரியோர்கள், அறிஞர்களின் அறிவுத்தேடல் முயற்சியாக மலர்கின்றது. “வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான” என்பதற்கு இணங்க அறிவுசார் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு இந்நூலகம் ஓர் வரப்பிரசாதம். ஏனையோரும் இன்றைய தகவல் தொழில் நுட்பவளர்ச்சியின் அடிப்படையில் தமது அறிவு, புலமையை விருத்தியாக்கவும், ஓய்வுஎடுக்கவும், ஓய்வுநேரத்தை பயனுள்ள வழியில் கழிக்கவும் இந்நூலகம் அவர்களுக்குப் பெரிதும் உதவும் எனலாம்.

இணுவில் மக்களை ஒன்றிணைக்கும் நிலையமாக விளங்கும் சனசமூக நிலையத்தில், நூலகம், நவீனதகவல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு அமையவிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

இணுவில் கிராமத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி மேலும் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்நூலகத்தைச் சிறந்த முறையில் அமைத்துத் திறப்பு விழாவை நடத்த அயராது உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

உங்கள் பணி தொடர,சிறக்க என் வாழ்த்துக்கள்.

பேராசிரியர் .பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## இந்நூலகம் பரிதிபோல் பிரகாசிக்க வாழ்த்துகின்றேன்

ஒரு நூலகம் திறக்கப்படுன்றது என்றால் அங்கே அறிவுக் கண் ஒன்று(ம்) திறக்கப்படுகின்றது என்பதும் ஓர் அர்த்தம். இந்த வகையில் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலின் சிறப்பான ஒரு சூழலில் பொது நூலகம் ஒன்று திறக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வியை முதலீடாகக் கொண்ட எங்கள் யாழ்ப்பாண சமூகமானது, குறிப்பாக இன்றைய இளைய சமூகமானது வாசிப்புப் பழக்கம், அறிவுசார் விருத்தி என்பவற்றிலிருந்து விலகி நிற்பது வேதனைக்குரியதே. இன்று பொது அறிவு என்பது ஒரு பாடமாகக் கருதப்படுவது இதற்குஓர் எடுத்துக்காட்டாகும்.

பக்திபூர்வமான, இனிமையான சூழலில் அமைக்கப்பட்டுள்ள இந்நூலகமானது அனைத்துத் தரப்பினரதும் அறிவுத் தேடல்களைத், தேவைகளை நிறைவேற்றும் என நம்புகின்றேன். அத்துடன் அறிவுபூர்வமான ஒரு சமுதாயக் கட்டியெழுப்பலுக்கும், சமூக ஐக்கியத்திற்கும் இந்நூலகம் துணை நிற்கும் என்பது திண்ணம்.

எனவே இந்நூலகக் கட்டியெழுப்பலில் துணை நின்ற ஒவ்வொருவரையும் இந்நாளில் வாழ்த்துவதோடு, இந்நூலகம் ஒரு சூரியனாய்ப் பிரகாசிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

க.சண்முகநாதன்
அரச அதிபர்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியம், நூலகப் பாரம்பரியத்தோடு இணைந்து வளர்ந்த வளமான பின்புலத்தை உள்ளடக்கியதாகும். மனித ஆற்றல்களை வளமும், மீள்கிளர்ப்பும் (REACTIVATION) செய்ய வல்ல ஆற்றல் நூலகங்களுக்கு உண்டு. மனிதர்களிடம் உட்பொதிந்துள்ள பலவீனங்களில் இருந்து (INHERENT WEAKNESS) விடு படவைத்து மாண்புறு மானிடப் பண்புகளை வளர்க்கும் திறன் நூல்களுக்குரிய சிறப்புப் பண்பாகும்.

அறிவைப் பலமாகக் கருதும் நாட்டாரியல் நடைமுறைகளும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களிலே பரவலாகக்காணப்படுகின்றன.

"ஓலை மடக்கிய ஏட்டுப் பொட்டகம்
ஏன்பதினாயிரம் காட்டுக் குஞ்சரம்"

என்பது நாட்டார் வழக்கு.

இவ்வாறாக யாழ்ப்பாணத்து நாட்டார் மரபுகளிலும், தொல் சீர் கல்வி மரபுகளிலும் சிறந்து, விதந்து போற்றப்பட்ட கல்வியையும் நூல்களையும் காப்பரண் செய்து மக்கள் ஆழ்ந்து கற்கும் செயலை வளமுறச் செய்ய இணுவை இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள பொது நூலகக் கட்டமைப்பு இனிதே நலம் பெற்றுச் செழுமை கொள்ள எமது நல்வாழ்த்துக்கள்.

வாழ்க வளர்க இணுவையூர்

சபா.ஜெயராசா
பேராசிரியர்,நுண்கலைப்பீடம்
தலைவர்
இணுவில் திருவூர் ஒன்றியம்

## அகஇருளைநீக்கி புதுஉலகிற்கு வழி காட்ட வாழ்த்துகின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இணுவிற் பதியிலே பொது நூலகத்திறப்பு விழா நடைபெற்றது குறித்து பெருமிதமும் பேருவகை அடைகின்றேன். "வாசிப்பதன் மூலமே மனிதன் பூரணமடைகின்றான்" என்ற வாசகத்துக்கு அமைவாக வளர்ந்து வரும் சமூதாயத்தில் நூலகத்தின் பங்களிப்பு உன்னதமானது. உயிரூட்டம் உடையது. நவீன தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி மூலம் உலகமே சுருங்கி ஒரு கிராமம் போல் எம்மருகிலே வந்து நிற்கின்றது. இந்த நிலையில் இந்நிலையத்தில் கணனிப்பகுதியும் அமைக்கப்படுவதன் மூலம் பொது நூலகம் மேலும் ஒரு படி உயர்ந்து நிற்கின்றது.

காலத்தின் கோலத்தால் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்த ஒரு காலகட்டத்தில் இப்பகுதியில் ஒரு பொது நூலகம் திறப்பது ஒரு முக்கிய நிகழ்வு. அகஇருளை நீக்கி புது உலகிற்கு வழிகாட்டும் கலைக்கோயிலாக திகழ்ந்து பழமையும், புதுமையும் உள்வாங்கும் நிலைக்களமாக இந்நூலகம் விளங்க வேண்டும். பள்ளிச்சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்கு மட்டுமல்லாமல், உயர்கல்வி நிலைய மாணவர்கள், அறிஞர்களின் தேடலுக்கும் உரிய நிலையமாக இந்நூலகம் திகழ வேண்டும்.

இவ்வரும் பெரும் பணியின் நிறைவிற்கு உழைத்த, உழைக்கின்ற இப்பகுதிவாழ் மக்கள் அனைவரும் வரலாற்றுப்பெருமைக்கு உரியவர்கள். அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் உவகையடைகின்றேன்.

வீ. இராசையா
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம்.
மருதனார்மடம்
சுன்னாகம்.

## சமூதாயவாழ்வு சிறக்க வாழ்த்துகின்றேன்

ஒரு சமுதாயவாழ்வு முன்னேற்றமடைய கல்விச்சாலை எவ்வாறு அவசியமாகின்றதோ அதுபோன்றே நூல்நிலையமும் அவசியமானதாகும். ஒரு இனத்தின் கலாசாரபண்பாட்டை வளர்ப்பதற்கு இன்றியமையாத சொத்து நூல்நிலையமாகும். இந்நூலகம் எமது ஆலயத்தின் வலது பக்கத்தில் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டது. அந்நேரத்தில் இளைஞர்களாக இருந்த பலரின் பாராட்டத்தக்க முயற்சியினால் வளர்த்தெடுக்கப்பட்டதுடன், இன்றைய இளைஞர்களுடைய உற்சாகத்தினாலும், விடாமுயற்சியினாலும், வெளிநாடுகளில் இருக்கும் எமது உறவினர்களினாலும் சொந்தமாக கட்டடத்தோடு கூடிய காணி ஒன்று வாங்கப்பட்டு. இந்நூல் நிலையமானது புதியமுறையில் வடிவமைக்கப்பெற்று இருப்பதை எவராலும் பாரட்டாது இருக்கமுடியாது. மேலும் வருங்கால இளைஞர்களும் முன்னையவர்களின் வழிநடத்தலைப்பின்பற்றிப் பாடுபடுவார்கள் என எண்ணுகின்றேன். இந் நேரத்தில் எமது இளைஞர்களுக்கு நான் கூறக்கூடிய கருத்துக்களாக.

"கற்க கசடறக் கற்க"

அத்துடன் இறைவழிபாடும் அவசியம் என எடுத்துக்கூற விரும்புகின்றேன். மேலும் சுவாமி விவேகானந்தர் எடுத்துக்கூறிய பொன்னான கருத்தினையும் முன்வைக்கின்றேன். அதாவது "ஒரு நூல்நிலையத்தை திறந்து வைப்போமானால் ஆயிரம் சிறைச்சாலைகளை மூடியதற்கு ஒப்பாகும்" எனக் கூறி எமது இதயம் கனிந்த வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"முயற்சி திருவினையாக்கும்"

"நன்றி"

வணக்கம் .

ச. முத்துலிங்கம்
முன்னாள் உடுவில் கிராமசபைத்தலைவர்

## எழுத்தாணி

மகாமேகு மலையில் வேதவியாசர் சொல்ல எம்பெருமான் கணபதி மகாபாரதத்தை செவியினால் கேட்டு எழுதுகின்றார் அந்த விநாயகனின் கோயில் சுற்றாடலில் இணுவில் பொதுநூலகம் உதயமானதை இட்டு பெருமை அடைகின்றோம்.

இவ்வாறு உதயமாகும் பொது நூலகத்தில் புத்தகம் இரவல் கொடுப்பதுடன் நின்றுவிடாது பாலர்பாடசாலை, உள்ளகவிளையாட்டரங்கு, கணனிப்பகுதி வாசிக்கும் பகுதி, கலந்துரையாடல் மண்டபம் எமது மக்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்துறை சேவைகளாக விளங்க இந்நூலகம் தாங்கிநிற்கும் பெருமையை எந்நூலகமும் கொண்டிராததை. இணுவில் பொதுநூலகம் கொண்டிருப்பது ஸ்ரீபரராஜசேகரனின் திருவருளேயாகும்.

மற்றும் இந்நூலக நிர்வாகத்தினர் ஸ்ரீ பரராஜசேகரனின் அடியார்களாக இருப்பது மேலும் சிறப்பு (மலையளவே ஆனாலும் கலங்காதிருந்து இந்நூலகத்தை திறம்பட அமைத்ததில் அவர்களுக்கு இணை அவர்களேதான்.

அதேபோல் வெளிநாடுளில் இருந்து ஸ்ரீ பரராஜசேகரனின் அடியார்கள் அனுப்பிய நிதி சிறு துளி பெருவெள்ளமாக வந்ததை கண்ணுற்றேன், கேள்வியுற்றேன். அவர்களுக்கு திருவருள்கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே இந்நூலகம் 2000 ஆண்டு ஆரம்பமாகும் காலப்பகுதியிருந்து பல ஆயிரம் ஆண்டுகாலமாக சேவை ஆற்ற ஸ்ரீ பரராஜசேகரனின் திருவருள் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்நூலகம் ஆனது சர்வதேச வலைப்பின்னலில் இணைக்கப் பட் டுள்ளது. பெருமைக்குரியதாகும்.

உண்மையாகவே இந்த எழுத்தாணியை இரவலாக பெற்றுவளம் பெறுவீர்களாக.

நன்றி

ந.ஸ்ரீமான் (கிராமஅலுவலர்)
இணுவில் தென் மேற்கு
J/188

## கலை, பண்பாடு கலாசாரம் சிறக்க வாழ்த்துகின்றேன்

இணுவில் பொதுநூலக மலர் வெளியீட்டு விழாவையொட்டி வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணத்தின் உயிர் நாடி கல்வியாகும். கல்வியை வளர்ப்பதில் கல்லூரிகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி, தனியார்கல்வி நிறுவனங்கள், நூலகங்கள்,முதலியன அவ்வப்போது தமது ஆற்றலைக்காட்டி நிற்க்கின்றன.

அந்தவகையில் இணுவையம்பதியிலே சைவப் பண்பாட்டு கல்விமரபினையும், பாரம்பரியங்களையும் கலாச்சாரவிழுமியங்களையும் பேணிக் காப்பதிலும், வளர்ப்பதிலும் வாழையடி வாழையாக இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலும் கந்தசுவாமிகோயிலும் இணுவில் இந்துக்கல்லூரி, இணுவில் மத்தியகல்லூரி ஆகியன முன்நின்று உழைத்துவருகின்றன. அவற்றுக்கு மேலும் உறுதுனையாக இணுவில் பொது நூலகம் ஒன்று இணைந்து செயலாற்றவருவது வரவேற்க்கதக்க செயலாகும். சமூகத்தின் தேவையை நன்கு உணர்ந்து நல்லதொரு செயலினை எமது இளைஞர்கள் முன்னின்று உருவாக்கியமை பாராட்டுதலுக்குரியது.

இந்நூலகமானது ஊரின் நடுவே பயனுள்ள பழந்தரும் மரங்களை உருவாக்கியமைக்கு ஒப்பானதாகும். ஒருவன் அறிவுக் கூர்மையுள்ளவனாக பூரணமனிதனாக மாறுவதற்க்கு வளர்வதற்கும் மிகப் பெரிதும் உதவுவது நூல்களே, நூலகங்களே அறிவு அமுதூட்டும் பெரும் அறிவுக்கூடங்கள். மாணவர்களை சிறுவயதிலேயே வாசிப்பதில் ஆர்வமுள்ளவர்களாக்குவது. ஆசிரியர்களின், பெற்றோரின், சமூகத்தின் பெரும் பொறுப்பு, தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை நிலைக்கும் மாணவர்களுக்கு இளமையிலே வாசிக்கும் பழக்கத்தைக் கற்பித்து அதன் பயன்களையும் நன்மைகளையும் சொல்லிக் கொடுப்பது மிகவும் அவசியம். அதுமட்டுமன்றி நல்லறிவு தரும் நூல்களைப் படிப்பதால் உண்டாகும் உச்சமான பெறுபேறுகளையும் சமூகப்பெறுமானங்களையும் நன்கு உணர்த்த வேண்டும்.

இப்போது இங்குள்ள பாடசாலைகளிலே சிறிய அளவிலே நூலகங்கள் இயங்குகின்றன.ஆனால் மாணவர்கள் அவற்றை முழு அளவில் பாவிப்பதில்லை. பயன்படுத்துவதில்லை .வகுப்பறைக்கல்வி மற்றும் "ரீயூட்டறி" படிப்புடன் அவர்களின் நேரம் கரைந்து போகிறது. அதனால் இன்றைய மாணவர்களில் 90சத வீதமானோரும் வாசிப்புப்பழக்கம் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றார்கள்.வாசிப்பதில் ஆர்வமுள்ள சிறுபாலாரிலும் பெரும் பகுதியினர் ஜோக் சஞ்சிகைளையும் ஒவ்வாத உணர்வுகளை வளர்க்கும் கதை,கட்டுரை களையும்வாசிப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.இந்த நிலைமாறவேண்டும் மாற்றப்படவேண்டும் பாடப்புத்தகஅறிவோடு கல்வியைமட்டுப்படுத்தாமல் மேலதிகமாக நல்லவற்றை பயனுள்ளவற்றை வாசிக்கும் பழக்கம் பாடசாலைகளில் கட்டாயமாக்கப்பட வேண்டும். பாடபோதனைக்கு புறம்பாக வாரத்தில் ஐந்து நாட்கள் குறிப்பிட்ட நேரத்திற்க்கு நூலகம் சென்று வாசிக்கும் பயிற்சியினை மேற் கொள்ளவேண்டும் அதாவது நூலக பாவனை கட்டாயமாக்கப்படவேண்டும் இதற்கு அதிபர்கள்,ஆசிரியர்கள்,மட்டுமல்ல குறிப்பாக பெற்றோர்களும் சமூகத்தினருடைய பெரும் பெறுப்பாகும். அதனை ஊக்குவிக்கப்படவேண்டும். ஊர்களிலே நூலகம் உருவாகுவது சாலச்சிறந்தது. கண்டது கற்க பண்டிதன ஆவான். வாசிப்பதால் மனிதன் முழுமையடைகின்றான்.ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்குவது நூலகங்களே ஒவ்வொரு மனிதனும் தமது பாடத்துறையில் விரிந்த அறிவைப் பெறுவதற்க்கு நூலகங்களே உதவுகின்றன. இணுவிலில் அமைந்துள்ள இந் நூலகம் சிறப்பாக இயங்க யாவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் மேலும் இந் நூலகம் தொடர்ந்து பணிகளைச் செய்ய எல்லாம் வல்ல ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் தோன்றாத்துணையாக நின்று அருள்புரிவாராக.

Rgk;

**திரு.செ.குமரநாதன் (அதிபர்)**
**யா.இணுவில் இந்துக்கல்லூரி**

**இணுவில் இளைஞர்களின் உழைப்பில் உருப்பெற்று ஓங்கிநிற்கும் நூலகம் ஒன்றின் நூல்வெளியீட்டு விழாவை முன்னிட்டு வெளிவரும் சஞ்சிகை ஒன்றுக்கு வாழ்த்துச் செய்திஎழுதுவதில் பெரிதும் உவகை அடைகின்றேன்.**

இன்று இனிய கைங்கரியம் ஒன்றை நிறைவேற்றிய களிப்பில் இளைஞர்கள் இருக்கையில் நூலகம் ஒன்றின் தேவை அதன் பாதுகாப்பு பயனுறுதிதன்மை இதன் வழி அதன் வளர்ச்சி என்பன எதிர்காலத்தில் மேன்மேலும் உரம்பெற நினைப்பதே இவர்களுக்கு பொருத்தமான எண்ணமாகும்.ஏனெனில் கடினஉழைப்புக்கள் விழலுக்கிறைத்த நீராகிவிடக்கூடாது இதுவே எல்லோர் உள்ளக்கிடக்கையும் ஆகும். எனவே வளர்ச்சியும் பாதுகாப்பும் அவசியமாகும்.

இளைஞர்களின் இவ் உழைப்பு நூலகத்தோடு மட்டுமன்றி கவின் கலை வளர்ச்சி கருத்தரங்குகள் உள்ளக விளையாட்டுக்கள்,கணனிப்பயன்பாடு போன்ற இன்னோரன்ன காலத்தேவைகளையும் தொட்டுச் செல்லவுள்ளதாக அறிகின்ற போது நிச்சயமாக எதிர்கால சிறார்கள் வளம் பெறவுள்ளனர் என்பதில் ஐயமில்லை காலத்தின் தேவையை உணர்ந்த உழைப்பு வாழும் வளம் பெறும் என்பதில் இருவேறு நிலைகள் கிடையாது.

வெறும் சினிமாவினாலும் உழைப்பில்லாப்பிழைப்பாலும் வளரும் சிறார்கள் நெறிதவறி வாழும் அவலம் இன்று வெகுவேகமாக வளர்கின்றது.இவற்றுக்கு நூலகம் வழிகாட்ட வேண்டும். பெறுமையோடு வாசிப்பவன் பெருமை சேர்ப்பான். ஆளுமை வளர்ப்பான். நூலகத்தின் வழியே நல்ல சந்ததி வளர்ந்து எடுத்துக்காட்டான முதன்மை மனிதர்களை வழி காட்ட வாழ்த்துவது பெருமை தருகின்றது.

இளைஞர்களே நுன்பணி சிறக்கவும் உழைப்பு உரம் பெறவும் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்.
திரு.துரைஎங்கரசு(அதிபர்)
இணுவில் மத்தியகல்லூரி

## இணுவை பொது நூலகம் எம் புதிய தலைமுறையினருக்கு ஒரு வரப்பிரசாதம்

இணுவையம் பதி ஸ்ரீபரராஜசேகரவிநாயகனின் ஆலயச்சூழலில் அமையும் இணுவில் பொது நூலகத்தின் மலர் வெளியீட்டு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதற்கு எனக்கு கிடைத்த வாய்ப்பை பெரிதாக கருதுகின்றேன்.தமிழ் வளர்த்த பெரியோர்கள்,சான்றோர்கள் சைவஆசார சீலர்களான அறிஞர்கள், கலைஞர்கள்,உழைப்பாளிகள் என்று பலதரப்பட்ட திறமைமிக்க மக்களைக் கொண்ட எமது இணையில்லாப்பதியிலே நூல்களை வாசித்து அறிவு சேர்க்கும் வழக்கம் என்றோ ஏற்பட்டதொன்று. வாசித்தல்,விளங்கிக்கொள்ளல் என்பவற்றோடு நான் விளங்கியவறை மற்றவர்களுக்கும் விளக்கும் திறமையும் கைவரப்பெற்ற கல்விமான்கள்,பலர் நூல் அறிவினால் எமது இணுவில் கிராமத்துக்கு அன்று மட்டுமல்ல இன்றும் புகழ் சோர்த்து வருவது கண்கூடு. இந்த வகையிலே வெறுமனே பத்திரிகை,சஞ்சிகைகளை மட்டும் வாசித்து தகவல் பெறும் முறமையோடு நின்று விடாமல் பல துறை சார்ந்த நூல்களையும் எமது இளைய தலைமுறையினர் நிரம்ப வாசித்து அறிவைப் பெருக்கி செழுமை பெற வாய்ப்பு நல்கும் இப் புதிய பொதுநூலக நிர்மாணம் ஆனது எமக்கு நல்லதோர் வரப்பிரசாதமாகும். இக்கைங்கரியத்தை அறிவு வளர்க்கும் பணியை பொது நல உணர்வோடு கிராமவிருத்தி மனப்பாங்கோடு ஆற்றும் அனைத்து உள்ளங்களையும் குறிப்பாக நம்மூர் இளைஞர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். இத் நிகழ்வையொட்டி வெளிவரும் புதிய மலரானது நறுமணம் பரப்பி நல்ல வகையிலே மிளிர பிள்ளையார் துணைவேண்டி என் இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

க.இரவீந்திரன்<br>
கிராமசேவை அலுவலர்<br>
இணுவில் மேற்கு J/191

## நிறைவான அறிவு பெற வாழ்த்துகின்றேன்

மனித வாழ்வு பண்பும் பயனுமுடையதாக அமைய என்றும் குறைவிலா நிறைவான கல்வி கலைகளைப் பெற வேண்டும் இதனைப் பாட்டுக்கொரு புலவன் பாரதி கூறும் போது அறிவினை விருத்திசெய் அகண்டமாக்கு என்னும் கூற்றுக்கிணங்க அறிவினை விருத்தி செய்யும் நிலையில் நூலகங்களின் பங்கு அளப்பரியதாகும். இந்த வகையில் இணுவையம்பதியின் நற்சூழல் அமைவுடன் பொலிவுற அமையும் இணுவில் பொது நூலகம் தனக்கே உரியதுமான பல சிறப்பம்சங்களைக் கொண்டு மிளிர்கின்றது சனசமூகநிலையம் என்ற தன்மையின் ஒரு படி உயர்வாக இணுவில் பொதுநூலகமாக கற்போர்க்கு ஏற்ற வகையில் கற்பதற்குரிய அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை போற்றுதற்குரிய விடயமாகும்

நூல்களே நல்ல நண்பர்கள் இவைகற்போர்க்கு தடியோ,பிரம்போ பாவிக்காது அறிவினை புகட்டவல்லன. கிராமங்கள் தோறும் இவ்வாறன நூலகங்கள் அமைவு பெறுவதன் மூலம் மக்களின் கல்வி அறிவினை வளர்த்துக்கொள்ள முடியும் தமிழ் மக்களின் அழியாதசொத்தாக கல்விச் சொத்து கொள்ள முடிகின்றது. எவ்விடர்கள் வந்துற்றபோதும் கல்வியில் கவனம் செலுத்தி வந்தனர் .

பாடசாலைமாணவர்கள் பாடசாலைக் கல்விக்கு வெளியே பல மணி பொழுதினை வீணே கழிக்கின்றனர். அவர்கள் இவ்வாறன நூலகங்களை நாடுவதன் மூலம் தமது அறிவினை வளர்த்துக் கொள்ளலாம். இணுவில் பொது நூலகத்தின் நற் பணி சிறக்க பணி தொடர எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டுகின்றேன்.

**வே.நாகேந்திரராஜா**
**கிராமஅலுவலர்** J/194
**தாவடி வடக்கு**

## இறை அருள்பெற்று இன் நூல் நிலையம் சிறக்க பல்லாண்டு வாழ்த்துகின்றேன்

சைவமும் தமிழும் தலைத்தோங்கும் தென் இணுவைப்பதியிலே 1930ம் ஆண்டு ஓர் ஓலைக்குடிசையிலே திண்ணைப்பள்ளிக்கூடம் போன்று ஓர் நூலகம் உதயமானது.அந்த நூலகம் வளர்ச்சியடைந்து 1935ம் ஆண்டளவில் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் தென்புறமாக இணுவில் அம்பிபாக வித்தியாலயத்திற்கும் ஆலயத்தின் திருக்குளத்திற்கும் நடுவனாக கிழக்கு நோக்கி ஓர் நூலகத்தை திரு.கா.கதிரவேலு(ஆசிரியர்) திரு.நா.முத்துலிங்கம்(சித்தவைத்தியர்) திரு.கா.வைத்திலிங்கம்(மன்னார் நகரமேயர்) போன்ற பல இளைஞர்களால் அமைத்து இணுவில் ஸ்ரீகணேசவாசிகசாலையும் சனசமூக நிலையமும் என்ற பெயரோடு இயங்கி வந்தது. அதற்கு பல பெரியார்கள் வீரகேசரி, சுதந்திரன், ஈழகேசரி, இந்துசாதனம்,போன்ற தமிழ்ப்பத்திரிகைகனளயும் வேறும் ஆங்கிலப்பத்திரிகைகளையும் தந்து உதவினர். மேலும் உடுவில் கிராமசபை வானொலிப்பெட்டி இன்னும் பல உபகரணங்களையும் வழங்கினார்கள் இவ்வாறு இந் நூல்நிலையம் வளர்ச்சி பெற்று வருங்கின்ற காலத்தில்.

1983ம் ஆண்டளவில் ஆலயத்தின் தென்புறமாக ஓர் கல்யாண மண்டபத்தை அமைக்கப் பெரியோர்கள் நிச்சயித்தனர் .அதன் பிரகாரம் அம்பிகைபாக வித்தியாசாலையை இணுவில் இந்துக்கல்லூரியுடன் இணைத்தனர்.அதன் பின்னர் நூலகமும் அந்த இடத்தின் நின்றும் அகற்றப்பட்டு தற்போது இயங்கி வந்த இடத்தில் அதாவது உயர் திரு.சி.சின்னத்துரை கட்டிடத்தில் ஆலயத்துக்கு முன்பாக சில மீற்றர் துாரத்தில் தற்போதைய இளைஞர்களால் நடாத்தப்பட்டு வந்தது பின்னர் தற்போதைய கட்டிடத்தை நமது இளைஞர்கள் விலைக்கு வாங்கி புதிய திருத்த வேலைகள் பலவற்றையும் செய்து லட்சக்கணக்கணக்கான பொருள்களையும் செலவு செய்து நல்ல முறையிலே நூல் நிலையத்தை இயக்கி வருகின்றர்கள். ஆகவே இந்த நூல் நிலையம் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்றேன். இந் நூல்நிலையத்தை இந் நிலைக்கு வளர்ச்சி பெறச்செய்த இளைஞர்களையும் வாழ்த்தி ஸ்ரீபரராஜசேகரன் பாதாரவிந்தத்தை வாழ்த்தி வணங்குகின்றேன்.

நா.பொன்னுத்துரை
(முன்னாள் பதில் அதிபர்)
இணுவில் சைவப்பிரகாசமகா வித்தியாலயம்.

## நூலகப்பணி சிறக்க வாழ்த்துகின்றேன்

இராச பவனம்,
மஞ்சத்தடி,
இணுவில்.

இலங்கையின் சிகரமாம் யாழ்ப்பாணம் அந்த யாழ்ப்பாணத்தில் சகல செல்வங்களும் நிறைந்த இடம் இணுவில் சமயம், வியாபாரம்,விவசாயம், போன்ற துறைகள் இவ்வாலயசூழலில் வளர்ந்துள்ளன இவ்வளவு சிறப்பு பெற்ற இணுவில் கிராமத்துக்கு பொது நூல் நிலையம் ஒன்று அவசியம் தான்.இந் நூல்நிலையம் அமைந்தஇடம் மேற்கே ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் பெருமானும், வடக்கே ஆறுமுகப் பெருமனும் கிழக்கே சிவகாமஅம்பாளும் அருள்பாலிக்கின்றனர் எனவே நான் வணங்கும் இணுவில் சிவகாமஅம்பாள் மேன் மேலும் இவ் பொது நூல் நிலையம் வழரவேண்டும் என்றும் வாழ்த்தி பாரட்டுகின்றேன்.

இங்ஙனம்
தி.முருகையா
(கிராமஅலுவலர்.)

## ஏனைய நூலகங்களுக்கு முன்னுதாரணமாக திகழ வாழ்த்துகின்றேன்

இணுவில் பொது நூலகத் திறப்பு விழா சிறப்பு மலருக்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்நூல் நிலையம் இணுவில் மக்களுக்கு குறிப்பாக இளம் பரம்பரையினருக்கு அறிவாற்றலை வளர்த்தெடுக்க சிறந்த வகையில் உதவும் என நம்புகின்றேன். இந் நிலையம் மக்களின் தேவைகளை நிறைவேற்ற பயனுள்ள பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதன் மூலம் ஏனைய பொது நூலகங்களுக்கு ஒரு முன் உதாரணமாகத் திகழ வேண்டும். இணுவில் வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது உடுவில் பிரதேச மக்களும் கூட இவ்நூல் நிலையம் ஊடாகப் பயன்பெற்று சிறக்க வேண்டும் என வாழ்த்துக் கூறி மேலும் மேலும் இந்நிலையம் வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. கணபதிப்பிள்ளை
இளைஞர் சேவை அலுவலர்
வலி. தெற்கு

பரராஜ சேகரனின் பதம் போற்றி வாழ்த்தி
பெரு வாழ்வு வேண்டிப் பெற்றிடுவோம்-ஒரு நாளும்
தன்னலம் கருதாத தகமை சார் பொது நோக்கு
தன்மையே தரணி தனில் வெற்றி தரும்

"கற்ககசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக"

என்னும் திருக்குறளுக்கிணங்க சிறுவர், முதல் பெரியோர் வரை பண்டிதர்,முதல் பாமரர் வரை வாசிப்பினால் உயர்வடையலாம்

கண்டதும் கற்க பண்டிதர் ஆவான்"

என்னும் வாக்கிற்கிணங்க வாசிக்கும் இடம் பொதுநாலகம் ஆகும். இந்நூலகத்தினாலும் சனசமூக நிலையத்தினாலும் எமது கிராமம் வளர்ச்சி அடையும் எனக்கருதி பல்லாண்டு காலமாக பல கிராமங்களிலும் இவைதோற்றுவிக்கப்பட்டன.இவற்றினால் மற்றைய நாடுகளின் செயற்பாடுகள் முன்னேற்றங்களை அறியக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது ஆகவே எமது கிராமத்தவரும் அவற்றிலுள்ள நற்பண்புகளைப் பின் பற்றி முன்னேற முடியும். அத்துடன் சிறந்த பொழுதுபோக்காகவும் அமைகின்றன.

இதனைக்கருத்திற் கொண்டு எம் முன்னோர்கள் ஒரு சிறிய வாசிகசாலையை எமது கிராமத்தின் தென்புறமாக நிறுவினர் அது காலங்காலமாக வளர்ச்சியடைந்து எமது விநாயகர் ஆலயத்தின் தெற்கு வீதியில் (கணேசா வாசிகசாலை என்ற பெயருடன் விளங்கியது காலக்கிரமத்தில் சனசமூக நிலையமாக வளர்ச்சி பெற்றது. பின்பு ஆலய வளச்சி காரணமாக இடம் மாற்றப்பட்டு இணுவில் இந்துக்கல்லூரியின் ஒரு பகுதியில் பொது நூலகமாக வளர்ச்சி பெற்றது. தற்போது பொதுநூலகமும் சனசமூகநிலையமுமாக மிளிர்கின்றது. இங்கு எமது கிராமத்தவரும் அயற் கிராமங்களில் உள்ளவர்களும் பயன்அடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.வருங்காலத்தில் இந்நூலகம் சிறப்புப்பெற்றோங்குவதோடு கல்வி சம்பந்தமான பல துறைகளிலும் முன்னேறிப் பலவிதமான கலைகளையும் வளம்படுத்தும் நிலையமாக வளரவேண்டும்.இங்கு சிறார்கள்,இளைஞர், யுவதிகள், பெரியோர்கள் யாவரும் கடமை,கண்ணியம் கட்டுப்பாடு, என்னும் நற்பண்புகளை அமையப்பெற்று பேரறிஞராக வளர எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

அமைப்பாளர்
திருநெறியதமிழ்மறைக்கழகம்

மா.இராசரத்தினம்
(ஆசிரியர்)

## மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்துகின்றோம்

செந்தமிழ் நற் சைவநெறி செழிப்புற்றோங்கச்
செக முழுதும் ஏத்துபுகழ் இணுவையூரிற
சிந்தைமயக் கறுத்தொளிநன் கூட்டுஞான
செயபீட மீதெனவே யாரும் போற்ற
கந்தனொடு கணபதியின் அருளுங்கூட்ட
கலைஞான மணங்குலவி நாளும் நாளும்
எந்தமது சிந்தைமலர் சனசமூகக்
கலைமாது நீயென்றும் வாழிவாழி!

இணுவையம்பதியிலே புதிய நூலகம் ஒன்று திறப்பதை எண்ணி இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் பெருமிதம் அடைகின்றோம். ஏனெனில் எமது பகுதியிலே இது வரை பிரமாண்டமான சகல வசதிகளையும் கொண்ட இனியநூலகம் இல்லாத குறையை இந்நூலகம் நீக்கி உள்ளது. இணுவில் பதி வரலாற்றில் இம் முயற்சி ஒரு மையிற்கல் எனலாம். இந்த மயிற்கல்லே இப்பிரதேச மக்களின் படிக்கல்லாக அமையப்போகின்றது. வளர்ந்து வரும் கணனி யுகத்திற்கேற்ப நாமும் மாறவேண்டும். இந்த யுகத்தில் ஆங்கிலமும் கணனியும் எமது அன்றாட செயற்பாட்டுடன் இரண்டறக்கலந்து விட்டது. இந்த வகையில் நூலகத்தில் இருந்து கொண்டே (INTERNET) உதவியுடன் மாணவர் கற்க வேண்டும், கருத்துக்களை பரிமாற்ற வேண்டும், ஓய்வு நேரங்களை பயனுள்ள வழிகளில் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நிமிடங்களை நாம் ஏமாற்றினால் வருடங்கள் எங்களை ஏமாற்றி விடும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். நாம் வாசித்து அறிய வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. அவற்றை வாசித்தறிந்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக. பதிப்பகங்களில் பதிக்கப்பட்ட நூல்கள் பல இந்நூலகத்தில் உள்ளன அவை ஒவ்வொன்றும் உங்கள் உங்கள் மனப்பதிப்பகத்தில் மறு பதிப்புச் செய்யபடவேண்டும் என்பதே எம் ஆசை.

இந்த நூலகம் அமைக்கப்பாடுபட்டவர்கள் அத்தனை பேருக்கும் எனது நல்வாழ்த்துக்கள். இந் நூலகத்தை மேன்மேலும் மெருகூட்ட நாம் அனைவரும் உழைப்போமாக. அறிவாலயமான இந்த நூலகத்தை பேணிப்பாதுகாப்போமாக.

ச.முகுந்தன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
இணுவில் இந்துக்கல்லூரி

**பொருளாளரின் உள்ளத்திலிருந்து.................**

ஒரு கிராமத்துக்குஅல்லது ஒரு நாட்டிற்கு பாடசாலைகள்,கோயில்கள், தர்மசாலைகள் எந்தளவில் முக்கியத்துவம் பெறுகின்றனவோ அதே போல் நூலகங்களும் முக்கியததுவம் பெறுகின்றன.ஒரு மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கும் நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.அந்த வகையில் எமது கிராமத்துக்கு எமது நூல்நிலையம் அறுபது வருடங்களாக பல இன்னல்கள் மத்தியில் ஒரு நடமாடும் நூலகமாக இயங்கிவந்தது யாவரும் அறிந்த உண்மை இன்று தனக்கென தனியானஇடத்தை பெற்று மிளிர்கின்றது என்றால் அது எமது ஊர்ப்பற்றும்,மண்பற்றும்,உள்ளவெளிநாடுகளில்வசிக்கும் இணுவில்வாழ் நண்பர்களும்,இணுவில்வாழ்மக்களும் தான் அந்தவகையில் இந்நூலகக்கட்டிடத்தை இலங்கைப்ரூபாபெறுமதிக்கு 700000.00(ஏழுலட்சம்)க்கும் இதனை மிள்புனரமைப்பு செய்வதற்கு 1200000.00 பன்னிரன்டு லட்சம் ரூபாவையும் வழங்கியபெருமை வெளிநாட்டு நண்பர்களையே சாரும் அந்தவகையில் இது வரை எமது நூலகத்திற்காக எமக்கு கிடைத்த பணவரவு பற்றிய ,செலவுபற்றிய கணக்கை பொருளாளர் என்ற ரீதியில் பின்வருமாறு தருகின்றேன். இது பற்றிய விரிவான கணக்கறிக்கை நூலகத்திற்கான புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததும்.தனிஒரு அறிக்கையாக வெளியிடப்படும்.

இது வரை எமக்கு வந்து கிடைத்த பணவிபரம்.

| | |
|---|---|
| லண்டண் | 305000.00 |
| காணிக்கட்டிடம்.(லண்டன்) | 700000.00 |
| கனடா | 600000.00 |
| சுவிஸ் | 300000.00 |
| மொத்தம் -- | 1905000.00 |

| | |
|---|---|
| கட்டடம் கட்டுவற்க்கான கூலி | 127100.00 |
| மரத்தளபாடம் அது சார்ந்தவேலைகள் | 93500.00 |
| கட்டிடப்பொருள் | 30320.00 |
| திறப்பு விழா பத்திரிகை விளம்பரம் | 12500.00 |
| வர்ணப்பூச்சு ஒப்பந்ததக்காரர் | 28500.00 |
| கட்டட கூரைவேலைசெய்வதற்கானகூலி | 105000.00 |
| மின் இணைப்பாளர் | 12450.00 |
| நூலகத்திற்கான வேறுதொகுதி மரவேலை | 74875.00 |
| இரும்பு வேலை (இரும்பு அலுமாரி,தளபாடம்) | 85300.00 |
| நூலக இலட்சினை | 25000.00 |
| இலத்திரனியல் பொருட்கள் (மின்சாரப்பொருள்) | 30000.00 |
| ஏனைய செலவு | 218206.00 |
| கலர் வர்ணங்கள் | 100000.00 |
| மொத்தம். | 1232801.00 |

பொருளாளர்
ம.நாகரூபன்
இணுவில் பொதுநூலகம்

# பழமை பேணி புதுமை வளர வாழ்த்துகின்றேன்

இணுவில் பொது நூலகம் ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இது ஆரம்பத்தில் ஸ்ரீகணேசா வாசிகசாலை என்ற பெயருடன் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் தென்பால் அமைந்து மிகவும் பொலிவுடனும்மிடுக்குடனும் தனது பணிகளை ஆற்றிவந்துள்ளது.

இவ்வேளையில் ஸ்ரீகணேசாவாசிகசாலை எல்லாம் வல்ல எம் பெருமானுடைய அனுக்கிரகத்தினால் இணுவில் பொதுநூலகம் என்ற பெயரில் வளர்ச்சியுற்றது. நூற்றுக்கணக்கான அரும்பெரும் நூல்களை தர்மவள்ளல்களுடைய அன்பளிப்பினோடு தன்னகத்தே கொண்டு எமது கிராமத்துக்கு சிறப்புடன் சேவையாற்றி யிருந்தது. பின்னர் கடந்தகால அரசியல் அனர்த்தங்களினால் நூலகம் செயலிழந்து,நிலையிழந்து,திக்கற்று,விழித்துநின்றது.

இந்நிலையினை கண்ணுற்ற எமது கிராமமக்கள் ஏங்கித்தவித்தனர். எமது இணுவையம்பதி வாழ் மக்கள் இறைபக்தியையும்,கல்வியையும் தம் இரண்டு கண்களாக போற்றிவருபவர்கள். தேசப்பற்று நிறைந்த மேலைத்தேசங்களில்வாழும் எமது இளைஞர்களின் அயராத உழைப்பினை இதன் விருத்திக்கு நன்கொடையாக அளித்தனர். எமது கிராமமக்களின் நல் உதவிகளினாலும் நம் இணுவை மைந்தர்களின் அரும் பெரும் முயற்சிகளினாலும் இந்நூலகம் பெரும் விருட்சமாக இணுவையின் மத்தியில் பொலிவுற்றுத் திகழ்கின்றது. இது சகலவளங்க ளையும் உள்ளடக்கியதாகவும் வரும் சந்ததியினருக்கு பெரும் பயனை அளிப்பதாகவும் திகழும் என்பது திண்ணம்.

சகல பூரணத்துவமும் பொருந்திய இந் நூலகம் புதுப் பொலிவுடன் விநாயகப் பெருமான் முன்னிலையில் எழுந்து நிற்பது ஒரு திருவருட்பேறாகும் அத்தோடு இது தனது பணிகளை செவ்வனே பணியாற்றவேண்டுமென இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

வே.குணரத்தினம்
தலைவர்
இ.தெ.மே.கி.அ.சங்கம்

அ.நித்தியானந்தம்
செயலாளர்
இ.தெ.மே.கி.அ.சங்கம்

## சமூகத்தின் முன்னேற்றப்படிக்கல்லாக திகழ வாழ்த்துகின்றேன்

சமூகத்தின் முன்னேற்றப் படிக்கற்களாக கல்விச்சாலைகள் விளங்குகின்றன. கல்வி,கலை,கலாச்சார பண்பாட்டினை வளர்த்துச் செல்லும் ஸ்தானங்களில் நூல்நிலையங்களின் பங்கு மகத்தானது. இந்தவகையில் இணுவில் பொது நூலகமானது இற்றைக்கு ஏழு தசாப்த்ங்களைக் கடந்து தனது அயராத சேவையினை தொடர்ந்து வருகின்றது. இந்த வகையில் இப்பொது நூலகத்துக்கென தனியான கட்டட அமைவு இல்லாது இருந்தைமையும் தற்பொழுது தனக்கென நிலையான கட்டட அமைவோடு எழில் கொண்டு விளங்குகின்றமை மகிழ்வுதரும் விடயமாகும் .

எமது ஆலயத்துக்கு அண்மித்து இந் நூல் நிலையம் இருந்தமையும் அன்றைய சூழ்நிலைகளினால் நடமாடும் நூல் நிலையங்களாக செயற்பட்டு வந்தன. இப்பொது நூலகத்துக்கு நிலையான கட்டடஅமைவு வேண்டும் என்ற பெருங்கால அவா தற்போது இனிதே நிறைவேறியுள்ளது.

இணுவில் பொது நூலக புதிய கட்டட அமைவுக்கு லண்டன்,கனடா,சுவிஸ்,கொழும்பு,வாழ் இணுவில் நண்பர்களின் அயராத உழைப்பினால் இன்று புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

வளர்ந்து வரும் அறிவியல் யுகத்திற்கு ஏற்ப அறிவினை விருத்தி செய்யும் வகையில் பண்முகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சேவையினை இணுவில் பொது நூலகம் வழங்க எல்லாம் வல்ல இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் அருள் புரிவாராக.

பா.சத்தியமூர்த்தி
தலைவர்
ஸ்ரீகணேசாஇளைஞர்சேவைமன்றம்.

நூலக கௌரவ போசகரின் உரை




நூலக வாயிலில் திரு. ஆறுதிருமுருகன் அவர்களை வரவேற்றல்



கொழும்புக் கிளை அங்குரார்ப்பண நிகழ்வில் தலைவர் உரை 04.02.2002



பொன்விழாவின்போது திரு. க. தேவராஜா அவர்களை வரவேற்பு



இன்று புது பொலிவுடன் காணும்

# இணுவில் பொது நூலக

திறப்பு விழா சிறப்புற லண்டனில் இருந்து

வாழ்த்துகிறோம்

உங்கள் வியாபார ஸ்தாபனத்தையோ!

உங்கள் உற்பத்தி பொருட்களையோ!

உலகளாவிய ரீதியில் கணனியூடாக விளம்பரப்படுத்துவதற்கு

நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

## itsnotlate.com.ltd

...its not too late to enter the e world...

* internet
* intranet development
* e commerce

* m commerce solutions
* software system development
* domain name registrant

T:+44(0)20 8677 6779
F:+44(0)20 8677 6779
E:info@itsnotlate.com
W:www.itsnotlate.com

38 Gunton Road
London
SW17 9EL
United Kingdom

திறப்புவிழா சிறப்புற வாழ்த்துக்கள்


# கிருபா பந்தல் சேவை

இணுவில் மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.


ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார்துணை



திறப்புவிழாசிறப்புமா சிறக்கநல்வாழ்த்துக்கள்!!




# விநாயகர் ஸ்ரோர்ஸ்



இணுவில் மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு
இணுவில்

DENSHI

DENESHI
VIDEO & PHOTO




**VIDEO, PHOTO & DIGITAL VISION(PVT)LTD**

*Computer Graphics and Animation for TV Commercial, Photography & Album Makers, Video Filming. AudioDubbing, Computer Titling &Mixing*


**K.Srithr (Usan)**
**Director**

**VHS(Video)toCd Transfer**

No- 146-2/1, Galle Road,
WellaWatta, Colombo-06
Tel: 504224,075-521808
Hot Line: 078.657317

Noor Limpurg
Tegelen, Holland.
Tel.062.2194932

மலர் சிறக்க வாழ்த்தக்கள்.



வெளியூர்.0094.21.3390
உள்ளுர்.021.3390
**FAX** வசதிகளும் உண்டு

# சாந்தினி தொலைத் தொடர்பு சேவை

# SANTHINI COMMUNICATION


**K.KS.** வீதி ஆஸ்பத்திரிக்கு முன்பாக
இணுவில்...

மலர் சிறக்க வாழ்த்துக்கள்



# சாயிராம் பல் பொருள் அங்காடி

அழகுக்கு அழகு சேர்க்கும் அசல் 22 கரட் தங்க நகைகளை உடன் செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



# சாலி நகை மாடம்.

கே.கே.எஸ் வீதி,
இணுவில் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)




திருப்பு விழா சிறப்புற நல்வாழ்த்துக்கள்

# கணேசன் சென்ரர்



சகல விதமான புடவைத்தினிசுகளுக்கும் ஆடவர் முதல் மகளிர் வரை அனைவரின் மனதிற்குப் பிடித்தமான உடைகளை வாங்கி மகிழ்ந்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.



தாவடி வடக்கு ,
கொக்குவில்.தொ..பேசி.070.212296

## நூலக திறப்பு விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்!!







சகலவிதமானகட்டிடப் பொருட்களினதும் ஏக விநியோகஸ்தர்கள்

# ANJEANEYAR TRANSPORT

ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் கோவிலடி.
இணுவில் தெற்கு.

---

*Best wishes.*



# EXPO


## VIDEOCOMPLEX & EXPO LINK

NO-07 K.K.S ROAD
KONDAVIL

T.p no.021.3100
idd.0094.21.3100

மலர் சிறக்க வாழ்த்துக்கள்

# விஷ்ணு வீடியோ





வீடியோ ஓடியோ வகைகள் புதிய புதிய சீடி வகைகள்
சீடி மூலம் பதிவு செய்ய நீங்கள் எந்நாளும் நாடவேண்டிய இடம்.

விஷ்ணு வீடியோ,
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.


மலர் சிறக்க வாழ்த்துக்கள்

# லிங்கம் ஸ்ரோர்ஸ்



கே.கே.எஸ் வீதி,இணுவில்.

சகல விதமான சிற்றுண்டி வகைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



# சஜன் கிறீம் ஹவுஸ்

கே.கே.எஸ் வீதி.
இணுவில்.

ப்புவிழா சிறப்புமலர் சிறக்க எல்லாம்வல்ல ஸ்ரீபரராஜ சேகரனை இறைஞ்சுகின்றோம்

# லிங்கம் ஸ்ரோஸ்



ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் - மானிப்பாய் வீதி,
இணுவில் மேற்கு.



# LINGAM COMMUNICATION
*AND*
# LINGAM FANCY HOUSE

*local.070.212641*

*idd .0094.70.212641*




இன்ரநெற் ஊடாக வெளிநாட்டுத் தொடர்புகளை
உடனுக்குடன் பெற்றிட

சலகலவிதமான அழகுசாதனப் பொருட்களையும், அன்பளிப்புப் பொருட்களையும் வாடிக்கையாளர்களின் மனதுக்கேற்ற வகையில் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்.

# LINGAM COMMUNICATION
AND
# LINGAM FANCY HOUSE

ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மானிப்பாய் வீதி, இணுவில்




# நூலகத்தின் சின்னம்

கடந்த பல வருடங்களாக எமது பகுதி நூலகத்துக்கென்று நிரந்தரமான ஒரு கட்டிடமில்லையென்ற குறை நிறைவு பெற்றறுள்ளது என்பதையிட்டு நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். இந்த நூலகம் எமக்குத் தெரிய நாம் சிறுபிள்ளையாக இருந்த காலங்களில் இருந்து நடமாடும் நூலகமாகவே இயங்கி வந்தது என்பது கடந்த கால வரலாறு. எனவே எமது பகுதிக்கென்று ஒரு நூலகம் நிரந்தரமான கட்டிடத்தில் இயங்கவேண்டுமென்ற ஆசை எமக்குள் பல காலமாக புதைத்திருந்தது.எப்பொழுதெல்லாம் நூலகம் சம்பந்தமான விடயங்களை செயற்படுத்த தொடங்கும் போதும் எமது பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் பாதியிலேயே தேக்க நிலையை அடைந்து விடும். குறிப்பாக 1987.09.07 எமது பகுதி இளைஞர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு முறைப்படி பிரதேச செயலகத்தில் பதியப்பட்டு.(பதிவிலக்கம்.J/VC/43/CC695) சிறப்பாக இயங்கி வந்த பொது நூலகம் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் பூரண வளர்ச்சியை எட்டவில்லை.

தற்பொழுது ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையாரின் அருளால் உங்குள்ள நண்பர்கள் (இணுவில்) எம்முடன் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு (20.01.2001 26.06.2001)பிள்ளையார் கோயில் வாசலில் தற்காலிகமாக நூலகம் இயங்கி வந்த கட்டடத்தை நூலகத்துக்கென்று நிரந்தரமாய் வாங்கித்தருமாறு கேட்டதற்கிணங்க அதற்குரிய செயற்பாட்டில் முழுமுயற்சியுடன் செயற்பட்டு அதை இன்று எமது நூலகத்துக்கென சொந்தமாக்கி திறப்புவிழா செய்திருக்கின்றோம் என்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இந்தக்கட்டிடம் இணுவிலை சேர்ந்த திரு.திருமதி பத்மகாந்தன் (தற்பொழுது சுவிஸிலுள்ளார்கள்) அவர்களுக்கு சொந்தமானது என்பதை அறிந்து அவர்களுடன் தொடர்புகொள்வதற்கும் கட்டடத்தை எமது நூலகத்துக்கென வாங்குவதற்கு பல வழிகளில் உதவி செய்த (தற்பொழுது) சுவிஸிசில் வாழும் எமது அன்புக்குரிய திரு.ஸ்ரீபத்மநாதன்(அப்புலிங்கம்)அவர்களுக்கு இச்சந்தர்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் இச்சந்தர்ப்பத்தில் முக்கியமான விடயமொன்றை கூற கடமைப்பட்டுள்ளோம். அதாவது இக் கட்டிடத்துக்கு சுவிஸ் பிராங் 13000 பதின்மூவாயிரம் (இலங்கைப்பெறுமதிக்கு ரூபா.700000.00) பெறுமதிக்கு மேற்குறிப்பிட்ட கட்டிடத்துக்குரியவர்களுக்கு கொடுத்து வாங்கியுள்ளோம் என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

சிறுதுளி பெரு வெள்ளம் என்பதற்கிணங்க இப் பெரும் நல்ல முயற்சிக்கு தேவையான நிதியை திரட்டுவதற்க்கு எமது பகுதியைச் சேர்ந்த எமது உடன்பிறப்புக்கள் கைகொடுத்துதவினார்கள். நாம் அவர்களிடம் சென்று நூலகவிடயமாக கதைத்து நிதிகேட்டபொழுது தம்மாலான உதவியை மனமுவந்து செய்தார்கள். அவர்கள் அனைவருக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் இரு கரம் கூப்பி நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் எமது நூலகத்திற்கென ஒரு இணையத்தளத்தை (WWW.INUVILPUBLICLIBRARY.COM) அமைத்துத்தந்த லண்டணில் இயங்கும் **its not late.com** ஸ்தாபனத்தாருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இங்ஙனம்.

இணுவில் பொதுநூலக அமைப்புக்கு, இலண்டன்

"நற்குஞ்சரக் கன்று தண்ணில் -கலைஞானம்
கற்குஞ்சரக் கன்று காண்"

"ஸர்வேஜனா ஸகினோபவந்து"

ஈழமணித்திருநாடென்றும் யாழ்ப்பாணச் சிவபூமியில் இணுவிற்பதியில் சைவமுந்தமிழும் தழைத்து சீரும் சிறப்புடனும் விளங்கும் இந்துக்கோயில்களின் சூழலில் நித்திய மங்களமாக மணி முதலாய மங்களஒலி,வேதகானம்,நாதஒலி,என்பவற்றுடன் கூடிய சிறப்பு மிகு திருவருட் சூழலிலே,சரித்திரப்பிரசித்திவாய்ந்த ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயிலின் அருகே அனைத்து மக்களையும் வாழ்வாங்கு வாழவைப்பதற்கு ஸ்ரீவித்யாதேவியின் அருட்செல்வம் கிடைக்கும் வண்ணம் கலைஞானங்களுக்கதி பதியாம் விநாயகப் பெருமானின் திருவாருளால் அமையப்பெற்றது இப் பொதுநூலகம் இவ்வித்தியா களஞ்சியமானது வற்றாத நீர்பிரவாகமாக ஊர்மக்களையும்,நாட்டுமக்களையும் அதாவது ஈழமக்களை சிறந்த கலைஞானம் பண்பு நிறைந்த உத்தமர்களாக உருவாக்க காரணமாய் அமைகின்றது என்பது வெளிப்படையாகின்றது.

இந்நூலகத்தை அவ்வூர்க்கல்விமான் பேராசிரியர் க.தேவராஜா இவர்கள் திறந்து வைத்தது சிறப்பு அம்சம் பெருமகிழ்ச்சியுடன் இவ்வகையான வித்தியாதர்ம கைங்கரியங்களில் பங்களித்த அனைத்து தர்மசீலர்களுக்கும் இப்பெரும் பாக்கியம் பெறும் யாவருக்கும் ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத நடராஜப்பெருமானின் திருவருள் கிடைக்கவும் நூலகத்தின் சிறப்போங்கவும் மங்களமான ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபம்

"கற்க கசடறக் கற்பவை - கற்றபின்
நிற்க அதற்குத் தக"

பிரம்மஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்தசர்மா
வேதாகாமஸ்பா
லண்டன்
079.-51908227

வாழ்த்து

**கடவுள் வணக்கம்.**

ஐங்கரனே ஆறுமுகனே! அருகருகாய் வீற்றிருந்து
        பொங்குமருள் பாலிப்பீர் புவி வாழ....எங்கணுமே
அன்போடறிவுயர, ஆனந்தம் தழைத்தோங்க,
        என்றென்றும் உடம் கழலே காப்பு!

**குழுவினருக்கு வாழ்த்து.**

தங்கத் தமிழீழ யாழ் நகரின் வட புலமாம்
        தங்கு புகழ் இணுவையூர் செய் தவத்தால்-மங்களமாய்
வளமிக்க நம் தமிழர் வளமான நூல் நிலையம்.
        குழுவாகத் திறந்தளித்தார் வாழ்த்து

**நூல் நிலையம் தோற்றம்**

கிணற்றுத் தவளையெனக் கீழ்மையுடன் வாழாமல்
        மணக்கும் அறிவுபொங்க, மக்களெல்லாம்..கணப்பொழுதும்
சோர்வின்றிச் சொல்லறிய அறிவறிந்து உயர்ச்சி பெற
        ஊரகத்து (இந்) நூல்நிலையம் தோற்றம்!

**தமிழ் காக்க.**

நவில் தொறும் நூல்நயம் இன்பம் பயத்தலால்......
        பயின்றிடுவீர் பண்பாட்டு இலக்கியங்கள் - இயன்றளவு
பெருக்கி அறிவதனைப் பேணித் தமிழ் காத்து
        நெறியுடனே வாழ்ந்திடுவீர் நன்று!

**நம்மவருக்கு நன்றி**

அறிவொளி சிறந்தோங்க,அறியாமை இருளகல
        வருங்கால சமுதாயம் வளச்சியுற - அருங்கலைகள்
உயிர்காக்கும் கூடம் நூல் நிலையம் என்றுணர்ந்து.
        நயந்தளித்த நம்மவர்க்கே.நன்றி

நன்றி

ஆக்கம்
**இணுவை சுசீலா-தர்மலிங்கம்**

## இணுவில் பொது நூலகம் பொலிவுடன் வாழி

பரராஜசேகரன் பாதம் பணிந்ததாலோ
பரமன் மகனின் மனங்குளிர்ந்ததாலோ
வரமாக இன்று வளமான இணுவையில்
பொது நூலகம் பொலிந்தது கண்டீர்
தரமான தேவை சனசமூக சேவை
தாராளமாக தரணியில் தவழ
கரம் கோர்த்து நாமும் சரமாகி
சுரமாக வேண்டும் இது சுதியான செய்தி

செந்தமிழ் தந்த பைந்தமிழ் இணுவையில்
சிந்தையுருகி எம்மவர் உறவினில் பந்தமாகி
சாந்தமாக சனசமூக நிலையம் அதனுடன்
சுந்தர நூலகம் சுகமாக துளிர் விடுகின்றது

வெண்பா கொண்டு இச் செயல் வாழ்த்தி
வண்ணம் எம் ஊரில் விசாலம் எம் மக்களில்
திண்ணமாய் உலகில் இவை திறம்பட இயங்க
எண்ணம் போல் செழிக்க எழுதிய வாழ்த்து!

ஆக்கம்

**சுந்தரலிங்கம் – நித்தியராம்நாராயணன் (அக்கினி)**
**பெரிய பிரித்தானியா ஐக்கியஒன்றியம்**

இணுவில் பொது நூலகத்தின் வளர்ச்சி கண்டு பூரித்துநிற்கின்றேன்.
வானளாவில் உயர்ந்த எம்
கண்களைக் கவர்ந்திழுக்கும் பரராஜ
சேகரப்பிள்ளையார் ராஜ கோபுரம்
பழமை வாய்ந்த உலகின்
மிகப் பெரிய திருமஞ்சம்
வருடத்தில் இரண்டு தடவை
வலம் வரும் கந்தசுவாமி கோயில்.
இவை மட்டுமா?
இன்னும் எத்தனை எத்தனை
அற்புதங்களை தன்னகத்தே
கொண்டது எங்கள் இணுவையம்பதி.
பச்சைப் பசேல் என எங்கும்
காட்சி தரும் பொன் விளையும்
எங்கள் இணுவில் கிராமம்
நாளும் ஓயாது உழைக்கும்
எங்கள் உறவுக் கோலங்கள்
சைபவத்தியோடு ஆலயங்கள்
கல்வி மான்கள் இந்துக்கல்லூரிகள்
எனப்படிப்படியாய் வளந்து வரும்
எங்கள் இணுவில் கிராமம்.
கடல் கடந்து எந்த நாடு
நாம் சென்றாலும் கவர்ந்திழுக்கும்
நினைவுக் கோபுரமாய் எம் கண்
முன்னே விரியும் அழகுக் கோலங்கள்
விக்கினங்கள் திர்த்து வைக்கும்
விநாயகனின் வாசலிலே
அறிவுக்கண்ணைத் திறக்கின்ற
பத்திரிகைகள் மட்டுமல்ல
ஆக்கமுள்ள அறிவு நூல்கள்
கொண்ட பொக்கிசமாய்
பொன்விழாக்கண்டு
உயர்ந்து நிற்கும் நல்லாசானின்
பொற்கரத்தால் திறந்து வைத்து
புதுப் பொலிவோடு காட்சி தரும்
இணுவில் பொது நூலகம்
தேசம் கடந்தாலும் இணுவில்
கிராமத்து வாசம் குன்றாத மானிடராய்
பாசம் கொண்ட உறவுகளாய்
இணுவில் பொது நூலக வளர்ச்சியிலே
மணி வேராய் பணிகள் பல ஆற்றி
எமது அனைத்து இளைஞர்களும் ஒன்று பட்டு உழைத்ததால்
உருவானது எமது நூலகம்
ஆசியாவிலேயே முதலாவது என்றிருந்து
அழிந்து போன யாழ் பொது நூலகத்துக்கு
ஒப்பான பல அரிய நூல்களோடும்
தொழில் நுட்பங்களோடும் வளர்த்தெடுக்க முடியும்.

இங்ஙனம்
டென்மார்க்கிலிருந்து இணுவை
க.சத்திதாசன்

It is with great pleasure that I issue this message of felicitation on the occassion of the inaugral ceremony of inuvil puplic library . This decision is no doubt an expression of keeness and dedicationof the welwishers of our village toventure towards the upliftment of the society.

This library stands in the heart of our village in Jaffna in the nothern province of Srilanka. In our village there are famous temples, schools and fertile garden lands. Most of the people in our village are farmers .There are musicians and artist too in our village.In this village there is a library declared open recently by welwishers of our society.

" Reading maketh a full Man" Reading makes a person to gain more knowledge.According to this proverb if one wants to become a full man he has to read as many books as he can in his life time .As we the member of the society we must develop our reading habbits. With more hardships and dedication this institution has been declared open. There is no doubt this library will cater the demands of the various readers in many fields . It will also cotinue its service to equip our readers to tomorrow to meet the challanges ahead we beg you all to donate funds and necessary guidances to establish this newly emerged institution to stand firmly.

As people living in the new millennium we have great responsibility of leaving same meaningful benefits for future generation .

I wish this library will maintain its glory for ever and to face up with challanges of the new century.

S.Ganesalingam
I.S.A

பெருமை படைத்த எண்ணற்ற தமிழறிஞர்களையும் சைவப்பெருமக்களையும் ஈந்துதவி தமிழும், சைவமும் கமழும் இணுவிலில் இன்று பொதுநூலகம் ஒன்றின் சிறப்பு மலர் வெளியீடு விமரிசையாக நடைபெறுவதறிந்து அகம்மிக மகிழ்கின்றேன்.

சைவ ஆலயங்கள், பாடசாலைகள், கலைகள் என்பவற்றில் இணையில்லாமல் திகழ்ந்த கிராமமாதலால் ஷஷஇணையிலி" என்ற பெயரே இணுவிலாக மருவியதாகப் பெரியோர்கள் கூறுவார்கள். இவ்வாறு புகழ்பூத்த கிராமத்தில் 1930ம் ஆண்டு சனசமூக நிலையமாக ஆரம்பித்து தினசரி பத்திரிகைகள் வாசிக்குமிடமாக மாத்திரமிருந்து இன்று நவீன வசதிகளுடன் சொந்தக் கட்டிடத்தில் பொது நூலகமாக மிளிரப் போகும் இந்த நூலகம் இணுவில் மக்களுக்கு மட்டுமல்லாமல் அக்கம்பக்க கிராம மக்களுக்கும், மாணவர்களுக்கும் சிறந்த சேவையை வழங்கும் என்ற பெரு நம்பிக்கை எனக்கு உண்டு.

கொழும்பிலிருந்து ஐந்து கணிணிகள் இந்த பொது நூலகத்திற்கு சென்றுள்ளன என்பது இன்னுமொரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

ஷஷவாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற முதுமொழிக்கிணங்க, இப்பொது நூலகம் இன்றிலிருந்து பல்லாயிரம், மக்களுக்கும், மாணவர்களுக்கும் சேவை செய்ய வேண்டுமென இதயபூர்வமாக கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும், எனது தனிப்பட்ட சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

"கலாசூரி"
இ. சிவகுருநாதன்
தலைவர்,
கொழும்பு தமிழ்ச் சங்கம்.

ஈழ மணித்திருநாட்டில் சிகரமாய்த் திகழ்வது யாழ்ப்பாணம்.தமிழர்தம் கலை,கலாச்சாரம்,பண்பாடு என்பவற்றின் கருவூலமாயத் திகழ்வது யாழ்மண்,அத்தகு பெருமை கொண்ட யாழ்ப்பாணத்தை வெளிப்படுத்தும் ஒரு சோற்றுப்பதமாய் விளங்கும் பேரூர் இணுவிலாகும்.கோயில்கள்,அறிஞர்கள்,கலைஞர்கள், என நல்லவற்றால் நல்லவர்களால் பொலியும் கிராமம் இது.பதிஏழு அறியாப் பழங்குடியினராய் விளங்கும் இக்கிராம மக்கள் அறிவையும்,கலையையும் தம் கண்களாய்ப் போற்றுபவர் மண் பற்று மிக்க மாண்பினர்.அவர்தம் முயற்சியால் உருவாகிய ஆறுபது வருடத் தொன்மை கொண்ட வாசிகசாலை இன்று பெரு நூலகமாய் உருவெடுக்கும் செய்தி மகிழ்ச்சி தருகின்றது. உலகெங்கும் பரவியுள்ள இணுவில் அன்பர்கள் இப் பணியை முன்னெடுப்பது பெருமைக்குரிய விடயம். எங்கிருந்தாலும் தம் கிராமத்தை மறவாது வளர்க்கும் அவர் தம் பண்பு பாரட்டுக்குரியது அரிய இந்நூலகப் பணியால் தொன்மை கொண்ட இணுவிலூரின் பெருமை மேலும் உயரும் என்பது உறுதி. இப்பணியில் ஈடுபட்ட அனைவர் தம் வாழ்வும் சிறக்க எனை வாழவைக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வார் திருவடியை வேண்டிப் பணிகிறேன்.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை

அன்பன்
கம்பவாரிதி .இ.ஜெயராஜ்
(கம்பன்கழகம்)

யாழப்பாணத்தில் உள்ள இணுவையம் பதியில்,அப்பகுதி வாழ் பொதுமக்களின் நன்மை கருதி இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம் புனர் நிர்மானிக்கப் பட்டதை அறிந்து அந்த அமைப்பினருக்கு எங்கள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மக்கட் தொண்டே மகேசன் தொண்டு என்பது சுவாமி விவேகானந்தரின் தாரக மந்திரம் ,இறை தொண்டு ஆலயத்திற்குள்ளேயே நின்றுவிடாது,மக்களின் தேவையையும் நிறைவு செய்வதாக அமைவது நல்லது. இது காலத்தின் தேவையும் கூட

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தின் பணி மேலும் சிறக்க இறைவன் திருவருள் புரிவாராக!

சுவாமி ஆத்மானந்தா
இராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு. 06




நூலக அங்கத்தவர்கள்



மலர்க்குழு

இணுவில் பொதுநூலகம்
செழிப்படைய வாழ்த்துக்கள்.

இலங்கை ஆரியச்சக்கரவர்த்திகளுள் சிறந்து விளங்கிய செகராச சேகர மன்னன் காலத்தில் சைவமும் தமிழும் சிறந்தோங்கியது. நல்லூரிலே சங்கம் அமைத்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஈழத்துத்தமிழ் கூறும் நல்நூலகத்தை தமிழ் மணம் கமலச்செய்த நாடாக்கியமை வரலாறாகிப் போய்விட்டது. பரராஜசேகர மன்னர் முதல் வாழையடி வாழையாக தமிழ்மக்களின் பாரம்பரிய மண்ணை ஆண்ட மன்னர்கள் ,தாமே நூலசிரியர்களாக விளங்கினர்.சங்கத்தமிழ் செழித்த யாழ்ப்பாண மண்ணிலே சரஸ்வதிமகால் என்ற நூலகம் ஒன்று அமைந்திருந்தது.

நாயன்மார்கட்டு முதல் நல்லூர்,இணுவில் ஆகிய பாரம்பரிய கிராமங்கள் அறிஞர்களும்,புலவர்களும் நிறைந்த பேரூர்களாக விளங்கியது.சீரிய பொன்சிறக்க செங்கோலோச்சிய செகராசசேகரன்,அரிய பெரிய நூல்களையெல்லாம் சேகரித்து தென்னிந்தியாவில் இருந்த கொண்டுவரப்பட்ட ஏட்டுப்பிரதிகள் ஆவணங்களைஎல்லாம் சேர்த்து சரஸ்வதி மகாலை நூல்நிலையமாக மாற்றினான். தமிழ் வளர்த்த சான்றோருள் ஒருவனாகிய "மஞ்சும்,அஞ்சும் கைப் பரராசசேகரன் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் அமைந்து சிறப்பித்தது மட்டுமன்றி "என்ற புகழ்பூத்த வைத்திய நூலையும் ஆக்கினான் இவை எல்லாம் பழையகதைகள் (ஊர்கள்தோறும் வாசிகசாலைகள்,நூல்நிலையங்கள்,கல்விக்கோட்டங்கள்,என்ற தமிழ்மக்களின்கனவு பழைய வரலாறுகளை நினைத்து ஏங்குவதாக இப்பொழுது அமைந்துவிட்டது. இன்றைய அழிவுகளின் மத்தியில் பழைய கதைகளை நினைத்து ஏங்குவதுடன் நின்றுவிடாது மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு,பாரம்பரிய பூமியாகிய இணுவில் மண்ணில் பொது நூலகம் ஒன்று உருவாகின்றமை மகிழ்ச்சி தரும் செய்தியாகும் .

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிந்து போனமையையிட்டு எவ்வளவு காலம் ஏங்குவது! நூல்நிலையம் எரிந்ததைக் கனத்த உள்ளத்துடன் பார்த்தவர்கள் இப்பொழுதும் இருக்கின்றனர். தமிழ்சாதி அடியுதையுண்டும் காலுதையுண்டும் காற்றடியுண்டும் வருந்தினாலும் அது அறிவுப்பசியோடு வாழ முற்படும் இனம் நடந்தேறிய கொடுமைகளை அழிவுகளை கேள்விப்பட்டு பார்த்து ஊமையராய் செவிடர்களாய், குருடர்களாய் இருக்காமல் மீண்டும் எழுச்சி பெறும் காலம் வருகின்றது. நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது என்ற பாரதியின் சிந்தனை எழுச்சியோடு யாழ்ப்பாணம் உயரும் யாழ்ப்பாண நூல்நிலையமும் உயிர்க்கும்! மீண்டும் ஊர்தோறும் அறிவுக்களஞ்சியங்களாக நூல் நிலையங்கள் செழிப்படையும் பழையபெருமைகளை உயிர்ப்பிப்பதோடு புதிய தலைமுறை வளம் பெற அத்தனை காரியங்களை செய்ய முன் வரவேண்டும். இப்பிரதான பணியின் ஒரு சிறிய ஆரம்பம் தான் இணுவிலே உருவாகும் பொது நூலகம் யாழ்ப்பாண மண்ணும் வட புலத்து அறிவு ஊற்றும் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு எமது இதயம் கலந்த வாழ்த்துக்கள்

ஆ.சிவநேசச்செல்வன்
பிரதம ஆசிரியர்
தினக்குரல்

இணுவில் ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் ஆலயத்தின் முன்றலில் இயங்கி வந்த சன சமூகநிலையம் தற்போது புது மெருகூட்டப்பட்டு வாசிகசாலையாகவும் நூல்நிலையமாகவும், கணனிப்பயிற்சி நிலையமாகவும் கேட்போர் கூடமாகவும் புதுப்பொலிவு பெறுகின்றது.கடந்த பல ஆண்டுகளாக இணுவில் மக்கள் மனதில் உருவாகிய ஒரு நல்ல சிந்தனை இன்று fz ;KdNd c UntLj;J "பொது நூலகமாக" விளங்குகின்றது. இந் நூல்நிலையத்தின் பெரு முயற்சி வெற்றி பெற எனது மனமார்ந்த ஆசிகளை தெரிவிக்கிறேன்.

இன்றைய காலகட்டத்தில் செலவீனங்கள் உயர்வடைந்துள்ள வேளையிலும் மனந்தளராது,

எண்ணியமுடிதல் வேண்டும் - நல்லவே
எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் - தெளிந்த
நல்லறிவு வேண்டும்.

என்ற பாரதியாரின் வாக்கிகேற்ப இந்நூல்நிலைய அமைப்புக் குழுவினரை பாராட்டி அவர்களது முயற்சிகள் அனைத்திலும் வெற்றியீட்ட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"சுபம்"

இ.பாலச்சந்திரன்
யாழப்பாணஇந்துக்கல்லூரி ஆசிரியரும்
எவரெஸ்ட் கல்வி நிலைய இயக்குனரும்.

## எங்கள் நூல் நிலையம் புதுப் பொலிவு.

எங்கள் கிராம மக்கள் அறிவு ஆற்றலில் மேம்பட வேண்டும் உலகச் செய்திகளை அறிய வேண்டும் என்ற ஆசையால் 1930ம் ஆண்டு காலப்பகுதியில் அதுவும் கஷ்டமான சூழ்நிலையிலேயும் ஒரு வாசிகசாலை வேண்டுமென விரும்பிய அறிஞர் கொட்டில்கள் அமைத்தனர். அதில் வாசிகசாலையை நடத்தி வந்தனர். அதன் பின் வந்த பெரியார்கள் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவிலுக்கு தென்புறமாக கொட்டில் அமைத்து வாசிகசாலை நடத்தி வந்தனர். பின் அவர்களின் அரிய முயற்சியால் கல்லால் அமைத்து திறம்பட நடாத்தி வந்தனர். வானொலிப்பெட்டி மக்களுக்கு ஏற்ற சகல பத்திரிகைகளும் வாசிப்பதற்கு வசதிசெய்யப்பட்டன. இத்தகைய அரும்பெரும் முயற்சி செய்த பெரியார், கல்விமான்கள், எம்மை விட்டு மறைந்து விட்டார்கள் அத்தகைய பெரியார்களை நினைவு கூர்வதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும். அவர்களில்: க.கதிரவேல் (ஆசிரியர்) க.கனகசபை (வர்த்தகர்) சீ.சொர்ணலிங்கம், த.குகதாசன்,நா.முத்துலிங்கம்(ஆயுள்வேதவைத்தியர்) கா.வைத்திலிங்கம்(மன்னார்வர்த்தகர்) சீ.சொக்கலிங்கம்,செ.இரத்தினப்பிரகாசம்,சீ.இராமலிங்கம் (அம்பலவாணர்) சி.கனகலிங்கம் (கூட்டுறவுக்கடை முகாமையாளா) இவர்களுடன் நம்முடன் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் பலரும் நடாத்தி வந்தார்கள் பிற்காலத்தில் தொழில் நிமித்தமாக கதிரவேல் ஆசிரியரின் தனியான பொறுப்பில் நடந்து கொண்டு இருந்தது. அச்சமயம் பின் வந்த நம் இளைஞர்கள் அண்ணாமலை மன்றம் என்றும் விக்னேஸ்வரா வாசிகசாலை என்றும் இணுவில் தெற்கில் அமைத்து நிர்வாகம் செய்தபோது திரு.க.கதிரவேலு ஆசிரியர் நோய்வாய்ப்பட நேர்ந்தது.அதனால் இளைஞர்களை பொறுப்பேற்று நடத்தும்படி கூறியதன் காரணமாக தாங்கள் நடாத்திய வின்கினேஸ்வரா வாசிகசாலையை விட்டு கனேசாவாசிகசாலையை நடத்த ஆரம்பித்தனர் அவர்களுள் சிலர் மறைந்து விட்டனர் பலர் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அப்போது ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையாருக்கு தென் புறமாக ஒரு கல்யாணமண்டபம் அமைக்கவேண்டும் என பல பெரியோர்களுக்கு ஆசை.அருகாமையில் கோயிலும் நாவலர் அடிக்கல் நாட்டிய பாடசாலையும் வரலாறுமிக்கவை அதை அகற்றி கல்யாணமண்டபம் கட்ட ஆயத்தம் செய்த போது அருகில் ஒரு வாசிகசாலையும் அமைத்து தாருங்கள் என்று இளைஞர்கள் கேட்டுக் கொண்டனர் சம்மதம் தெரிவித்தும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எல்லாம் இருந்தும் மக்களின் ஓய்வுநேரத்தை கழிக்கவும் அறிவு வளரவும்,வாசிப்பு திறன் பெறவும் ஒரு நூல் நிலையம் இல்லாதது பெரும் குறையாகஇருந்தது. இதை எமது இளைஞர்கள் உணர்ந்தனர் கோயிலுக்கு முன்பாக ஒரு நூல்நிலையத்தை அமைத்தனர்

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்றார் வள்ளுவர் இளைஞர் சிந்தனை பொற்காலமாக மாறியது அதே நூல் நிலையம் இன்று பல லட்சம் ரூபா பெறுமதியான நூல்நிலையமாக மாறியது. இந்த நிகழ்ச்சி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகும். "முயற்சி திருவினையாக்கும்"இந்த நிகழ்வு நம் ஊர் இளைஞர்களின் முயற்சி,சிந்தனை,ஆக்கம் பொருள் ஈட்டிய தன்மையை யாராலும் மறக்கமுடியாது ஆலயங்களின் விழாக்கள் திறம்பட நடப்பதற்கு ஏற்ற தொண்டர்கள் நூல்நிலையத்தை கம்பீர தோற்றமாக குறுகிய காலத்தில் அமைத்தார்கள் என்றால் அது அவர்களது விடா முயற்சி மதிநுட்பம் என்றே சொல்ல வேண்டும்.

நிதி மிகுந்தவர் பொற்குவைதாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் தானங்கள் செய்மின்

என்ற ரீதியில் இளைஞர்கள் ஆற்றிய தொண்டை வாழ்த்துவோம் மேலும் அவர்கள் njhz }; tshf;

தி.பரமலிங்கம்
((முன்னாள் கிராமசபைத்தலைர்)

## இணுவில் பொது நூலகம் இன்புற வாழி

"கற்ககசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

நூலகம் என்பது (நூல்+அகம்) எனப்பிரித்தும் பார்க்கையில் நூல்கள் பலவற்றை உள்ளடக்கிய ஒரு வீடு போன்றது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது முதுமொழி இதற்கமைய நூலகங்கள் பல அறிவாளிகளை உருவாக்க உதவும். இந்த வகையில் இணுவில் பொதுநூலகம் அமைக்கப்பட்டது. இணுவை வாழ் மக்களினதும் அயலுள்ளமக்களாலும் அறிவுப்பசிக்கு ஒரு விருந்து என்று கூறலாம்.இணுவை விநாயகன் முன்றலில் ஒரு அறிவாலயம் என்று கூறும் அளவிற்கு உயர்ந்த கட்டட அமைப்போடு அமைக்கப்பட்ட இந்தநூலகத்திற்கு வெளிநாடுகளில் வசிக்கும் இளைஞர்கள் செய்த அளப்பரிய சேவை பாரட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதற்காக முன்னின்று இரவு பகல் பாராது கண்துஞ்சாது அரும்பாடுபட்ட ஆசிரியர் குழாம் இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் ஆலய இளைஞர்குழாத்தினர் மற்றும் தொண்டர்கள் பெருமைக்குரியவர்கள். இந்த நூலகம் கணனிவசதிகள்,கருத்தரங்குமண்டபம்,சிறுவர்பாடசாலை,போன்றவற்றையும் உள்ளடக்குவதால் மேலும் சிறப்புப் பெறுகின்றது. இந்த நூலகம் வளர்ச்சி பெற இறைவன் நல்லாசி புரிவார் என்று எமது நிறுவனத்தைச்சார்ந்த அனைவரும் மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

.இங்ஙனம்
அதிபர்,ஆசிரியர்,மாணவர்
**A.T.C INSTITUTE**
இணுவில்

## சுவரில் ஓர் சூரி

எங்கள் வீட்டுச்சுவரில் வேலப்பா கையில் ஒரு வேலுடன் நின்றுகொண்டிருந்தார் இரண்டு கால்ப்பகுதியிலும் இரண்டு ஓட்டைகள்.எலியோ,பூச்சியோ அரித்திருக்கலாம்.தூசியும் பிடித்திருந்தது நடிகர் சூரியகாந்தின் வேலப்பா வந்தசமயம் அந்தப்படத்தை வாங்கி வந்து சுவரில் ஒட்டிஇருந்தோம்.இங்கு எல்லோருமே சூரியகாந்தின் ரசிகர்கள்தான் இவர்களுக்கெல்லாம் நான் மூத்தவன் வவா கடைசி!அனேகமாக எங்களுக்கு சூரியகாந் தெய்வமாக தெரிந்தார் .அதாவது அந்த கனவுத் தொழிற்சாலைக்கு அப்பால்ப் பட்டும் கூட! உக்கிப்போன எண்ணங்களும் உழுத்துப்போன சிந்தனைகளும்,எங்கள் தொலை நோக்கப்பார்வையை எங்கே தொலைத்தோம்? என்றுமே விட்டுவிலகமுடியாத ஒரு பனி மூட்டத்திற்குள் நாங்கள்! எங்களுக்கெல்லாம் ஒரு கடவுளாக அவரால் ஆகமுடியுமென்றால்,இதிலே எந்த இடத்தில் நாங்கள் தாழ்ந்து போய்விட்டோம். என்ற சுயசிந்தனையும் அவ்வப்போது தலைகாட்டிக்கொண்டுதான் இருந்தது

ஒவ்வொரு வருடமும் டிசம்பர்மாதத்தில் தான் எங்கள் அபிமான நட்சத்திரத்தின் பிறந்ததினம் வரும். அன்றையதினம் சூரியகாந்தின் படத்திற்கு மாலை போட்டு கேக்கூட வெட்டிக்கொண்டாடி இருக்கின்றோம். சில பத்திரிகைகள்கூட அதன் நடுப்பக்கத்தில் இதனை விமர்சையாக கொண்டாடி இருந்தன.நான் சூரிய காந்தை வாழ்த்தி ஒரு கவிதை எழுதி அது அந்தப்பத்திரிகையில் இடம்பிடித்திருந்தது .தவிர எனக்கு வேதாச்சலம் அடுத்தவருக்கு வேலப்பா என்று கௌரவப் பெயரும் சூட்டப்பட்டது.எனிமேல் வெளிவரும் படத்தின் பெயரை அடுத்த இரண்டு பேருக்கும் சூட்டவேண்டும் என்றும் நினைத்துக்கொண்டாம். "டேய் சூரியகாந் ஒரு கிழவன் மொட்டைத்தலையன்" என்று பெரியப்பா கிண்டல் செய்த போது வவாவுக்கே கோபம் வந்து அடுத்தநாள் தலையையும் மொட்டை அடித்துக் கொண்டான் என்றால் பாருங்களேன். உண்மைதான் சூரியகாந் ஐம்பது வயதைத் தொட்டுக்கொண்டு இருக்கின்றார்.ஆனால் பத்துப்பேரை ஒரே தடவையில் அடிக்கின்றார் அவரிடம் என்ன இருக்கின்றது?புரியவில்லை.ஆனால் அவருடைய வேகம்,விவேகம்,தனித்தன்மை என்பன லட்சோபலட்சம் பேரை அடிமையாக்கி இருக்கின்றது.சினிமாவில் உள்ள சக நடிகர்களோடை எல்லாம் அவரை ஒப்பிட்டுப்பார்ப்போம். அதில் தவறில்லை.ஒருரசிகனாக மட்டும் இருப்பதில் தவறில்லை.ஆனால் நாங்கள் அதற்கு மேலாய் சினிமாவுக்கு அப்பால்ப்பட்டும் அவரைஒரு பெரியவனாக நினைக்கின்றோமே அது ஏன்? என்பது எனக்கு இன்று வரை புரியவேஇல்லை. அல்லது நாங்கள் எங்கள் வீட்டுசுவரில் திருவள்ளுவரையோ பாரதியையோ அல்லது ஒரு காந்தியினுடைய போட்டோவையல்லவா மாட்டி இருக்கவேண்டும்.இல்லையே?நாங்கள் பாரதி சினிமாப்படத்தை ஒரு தடவை கூடப் பார்க்கவில்லை.ஆனால் வேலப்பாவை பத்துத் தடவை பார்த்திருக்கின்றோம்.

சினிமாவென்பது வெறும் பொழுது போக்குத்தான்.அதுவே வாழ்க்கை ஆகிவிடுவதில்லை. இது நிஜமல்ல,இந்த நிழலுக்கு உயில் கொடுக்கும் பிரபல்யங்கள் கூட அப்பப்போ தங்கள் நிஜ முகங்களையும் காட்டிக் கொள்வதுண்டு.ஒரு சமூகசேவையாளனாக, தயாளசிந்தனையுள்ள வனாக, ரசிகர்களை கவர்ந்திழுத்து மன்றம் கட்டியும் வைத்திருப்பார்கள்.இது கூட சமயத்தில் உதவும் என்பதற்காக.அவ்வப்போது பத்திரிகைகளில் வரும் சூரியகாந் பற்றிய செய்திகளை வவா தேடிப்பிடித்து வாசித்து வைத்திருப்பான். இதைத்தவிர வேறு எதையும் அவன் வாசிப்பது கிடையாது. இவர்களுக்கெல்லாம் ஒரு வேளை நானே ஒரு முன்னோடியாக இருந்து தொலைத்து விட்டேனோ. என்று நான் என்றுமே நினைத்துப்பார்த்ததில்லை.இந்த சினிமாவென்பது ஏதோ ஒரு விதமான போதைதான். அமெரிக்காவில் கறுப்பர்களுக்காகப் போராடிய மாட்டின்லூதர்கிங், கியூபா புரட்சியில் மக்களோடுமக்களாக நின்று போராடிய சேகுவரா தென்னாபிரிக்காவில் இனவெறி அரசுக்கு எதிராக போராடிய "நெல்சன்மண்டேலா, ஏன் நம்நாட்டில் தமிழுக்காக அரும் தொண்டாற்றிய "விபுலானந்தஅடிகள், தனிநாயகம்அடிகள் இவர்களைப் பற்றியெல்லாம் நாம் என்றுமே நினைத்துப் பார்த்ததில்லை [illegible],

தலைவிதியைப்பற்றி தானே சிந்திக்காது எந்தவொரு இனமுமே உருப்பட்டதாக உலக வரலாறு கிடையாது.இதைப்பற்றியெல்லாம் நினைப்பதற்கு எங்களுக்கு எங்கே நேரம்? சூரியகாந்தின் அடுத்தபடம் பற்றி சிந்திப்பதற்க்கு தான் நேரம் சரியாக இருக்கும் அது எங்கள் இனப்பிச்சினையை விட ஆவலானதும் முக்கியமானதுமானதொன்றாகவே தோன்றும் "அவருடைய அடுத்த படத்துக்கு கதாநாயகியாக "யாரைப்போடலாம்' என்று எங்கள் வீட்டில் அடிக்கடி ஒரு விவாதமே நடக்கும் "கேமாவைப்போடலாம்" என்று சிறியவர்களும் "ஜோதிகாவைப்போடலாம் என்று பெரியம்மாவும்" சுவர்ணாவைப் போடலாம் என்று நானும் விவாத்தித்தோம் ஒரு தனியார் வானொலி சேவையில் நீங்கள் சந்திக்கவிரும்பும் பிரபல்யங்கள் யார்? என்று கேட்கப்பட்டதற்கு அனேகமானவர்கள் எங்கள் சூரியகாந்தின் பெயரைத்தான் சொன்னார்கள் எங்களுக்கெல்லாம் ஒரே குதுாகலம்தான். யாருமே அன்னை தெரேசாவையோ? ஏபிரகாம்லிங்கன் பெயரையோ? சொல்லவில்லை? எங்கள்தலைவரைப்பார்த்து மற்றவர்கள் கொப்பிஅடிக்கின்றார்கள் என்று வவா வருத்தப்படுவான் இது தவிர "இதோ அரசியளுக்கு வருகின்றார" என்ற சூடான செய்தியைப்பற்றியும் நாங்கள் விவாதிப்போம் "அரசியல் என்பது சாக்கடையாக இரந்தாலும் அது இனித்தான் சுத்தப்படப்போகின்றது" என்ற நினைப்பு எங்களுக்கு காந்தி,காமராஜர் ,நேருயிக்கு பிறகு எங்கள் தலைவரினால் தான் எதோ இந்தியாவுக்கு விமோசனம் கிடைக்கப்போகின்றது என்ற எண்ணம் எங்களுக்கு. இவ்வளவும் ஏன் 'இங்கு இன்னலப்படும் எங்கள் இனத்துக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு வார்த்தைகூட பேசாத சூரியகாந் அரசியலுக்கு வந்துதான் எங்களுக்கு என்ன பிரியோசனம்" என்று பெரியப்பாகூறியபோது அதை மறுக்க என்னால் முடியவில்லை ஆனாலும் சில அடாவடித்தனமான வாதங்கள் மூலம் என்தரப்பை நியாயப்படுத்த முனைந்து கொண்டிருந்தேன் இதைத்தான் பக்திவாதம் என்பது ஒரு பொண் ஒருவனைக்காதலிக்கும் போது எதனையும் மன்னித்து விடுகின்றாளாம். தீய ஒழுங்கங்களைக்கூட ஆனால் ஒருவனை நேசிக்காத போது எதையுமே மதிப்பதில்லையாம் அவனுடைய நல்லகுணங்களைக்கூடத்தான்! இதேநிலையில் தான் நாம் இருந்தோம் எங்களுக்கு பிடித்தவர்கள் செய்யும் தவறுகளை நாங்கள் எற்றுக் கொள்ளப்போவதில்லை ஒரு வேளை நாங்கள் சரியான திசையில் சிந்திக்கவில்லையோ? சிந்தனையை வளர்த்துக்கொள்வதற்க்கு நல்ல நூல்களை வாசிக்கவேண்டும்! நல்லநூல்களை எப்படி தெரிவு செய்வது? எங்கு பெறுவது? எங்கள் கிரமங்களில்த்தான் நல்லதொரு நூல்நிலையமோ வாசிக சாலையோ கூட இல்லையே! அரசியல், பெருளாதாரம், இலக்கியம்,உளவியல், அறிவியல்,தொழில்நுட்பம். போன்ற துறைகளில் பயுன்மிக்க நூல்களை வாசித்து எங்களை எங்கள் சிந்தனைகளை நாங்கள வளப்படுத்திக் கொள்ள வில்லையோ? வெறும் பொழுது போக்குகளிலே காலத்தை கடத்திவிட்டோம் கனவு உலகிலே வாழ்ந்து தொலைத்து விட்டோம்.ஏன்? ஏன்இவ்வளவு தீவிரவாதம்! என்னை நானே கொஞ்சம் சுய மதிப்பீடு செய்யத்தொடங்கினேன் ஏனெனில் எனக்கும் வவாவுக்கும் இடையிலான இடைவெளி வெறும் வருடங்களாக மட்டும் இருந்து விடக்கூடாது அல்லவா?

இப்போது ஏங்கள் வீட்டுக்கு பெயின்ற் அடிக்கவேண்டும். இதேசாக்கில் இந்த வேலப்பாவையும் சுவரில்இருந்து அகற்றி விட வேண்டும் என்பது பெரியவர்களின் விருப்பம். இப்போ எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கவில்லை. ஆனால் இதற்கு வவா சம்மதிக்க மாட்டான். ஆனாலும் அந்தப்படம் அகற்றப்பட்டது. அன்று பாடசாலையால் வந்த வவாவுக்கு அந்தப்படம் சுவரில் இல்லாதது மனதில் பெரும் புயலை கிளப்பியிருக்க வேண்டும்! அழுதான். அடம் பிடித்தான். அவனை சமாளிக்க முடியவில்லை. அடுத்த நாள் ஒரு புதிய "வேலப்பா" படத்தைக்கொண்டு வந்து அதே இடத்தில் மாட்டிய பிறகு தான் அவன் சமாதானம் ஆனான். இதில் வியப்பென்ன இருக்கின்றது? நிச்சயமாக இன்னும் சில வருடங்களுக்கு என்றாலும் அந்தப்படம் அந்த இடத்தில் இருக்கத்தான் போகின்றது. அந்த சுவரில் கழுத்தில் மாலையுடன், கையில் வேல்லுடன் மீண்டும் புது மனிதனாக நிமிந்து நின்றார் வேலப்பா!

சு.உத்திரன் (இணுவில்)



நூலகம்
காலம்
31-03-02

பொது நூல
விழா












நல்வாழ்த்துக்கள்!
ஓம் முருகன் தொலைத் தொடர்பு
நிலையம்
local 070.212563
and
idd 0094.70


சிறப்புமலர் சிறக்க வாழ்த்துக்கள்
ரசித்து சுவைத்திட
இணுவில் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.


சிறப்பு மலர் சிறக்க இதயம் கனிந்த வாழ்த்துக்கள்
விஷன்
விஷ்ணு புத்தகளஞ்சியம்
ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு


சிறப்பு மலர் சிறக்க நல் வாழ்த்துக்கள்
ஸ்ரீ விநாயகர் தேநீர்ச்சாலை
சகல விதமான உணவு
வகைகளும் ஓடருக்கு
செய்து தரப்படும்.
ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு.

திறப்புவிழாசிறப்புமலர் சிறக்க நல்வாழ்த்துக்கள்


# கஜலட்சுமி ஜீவல்லரி



கே.கே.எஸ்.றோட்,கோண்டாவில்

அசல் 22கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் செய்துதர நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

# GAJALADSUMY JEWELLERY



470, K.K.S.ROAD,
KONDAVIL,

திறப்பு விழா சிறப்பு மலர் சிறக்க நல்வாழ்த்துக்கள்!!



# எ.பி சிவகரன் ஆட்ஸ்

- பெனர்,போட்,உருவப்படங்கள்,
- கண்ணாடி எழுத்துக்கள்,பிளாஸ்ரிக் ஸ்ரிக்கர் வேலைகள்,
- றெஜிபோம் கட்டிங்,மற்றும் அலங்காரவடிவங்கள்,

- சிறந்த முறையில் செய்திட நீங்கள் நாடவேண்டிய இடம்

## S.P .SIVAKARAN, ARTS

தொடர்புகளுக்கு

ஐங்கரன் (டொட்) கொம்
இணுவில் தெற்கு

முகவரி ~ குமரகோட்ட
கோண்டாவில்.

**K.K.S ROAD, INUVIL**



# MOIL COMMUNICATION

உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.



உள்நாடு.070.212390
வெளிநாடு.0094.70.212390

திறப்பு விழாசிறப்பு மலர்சிறக்க வாழ்த்துகின்றோம்

# யாழினி தொலைத் தொடர்பகம்

**இரவு பகல் சேவை**

வெளியூர் உறவினர் நண்பர்களது தொலைபேசி அழைப்புகளும் செய்திகளும் வாடிக்கையாளர்களின் வீட்டுக்கு உடனடியாக அறிவிக்கப்படும்.

**local .070.212670**
**idd.0094.70.212670**



4ம் கட்டைபடி,
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

திறப்புவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்



# கணபதி பந்தல்

இணுவில் மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு.

உரிமையாளர்
சி.பஞ்சாட்சரம்

---

திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# மருதவாசல் பந்தல் சேவை

இணுவில் மானிப்பய் வீதி
இணுவில் தெற்கு

---

திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# பரமேஸ் வரன் ஸ்ரோஸ்

இணுவில் மேற்கு.
இணுவில்.

---



திறப்பு விழா சிறக்க வாழ்ததுக்கள்!!

# விக்னேஸ் பந்தல் சேவை

ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
மானிப்பாய் வீதி
இணுவில் மேற்கு

மலர் சிறக்க வாழ்த்துக்கள்



# அருள் கல்வி நிலையம்

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தனித்துவம் மிக்க யாழ் முன்னணி ஆசிரியர்களால் போதிக்கப்படுகின்றன.



திறப்பு விழா சிறப்பு மலர் சிறக்க வாழ்த்துக்கள்.

# கேவிகா உலோகக்கலையகம்

உரிமையாளர்:

உலோகத் தொழிலதிபர் (U.X.D)
உலோகத் தொழில் விற்பன்னர்
உலோகத் தொழில் நிபுணர்
உலோகக்கலைமாணி

எல்.கெங்காதரன் (ஆச்சாரி)
314.காங்கேசன் துறை வீதி
யாழ்ப்பாணம்.

# சிறுவர் நூலகங்கள் வாசிப்புப் பழக்கதிற்கு அடித்தளம்

வாசிப்புப் பழக்கம் இரண்டு விடயங்களில் தங்கியுள்ளது ஒன்று வாசிப்பதற்கான ஆற்றல்,மற்றையது வாசிப்புக்கான வசதிகள் ஆகும் வாசிப்புக்கான ஆற்றல் எழுதும், படிக்கும் திறமையை அளிக்கும் கல்வி முறையில் தங்கியுள்ளது,எமது நாட்டைப் பொறுத்தவரையில் மேற்க்குறிப்பிடப்பட்ட இரண்டிலுமே பின் தங்கிய நாடாக உள்ளது.

எமது நாட்டின் பொருளாதாரப்பிரச்சினை வாசிப்புப்பழக்கத்தை மிக மோசமாகப் பாதிக்கின்றது .வளர்ச்சியடைந்த நாடுகளில் வருடாந்தம் ஒவ்வொருமனிதனும் 2000 பக்கங்கள் வாசிப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் சராசரி வாசிப்பு விகிதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. வருடாந்தம் 100 பங்கங்கள் கூட ஒரு மனிதனால் வாசிக்கப்படுவதில்லை. பொருளாதாரநிலை காரணமாக எம் நாட்டில் கற்றவர்கள் மத்தியிலும் கூட வாசிப்புப் பழக்கம் அபிவிருத்தியடையவில்லை. வாசகர்களுக்கு குறைந்தவிலையில் நூல்களை வீற்கக் கூடியதாக எமது நாட்டு அச்சு கைத்தொழில் விருத்தியடையவில்லை.
நூல்களின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.உதாரணமாக. (Back books) நூல்களை அச்சிடுதல் போன்றவை.

வாசிப்புப் பழக்கம் மனிதனின் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்க வேண்டுமாயின் அது மிக இளமைப்பருவத்திலிருந்தே வளர்க்கப்பட வேண்டும்.ஒவ்வொரு இளம்பிள்ளைக்கும் வாசிப்பதற்கான வசதிகள் பாடசாலையிலும் வீட்டிலும் கிடைக்கவேண்டும். மிக இளமைக்காலத்திலேயே பிள்ளைகள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை நாம் வளர்த்து விட்டால் அவர்கள் பின்னர் தம் வாழ்நாள் பூராகவும் இதைத் தொடர்வார்கள். இத் தேவைக்காக சிறுவர்களுக்கான நூலகங்கள்வளர வேண்டும். நூல்கள் சஞ்சிகைகளை சிறுவர்களின் தரத்திற்கேற்ப அச்சிடுவதற்கு அச்சகங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஆன்றோரின் முதுமொழி .இளஞ்சிறுவர்களின் உள்ளங்களைப்பக்குவப்படுத்தி சமூகத்தில் நல்லவராகவும் ,வல்லவராகவும் வாழத் தகுந்த பாதையைக் காட்டி அறிவாரோக்கியமான ஒரு சமுதாயத்தை உருவாக்க உதவுவதே நூலகங்களின் தலையாய பணியாகும் .சிறுவர் நூலக வாசகர்களே காலக்கிரமத்தில் வளர்ந்து வாசகர்களாக உருவாகின்றனர். அறிவுத்தேடலுக்கான பாதையின் நுழைவாயில் சிறுவர் நூலகங்களாகும். இளம்பிராயத்தினரது களங்கமற்ற பிஞ்சு உள்ளங்களில் ஏற்படும் மாசற்ற கருத்துக்களும் கொள்கைகளுமே அவர்கள் வளரும்போது வலுவடைகின்றன.

சிறுவர் நூலகங்கள் நூற்றாண்டுகளுக்கும் மேலானா வரலாற்றைக் கொண்டுள்ளபோதிலும்.அதன் பால் அதிகளவில் அக்கறை செலுத்தப்படாமையால் சிறுவர் நூலக அபிவிருத்தி மந்த கதியிலேயே நடை பெறுகின்றது. உலகின் முதலாவது நவீன நூலகம் ஜக்கியஅமெரிக்காவில் பொஸ்டன் நகரில் 1854ம் ஆண்டு உருவாகியதென்பது வரலாறாயினும் அங்குகூட சிறுவர்களுக்கான தனிநூலகமோ, ஒரு பகுதியோ

ஒதுக்கப்படவேண்டுமென்ற சிந்தனை ஏற்படவில்லை.ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட நூலகஉணர்வினால் 1890 ஆம் ஆண்டு சிறுவர் நூலகங்களை உருவாகுதற்கு வழி ஏற்பட்டது. சிறுவர் நூலகம்என்பதிலும் பார்க்க சிறுவர் அறைகள் என இவற்றைக் குறிப்பிடலாம்.நூலகத்தின் ஒரு ஒதுக்குப்புறப் பகுதியை,ஆழமான ஆய்வில் ஏற்பட்டமுதிய வாசகர்களின் அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் சிறுவர் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

1893 இல் 10வயதிற்கு மேற்பட்டோர் நூல் இரவல் பெறலாம் என்ற விதி அமுலுக்கு வந்ததும் சிறுவர்நூலகம் தன் பரிமாணத்தில் குறிப்பிடத் தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து 1910இல் சிறுவர் நூலகங்கள் முழுமை பெற்றன.இலங்கையில் பொதுநூலகங்கள் அமைப்பதில் கொழும்பு முன்னோடியாக இருந்த போதிலும் சிறுவர் நூலகங்கள் பற்றிய சிந்தனையைச் செயலுருப்பெறவைத்த வகையில் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் சிறுவர் பிரிவு தொடபான சிந்தனை அறுபதுகளிலே மலர ஆரம்பித்து விட்டது.

துரித கதியில் நடைபெற்ற பல நடவடிக்கைகளின் விளைவாக 1967ம் ஆண்டு நவம்பர் 3ம் திகதி யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சிறுவர்நூலகம் ஆரம்பிக்கப்பட்டது யாழ்ப்பணாப்பொதுநூலகத்தில் சிறுவர் நூலகப் பகுதி உருவாகிய காலகட்டத்தில் தமிழ்ப்பிரதேசத்தில் இன்னும் சில நகரை அண்டிய நூலகங்களில் இப்பிரிவு அமைக்கப்பட்டது. சிறுவர் நூலகம் பற்றிய போதிய கருத்துவளர்ச்சி பெற்றிராமையாலும் இடப்பிரச்சினை,போதிய நூல் வசதியின்மை போன்ற நடைமுறைச்சிக்கல்களாலும் சிறுவர்நூலகங்கள் இன்றுவரை சிறந்முறையில் அபிவிருத்தி காணமுடியாதுள்ளதை காணக்கூடியதாயுள்ளது.

1945ம் ஆண்டில் இலங்கையில் இலவசக்கல்வி முறை அறிமுகப்படுத்தப்படது. 1960ம் ஆண்டு பாடசாலை நூலகங்கள் தொடர்பான முதலாவது சட்டம் ஆக்கப்பட்டது.1967ம் ஆண்டு இலங்கையின் கல்வி நூற்றாண்டு நிறைவையொட்டி நாடெங்கிலும் 100 புதிய பாடசாலை நூலகங்கள் நிறுவப்பட்டன.இது படிப்படியானதொரு வளர்ச்சியை அடைந்து வந்துள்ளது. எமது பிரதேசங்களைப்பொறுத்தவரையில் பாடசாலை நூலகங்களின் அதிகரிப்பு வீதத்திற்கேற்ப அதன் சேவைத்தரம் வளரவில்லை நடைமுறையில் பாடசாலை நூலகங்கள் பெயரளவிலேயே இருக்கின்றன. இன்று பாடசாலை நூலகங்களின் சேவை புதியதொரு கண்ணோட்டத்தில் நோக்கப்பட வேண்டியுள்ளது. இன்றைய கல்வித்திட்டமுறை நூலகங்களை நாடி மாணவர்கள செல்ல வைப்பதாக அமைகின்றது.

சிறுவர் நூலகங்கள் எமது கிராமப்புரங்களில் இல்லாத காரணத்தால் சிறுவர் நூலகங்களின் சேவையினையும் பாடசாலைநூலகங்களே பொறுப்பேற்க வேண்டிய நிலையில் உள்ளன. பாடசாலைக்குரிய பாடவிதானத்துடன் மட்டும் தன் சேவையினை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் சிறுவர்களின் பொதுவான வாசிப்புப் பயிற்சிக்கேற்றதும் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதுமான சிறுவர் இலங்கியங்களையும் ஒரு பாடசாலை நூலகம் கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளது.

ஒரு சிறுவர் நூலகத்தின் அடிப்படை நோக்கம் நல்ல வாசகர்களை உருவாக்கலும் அதற்கான வழி காட்டலும் ஆகும். நல்ல நூல்களை வழங்கி அவர்களுக்கு வாசிப்பின் பால் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்திவிட்டால் பின்னர் சிறுவர்கள் தமக்கு தேவையானவற்றை எப்படியாவது பெற்றுக் கொண்டு விடுவார்கள். குழந்தைகளின் வாசிப்பினை நெறிப்படுத்தலில் நூலகர் கவனம் செலத்தல் வேண்டும். சிறுவர்களை நெறிப்படுத்த பயிற்றப்பட்ட தரமான ஊழியர்கள் அவசியம்.

இளைய வாசகர்கட்கு உதவி செய்யவும் வழி காட்டவும் ஊக்கமளிக்கவும் கற்பிக்கவும் விரிவாக்க நடவடிக்கைகளை செய்யவும் இவர்கள் அவசியம். சிறுவர் நூலகர் இளகிய மனத்துடனும் எவ்விதத்திலும் தன்னைச் சிறுவர்கள் சுலபமாகக் கருதாதவகையிலும் கடமை புரிதல் வேண்டும்.அவர் தானாகவே பழக்கங்களிலும் அசைவிலும் ஒரு அமைதியான ஓழுங்கான சூழலை உருவாக்கிக் கொள்ளவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உண்மையில் குழந்தைகளை விரும்புபவராயும் சிறுவர்களுக்கான நூல் அபிவிருத்தி யில் நாட்டமுடையவராயும் இருத்தல் வேண்டும். இவ்வாறான ஒரு நூலகரே குழந்தைகளின் வாசிப்பினை நெறிப்படுத்தலில் கவனம் செலுத்த முடியும். ஓர் ஓழுங்கு முறையினை சிறுவாசகர்கள் பின்பற்றப்பயிற்றுதல் அவசியம் சிறுவர்களின் விருப்பு வெறுப்பை நன்கு அறிந்து அவர்களின் மனதில் மாறுதல் உண்டாகும் பருவத்தைக் கண்டறிந்து அதற்க்கேற்ற நூலை வழங்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்யவேண்டுமாயின் நூலகர் சிறு வாசகர்களுடன் நெருங்கிய உறவை வளர்ப்பதன் மூலமே இதனைச் சாத்தியமாக்கலாம். ஒருவருக்குச் சிறுவயதில் நூலகங்களின் பால் ஏற்ப்படும் ஈடுபாடு அவருக்கு வாழநாள் முழுவதும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்ப்படுத்துகின்றது.

குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கு் ஏன் இளைஞர்களுக்கும் கூட பிறந்த நாள் பரிசில்களாக நூல்கள் வழங்கப்படுவதை தூண்டவேண்டியது நூலகரின் கடமையாகும். இத்தகைய பரிசில்கள் இவர்களை வாசிப்பின் பால் ஆர்வம்கொள்ளச் செய்வதுடன் நூல் வெளியீட்டாளர்களுக்கும் ஒரு நம்பிக்கையை ஏற்ப்படுத்தும்.நன்மை பயக்கக் கூடிய நூல்களின் தொடர்பை நூல்நிலையத்தின் தொடர்பை சிறுவர்கள் மனதில் ஏற்படுத்த தவறுவார்களாயின் வாழ்க்கையின் பிற்காலத்தில் வாசிப்பினால் அடையக்கூடிய நன்மைகளை அவர்கள் பெற வழிகாட்ட தவறியவர்களாவர்.சிறுவர் நூலகங்களின் ஊடாக நூலகர்கள் ஆரம்பிக்கப்பட்ட வாசகர்களை வழி நடத்தும் போது திட்டமிட்டுச் செயற்ப்ப டுவதன் மூலம் உளவியல் ரீதியாக நூல்களின் பால் ஒரு உறவை வலுப்படுத்தி வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதோடு நூல்களுக்கு வாசகர்களால் ஏற்ப்படக்கூடிய பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஜப்பானில் இளம்பிள்ளைகள் மத்தியில் வாசிப்புப்பழக்கத்தை வளர்ப்பதற்காக பல்வேறு சுவாரிசியமான முறைகள் பரீட்சித்துப்பார்க்கப்பட்டன. இவற்றில் ஆகக்கூடுதலான வெற்றியை அளித்தது. காதினால் வாசிப்பு (சநயனபெ டில நயச) முறையாகும். இம் முறைப்படி பெற்றோர் பிள்ளைகளை வாசிக்கும் படி வற்ப்புறுத்துவதோ, பணிப்பதோ கிடையாது. இதற்ப்கு பதிலாக பிள்ளைகள் பாடசாலையில் சேர்வதற்க்கு முன்னரே பெற்றோர் பிள்ளைகளுக்குப் பிடித்தமான கதைகளை பிள்ளைகளுக்கு

முன்னிலையில் உரத்துவாசிப்பார்கள். அப்போது மிகவும் குறும்புக்காரப் பிள்ளைகள் கூட ஆர்வத்துடன் கதை கேட்பதை அவதானிக்கலாம். இம்முறையினால் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஆறுதலாகவும் படிப்படியாகவும் வளர்க்க முடியும் இம் முறையினால் பிள்ளைகளுக்கு வாசிக்க கூடிய ஆற்றல் வந்த பின்பு தாமாகவே வாசிக்கும் பழக்கத்தை ஏற்ப்படுத்திக் கொள்ளவர் இக் காதினால் வாசிப்பு முறையால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உள்ள நெருக்கம் கூடுவதை அவதானிக்க முடிகிறது. ஜப்பானியப் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகத்தொடங்கியதும் பாடசாலை நூலகத்தில் இருந்து நூலை இரவல் எடுத்து வந்து வீட்டில் வாசிக்கின்றார்கள். பிள்ளை வாசித்த நூல்களின் பெயரையும் பங்கங்களின் எண்ணிகையையும் பெற்றோர் பிள்ளைகளின் கையேட்டில் எழுதி ஒப்பமிடுவார்கள் ஆசிரியர் கையேட்டைப் பரீசீலனை செய்து பிள்ளையை உற்சாகப்படுத்தி மேலும் கூடுதலாக வாசிக்க வைப்பார்கள்.இவ்வாறான மேலத்தேய முறைகள் மூலம் நம் நாட்டிலும் வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்து சிறந்த அறிஞர்களை நூலகங்கள் உருவாக்கி நாட்டிற்கு அளிக்கலாம்.

திருமதி .இ.கருணானந்தராஜா
சிரேஷ்ட உதவி நூலர்
யாழ் பல்கலைக்கழகம்.

**இனிமேல் இணுவிலும் இணையத்தில்.**

இந்த நூற்றாண்டின் சிறந்த கண்டு பிடிப்பு என்றால் அது இணையம் தான் (INTERNET) இது 1960 இல் அமெரிக்காவில் இராணுவத் தேவைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது.1990 இல் இதனைப் பல்கலைக்கழகங்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும் பாவிப்பதற்கு ஆரம்பித்தன.இன்று நாங்களும் அதனை பயன்படுத்தி உலகத் தமிழ்ர்களுக்கு எல்லாம் பயன் உள்ளதாக மாற்றியுள்ளோம் மற்றைய நாடுகளில் நூல் நிலையங்கள் இணையத்தில் வலம்வரத் தொடங்கிவிட்டன. அதே வேளையில் இலங்கையில் முதலாவது இணையநூலகம் என்ற பெருமையை இணுவில்பொதுநூலகம் பெறுகின்றது

**இணைய நூலகம். ( *E.LIBRARY* )**

இணையத்தில் இணுவில்பொது நூலகம் இடம்பெறுவதால் இது இணுவில் பொது மக்களுக்கு மட்டும் சொந்தமானது ஒன்றல்ல உலகத்தமிழர்களுக்கே சொந்தமானது .

இதில் புத்தக ஆசிரியரின் அனுமதியோடு புத்தகங்கள்(TYPE) தட்டச்சு செய்யப்பட்டு (WWW,INUVILLIBARARY.COM) என்ற முகவரியல் சேமித்து வைக்கப்படும். எல்லோரும் தங்கள் வீடுகளில் இருந்து மேற்படி முகவரியினூடாக (INTERNET) இணையும் போது புத்தக்களை வாசிக்கவோ தேவைஏற்ப்படின் பிரதி எடுக்கவோமுடியும்.இது மட்டுமல்ல.

என்ன புத்தகங்கள் நூலகத்தில் இருக்கின்றன (முழுமையாக வெளியிடப்படாத புத்தகங்கள்) என்ற விபரங்களும் இடம் பெறும். இணுவிலின் சிறப்புக்கள் கோவில் திருவிழாக்கள் புகைப்படங்களுடன் வெளியிடப்படும்.இந்த இணையத்தினுடாக இணுவில் அல்லது அண்டிய கிராமங்களில் இடம் பெறும் விடயங்கள் செய்திகளாக வெளியிடப்படும் புலம்பெயர்ந்து உலகெங்கும் பரவி வாழும் எங்கள் ஊர்மக்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும்.தொடர்ந்து இந்தசேவை ஏனையமக்களுக்கும் பயனுள்ளதாக மாற்றமடையலாம்.

இந்நூலகத்தினூடக ஆரம்பிக்கப்படும் மின் அஞ்சல் சேவை (E.MAIL) எல்லா மக்களுக்கும் ஒரு வரப்பிரசாதம்.வெளிஇடங்களில் உள்ள எவருக்கும் எமது பொதுநூலகத்தின் கணனிப்பிரிவின் ஊடாக மின்அஞ்சலை அனுப்பலாம்.அதற்கான பதிலை (E.MAIL@INUVILLIBARARY.COM) என்ற முகவரிக்கு அனுப்புவராயின் அது உரியவர்களிடம் சேர்ப்பதற்க்கான நடவடிக்கைகள் செய்யப்படும்.அதனால் எங்களுடைய கணனிப் பிரிவு எல்லோருக்குமான பிரிவாக செயற்படும். இந்த இணையத்தை ஒரு விளம்பரப்பலகையாகவும் பயன்படுத்தலாம். அதாவது பத்திரிகையில் வரும் விளம்பரப்பகுதி போல திருமண,பிறந்தநாள் வாழ்த்துக்களை பிரசுரிக்க முடியும். அத்துடன் மரணஅறிவித்தல் உடனுக்குடன் உலகெங்கும் தெரிவிக்கப்படும்.

எமது நூலகத்தின் இணையத்தின் பிரிவினால் நடாத்தப்படும் திருமணசேவை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் இதில் திருமணம் செய்ய விரும்பும் மணமகனோ மணமகளே பிரசுரிக்கவிரும்பும் தங்களுடைய விபரங்களை பிரசுரிக்கலாம் பின்பு அதற்கான பதில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் .உலகெங்கும் வரவிருக்கும் தொழில்நுட்ப மாற்றங்கள் உடனுக்குடன் இணுவிலையும் சென்றடைய வைப்பதே இணையத்தளத்தின் பாரிய நோக்கமாகும். அதாவது உலகெல்லாம் உள்ள இணுவில் மக்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக ஒரு கணனியின் முன் கொண்டு வருகின்றது.

இணையத்தளம்:- WWW.INUVILLIBRARY.COM
இணுவில் பொது நூலக மின்அஞ்கல்:- INUVIL@INUVILLIBRARY.COM
கொழும்புக்கிளை மின் அஞ்சல்:- COLOMBO@INUVILLIBRARY.COM
இலண்டன் கிளை மின் அஞ்சல் :-LONDAN@INUVILLIBRARY.COM
மக்கள் தொடர்பு மின்அஞ்சல்:-E.MAIL@INUVILLIBRARY.COM

இணையத்தளப் பொறுப்பாளர் திரு. கு.பதிதரன் (குரு)
உதவியாளர்கள் திரு.சி.பிரதீபன்
திரு.கு.ஜெயசீலன்

# யாழ்ப்பாணத்தில் வாசிப்புப் பழக்கம்.

கல்வி ஈடுபாடுகொண்டதாக தன்னை கருதிக்கொள்ளும் எந்த சமூகமும் முதன்மையாக செய்து கொள்ளும் ஆய்வுப்பணிகளில் ஒன்று அச்சமூகத்தில் நிலவும் வாசிப்புபழக்கம் பற்றிய முறையான ஆய்வாகும்.


துரதிஷ்டவசமாக யாழ்ப்பாணத்தில் கடந்த இருபது இருபந்தைந்து வருடங்களில் அத்தகைய ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வாசிப்புப் பழக்கம்பற்றிய ஆய்வுக்கான சூழல் கடந்த இருபத்தைந்து வருடங்களாக இருக்க வில்லை என்பது உண்மை எனினும் வாசிப்பு பற்றிய புலமைச் சிரத்தை இருக்கவேண்டிய மட்டங்களிலே அது பற்றி ஒரு சிறு சலிர்ப்புத்தானும் காணப்படாதது ஆச்சரியமே.சனநாயகசெழுமைக்கும் ,ஆளுமைக்கும் வாசிப்பு அத்தியவசியம் படிப்பை வாசிப்பென மயங்கி விடுதல் கூடாது யாழ்ப்பாணம் ஒரு பழக்கும் சமுதாயமே தவிர வாசிப்பு வீச்சுள்ள சமுதாயம் என்று சொல்லி விட முடியாது.எமது கல்விமுறை, அதனிலும் மேலாக,கல்வியின் பயன்பாடு பற்றிய எமது சமூகநோக்கு,பரந்துபட்ட வாசிப்புக்கு இடம் வழங்கு வதில்லை.பல்கலைக்கழகமட்டத்திலும் வாசிப்பு தரும் புலமைச்சுதந்திரம் மாணவரிடையே வளருவதை மானசீகமாக ஊக்குவிக்கும்.ஆசிரியர்கள் மிக குறைவே இத்தகைய ஒரு பின் புலத்திலே தான்,யாழ்பாணத்து வாழ்க்கைநிலைப்பாட்டின் அச்சாணி அம்சங்களின் ஒன்றாக அமையும் "சனசமூகநிலையம்" ஒரு முக்கிய நிறுவனமாக எனக்கு காட்சி தருகிறது.


யாழ்ப்பாணத்தில் சனசமூக நிலையத்துக்கு ஒரு சமூகநிலையில் முக்கியத்துவம் உண்டு யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் அககிரமத்தின் சமூகஅலகுகளான வட்டாரம், தெரு,சாதிக்குடும்பம் ஆகியனவற்றின் மட்டத்தில் ஒரு சனசமூகநிலையம் இருக்கும் இந்த சனசமூகநிலையத்தில் ஒரு "வாசிகசாலை" இருக்கும் அந்த வாசிகசாலையில் குறைந்தது இரண்டு புதினத்தாள்களாவது இருக்கும் இந்த நிறுவனங்களுக்கு சமூக அங்கீகாரம் உள்ளது. உண்மையில் சமூகசின்னமாக - குறியீட்டாக்கப்பட்டுள்ளது (சில வேளைகளில் இந்த நிலையங்களில் விளையாட்டுக்கழகங்களும் உண்டு)யாழ்ப்பாணத்தின் வாசிப்பை ஊக்குவிப்பதற்கான மையம் இது. வாசிப்புப்பழக்க விருத்தியில் கவனம் செலுத்துவோர் முதலில் மனதில் வைக்க வேண்டியது வாசிப்பின் தர வேறுபாடு ஆகும் இத்தரவேறுபாடு வாசிப்போரின் வயது அடிப்படையில் நோக்கப்படும் பாலர்,சிறுவர்,இளைஞர்,வயதுவந்தோர். போன்ற ஒரு பகுப்பு அவசியம்.வாசிப்புக்கான நூல்கள் வயதடிப்படையில் வழி வரும் உள நிலைத்தரத்தைப் பற்றிப் பிரதான கவனம் செலுத்துதல் வேண்டும் ,வாசிப்புக்கான நூல்கள் அவற்றின் தரம் எவ்வளவு முக்கியமோ வாசிப்பதற்க்கான சூழலை அந்த வாசிகசாலையிலே ஏற்படுத்துவது அதைவிட முக்கியமாகும்.

ரியூசன் என்ற ஒன்றே யாழ்ப்பாணச் சிறார், இளைஞர்களின் முழுவாழ்க்கையாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் படிப்புக்கு அப்பாலே "வாசிப்பு" என்ற ஒன்றும் உண்டு, அது ஆளுமை வளர்ச்சிக்கு உதவுவது என்பது பற்றிய ஞானம் இதனை இணுவில் பொது நூலகமும் தொடங்கட்டும்


அன்புடன்
கார்திகேசு சிவத்தம்பி.
பேராசிரியர்











M. MANIMARAN
(PROFESSIONAL PHOTOGRAPHER)
MAARAN
VIDEO & PHOTO
143/5/6 MESSENGER STREET,
COLOMBO - 12.
TEL : 072 - 424110




இன்று புதுப் பொலிவுடன் காணும்
இணுவில் பொது நூலக
திறப்பு விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
அற்புத கலைநயம்; நீபாவின் அதிசயத் தொழில் வளம்
அபூர்வ வடிவங்கள்; அத்தனையும் அழகிலும் அழகு!
பரிசுத்த தங்கத்தில்; எந்நாளும் தெரிவதோ பொலிவு!!
தரித்து வாரீர், நவரத்தினத்தின் புதுமையைக் காணீர்.
NEEPA JEWELLERY
Genuine 22 Carat
309-2/4, Galle Road, Colombo - 06
T.P. 505942
V-1
V-3

**பொது அறிவு**

*முதலாம் உலக மகாயுத்தம் 1914 - 1918 காலப்பகதியில் நடை பெற்றது. ஆஸ்தியாவின் இளவரசன் கொலை செய்யப்பட்டது இவ் யுத்தத்துக்கு காரணமாய் அமைந்தது

மூ 2ம் உலக மகாயுத்தம் கிட்லர் போலந்தை கைப்பற்றியதைத் தொடந்து 1937-1945 காலப்பகுதியில் இடம் பெற்றது. இவ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அமெரிக்கா யப்பான் மீது அனுக்குண்டை வீசியது இதனால் இலட்ச்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.ஐக்கிய நாடுகள் சபை 1948ல் உருவாக்கப்பட்டது.

* 1947ல் ஸ்ரேல் என்ற யூதர் இனத்தைக் கொண்ட நாடு உருவானது

* 1971ல் இந்திய பாக்கிஸ்தான் போர் காரணமாக பாக்கிஸ்தானில் இருந்து பங்களாதேஸ் என்ற நாடு உருவாக்கப்பட்டது

* 1972ல் வோட்ட கோட் ஊழல் வழக்கில் அமெரிக்க ஜனாதிபதி பதவி இழக்க நேரிட்டது.

* 1968- 1975 அமெரிக்க வியட்நாம் யுத்ததின் காரளமாக 56000 அமெரிக்கப்படையினரும்,1300000 நியட்நாம் போரளிகள் மற்றறும் பொது மக்கள் கொல்லப்பட்டன.

* 1982 - 1988 ஈரான்,ஈராக் பல ஆயிரக்கனக்கான மக்களும் படை வீரர்களும் மாண்டனர்

* 1989 மேற்க்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி பேர்லின் சுவர் உடைக்கப்பட்டு ஓரே ஜேர்மனியானது

* 1991 ஈராக் குவைத்தை ஆக்கிரமித்த போது அமெரிக்க குவைத்துடன் இணைந்து ஈராக்குடன் மோதியது.

* 1977,1999 பாகிஸ்தானில் இராணுவப்புரட்ச்சி மூலம் பிரதமர் பதவி கவிழ்க்கப்பட்டு இராணுவம் ஆட்ச்சியை கைப்பற்றியது

* 1989ல் தியனென் மென் சதுக்கத்தில் ஆயிரக்கனக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது இராணுவம் தாக்கி இரண்டாயிரம் பேர் மரணமடைந்தனர்.

* கிழக்கு ஐரோப்பாவில் பல நாடுகளில் சோசலிசத்தை கைவிட்டது

* ஸ்ரோமோன்ற் (STORMONT) ஒப்பந்மம் என்பது அயர்லாந்து பிரச்சினை தொடர்பாக 10- 04-1998 ஏற்ப்பட்ட பெரிய வெள்ளி ஒப்பந்தம்மாகும்

* 1972ல் இந்தியரவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்ப்பட்ட யுத்தத்தின் பின்"சிம்லா" ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இவ் விரு நாடுகளின் ஏல்லைகளில் தற்பொழுதுபதட்டம் நிலவி வருகின்றது

* ஒஸ்ல்லோ உடம்படிக்கை ஸ்ரேல் - பாலஸதீனம் ஆகிளவற்றின் இடையே ஏற்படுத்ப்படுகின்றது

* மற்றிச்சு ஒப்பந்தம் என்பது (**Euro**) ஒப்பந்தத்தின் மூலம் 11 நாடுகள் பொதுவான யூரோ நனயத்தை ஏற்றுக் கொண்டனர் இறிதியாக 2001 ம் ஆண்டு கிரேக்கம் அணைந்து கொண்டது பிரிட்டன்,டென்மார்க் சுவீடன் இன்னும் இணையவில்லை

* உலகிலே நாலாவது அரசு என்று குறிப்பிடபடுபவை புத்திகைகள்

* கருணைக் கொலையை முதல்முதலாக ஏற்றுக் கொண்ட நாடு நெதர்லாந்து

* இலங்கையின் பொருளாதாரம் மிகவும் நலிவடைந்து சென்று கொண்டிருப்பதால் நாணய மாற்று வீதத்தை 1977.11.15 முதல் அறிவித்து வந்த இலஙகை மத்திய வாங்கி 23.01.2001 இதில் இருந்து விலகியது இதனால் டெலரக்கொதிரான ரூபாவின் பெறுமதி விழ்ச்சி அடைந்தது


* அமெரிக்கவில் உலக வர்த்த மையம் மற்றும் பெட்டகன் மீதும் விமானங்கள் மோதி தாக்குதல் நடத்தப்பட்டது இதன் பின்னியில் இருந்த பயங்கரவாதி ஒசாமபின்லேடனையும் அவரது அல்கெய்டா மற்றும் தலிபான் அமைப்பையும் தேடி அழைக்கும் நோக்கில் அமெரிக்கவும் வேறு மேற்கு நாடுகளும் ஆப்க்கான் மீது தாக்குதல் நடத்தின

* உலகிலே கடிதம் மூலம் பரப்பப்பட்ட அந்தி ரேக்ஸ் கிருமி அமெரிக்காவிலும் மற்றும் மேற்று நாடுகளிலும் அச்சத்தை ஏற்ப்படுத்தியது

**சேது தலைமன்னார் . தனுஸ்கோடி திட்டம்**

சேது சமுத்திரதிட்டத்தின் மூலம் தென் இந்தியாவில் கரையோர கடல் பகுதி ஆழமாக்கி கடல் போக்கு வரத்துக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் இதன் மூலம் இந்து சமுத்திரப்பகுதியில் தழிழ் நாட்டுக்கரையோரத்தில் தூத்துக்குடி துறைமுகத்தை மிக சிறந்ததாக மாற்ற வாய்பு ஏற்ப்படும் இதனை தடுக்கும் நடவடிக்கையாக தலைமன்னாருக்கும் தனுஸ்கோடிக்குமிடையே இலங்கை முதலீட்டு சபை 300கோடி அமெரிக்க டொலர் செலவில் பாலம் அமைக்க திட்டமிட்டு இருப்பதாகும் இதனை செய்வதன் செய்தன் மூலம் சேது சமுத்திரத்திட்டத்தை கைவிடச்செய்லாம் (22மைல் தூரம் தலைமன்னார்--- தனுஸ்கோடி)

தே.திருமுருகராஜன்
(ஆசிரியர்)


திறப்புவிழா சிறப்புமலர் சிறக்க வாழ்த்துகின்றோம்!!
ஐங்கரன் பந்தல் சேவை
இணுவில் மேற்கு.
வில்லுப்பந்தல்
சொக்கட்டான்பந்தல்
சிங்கப்பூர் சோடனை
பிளாஸ்ரிக்கதிரை
இரும்புக்கதிரை
சிங்கப்பூர் தலைச்சோடனை
மற்றும் மங்களகரமான
விழாக்களுக்கு
தேவையான அனைத்துப் பொருட்களும்
பெற்றுக் கொள்ளலாம்.
ஐங்கரன் பந்தல் சேவை,
ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,
இணுவில் மேற்கு. தொ.பேசி.070.212636

மலர் சிறக்க நல் வாழ்த்துக்கள்.

சகலவிதமான பந்தல்கள்,பிளாஸ்ரிக்கதிரைகள்,
பூ வேலைகள் அனைத்துக்கும் ஒரே இடம்



## அனுஷா பந்தல் சேவை



கோண்டாவில், மேற்கு.
கோண்டாவில்.

மலர் சிறக்க நல் வாழ்த்துக்கள்.

சுவைத்து மகிழ



## கல்யாணி கிறீம் ஹவுஸ்

73.கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்

மலர் சிறக்க வாழ்த்துக்கள்.



சலக விதமான சிற்றுண்டி
நீங்கள் நாட வேண்டிய வகைகளுக்கும்
இடம்

## [illegible]

கே.கே.எஸ் வீதி,
தாவடிச்சந்தி.

சகல விதமான அலங்காரப்பந்தல்களுக்கும்.


## பிரசன்னா பந்தல் சேவை

- அலங்காரப்பந்தல்,
- சொக்கட்டான் பந்தல்,
- வில்லுப்பந்தல்,
- மணவறை,

கோண்டாவில்,

திறப்பு விழா சிறப்பு மலர் சிறக்க நல் வாழ்த்துக்கள்.

# உயமன் ஸ்ரோர்ஸ்



பலசரக்கு பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்பு பொருட்கள்

ஆகியவை மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்.

---

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்.

# Pettah Essence Suppliers

SUPPLIERS TO CONFECTIONERS & BAKERS IMPORTERS OF ALL KINDS OF FOOD COLOURS ESSENCES, CHEMICALS, GROCERIES ETC.

104, Hospital Road,
Jaffna.

Phone:021.2386

---

மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்.

# N.A.R & CO

**கோயில் அபிஷேக பொருட்கள் ,யானைமார்க் சந்தனாதி தைலம் வாசனைத் திரவியங்கள்**

**☞ தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்**

**N.A RAJARATNAM &CO**

இணுவில் தெற்கு,
இணுவில்
யாழ்ப்பாணம்.


மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்!!
சகல விதமான மரத்தளபாட வேலைகளுக்கும்..
ஐயாத்துரை மரத்தொழிலகம்
உரிமையாளர்,
ஐ.ஜெகதீஸ்வரன்

திறப்பு விழா சிறப்பு மலர் சிறக்க நல்வாழ்த்துக்கள்.

# பிரவின்ஜா ஜீவல்லறி

ஆலடி~ மானிப்பாய் வீதி

**நங்கையர் மனங்களுக்கு ஏற்ற தரமான நகைகளை**

**அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்**



கிளை நிறுவனம்:

## [illegible] நகைமாடம்

கே.கே.எஸ் வீதி இணுவில் சந்தி

**தங்கநகை உலகில் மங்காப் புகழ் பெற்றவர்கள்**

# இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்
# கொழும்புக்கிளை
## நிர்வாக சபை உறுப்பினர்கள்

**அமைப்பாளர்.** திரு.இ.சற்குருநாதன்.

போசகர். திரு.பே.கருணானந்தம்
திரு.அ.பற்குணன்

| | |
|---|---|
| **தலைவர்:** | திரு. சு.பரமேஸ்வரலிங்கம்(உத்திரன்) |
| **உ.பதலைவர்:** | திரு. சி.அசோகன் |
| **செயலாளர்:** | திரு சி.அரவிந்தன் |
| **உ.பசெயலாளர்:** | திரு .க.வீரசத்திரூபன் |
| **பொருளாளர்:** | திரு .செ.உமாகாந்தன்(உஷன்) |
| **உ.ப பொருளாளர்.** | திரு. சி.ராஜ்க்குமார் |
| **பத்திராதிபர்:** | திரு .பொ.சிவகரன் |
| | திரு .க.இராகுலன் |
| **இளைய நூலகம்:** | திரு. கு.பதிதரன்(குரு) |
| | திரு .கு.ஜெயசீலன் |
| | திரு .சி.பிரதீபன் |
| **ஒருங்கிணைப்பாளர்:** | திரு. செ.பாலசுப்பிரமணியம் |

### ஆலோசகர் குழு

திரு.ஆ.இராசரத்தினம்
திரு.ஆ.ரகுபதிபாலசிறீதரன்
திரு.கே.லோகநாதன்
திரு.இ.சிவலோகநாதன்
திரு.அ.செல்வநாயகம்
திரு.கு.சிவசுப்பிரமணியம்
திரு.ஆ.குணரத்தினம்
திரு.மா.தேவராஜா
திரு.சி.அமிர்தலிங்கம்
திரு.து.சுப்பிரமணியசிவம்
திரு.பொ.சந்திரலிங்கம்
திரு.க.பாலசுப்பிரமணியம்
திரு.து.சிவலிங்கம்
திரு.பொ.இரகுநாதன்
திரு.க.காலிங்கராஜா
திரு.இ.சச்சிதானந்தம்
திரு.சு.பாலசுப்பிரமணியம்

### செயற்குழு உறுப்பினர்கள்

திரு.இ.சிவஞானசுந்தரம்
திரு.ஆர்.பி.அபர்ணசுதன்
திரு.இ.பவளராஜா
திரு.கோ.சிவசோதி
திரு.கு.கிரிதரன்
திரு.ந.கண்ணதாசன்
திரு.சி.சரவணபவன்
திரு.பா.லட்சராஜ்
திரு.க.சபேசன்
திரு.த.சிறீஸ்கந்தராஜா
திரு.ம.மணிமாறன்
திரு.மு.யசோதரன்
திரு.க.சுரேஸ்குமார்
திரு.ச.சிபாதரன்
திரு.பா.பிரசன்னா
திரு.சோ.நிமலன்
திரு.ந.அரவிந்தன்

## அன்று ஸ்ரீகணேசா வாசிகசாலை இன்று இணுவில் பொதுநூலகம்

ஏறத்தாழ 60வருட அகவையைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கும் இன் நூலகத்தின் வரலாறு கூறுவதில் இணுவில் வாழ்மக்கள் பெருமையடைகின்றனர். இதனுடைய படிப்படியான வளர்ச்சி பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று.இது வாசிகசாலையாக இணுவில்ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலுக்கு அயலில் ஒரு ஓலைக்குடிசையிலேபெயர் எதுவும் அற்றநிலையில் இரு தசாப்தங்களாகமாக தனது சேவையை நடாத்தி வந்தது.

ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் திருவருளால் 1948ம் ஆண்டு ஆலயத்தின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த திருக்கேணியை மூடி அதே இடத்தில் அவ்வூர் இளைஞர்களால் ஸ்ரீகணேசா வாசிகசாலை என்ற பெயருடன் இச் சனசமூக நிலையம் நிறுவப்பட்டது. ''உள்ளத்தனையது உயர்வு'' என்ற வள்ளுவன் வாக்குப்படி 1948ல் நிறுவிய ஸ்ரீகணேசாவாசிகசாலை நான்கு தலைமுறைகள் கைமாறி இடையில் விக்னேஸ்வரா வாசிகசாலை என்ற பெயருடன் இயங்கி வளர்ந்து இன்று இணுவில் கிராமத்துக்கே மகுடம் வைத்தாற் போல் விளங்கி ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையாரின் நேரடிப்பார்வையுடன் இணுவில் மானிப்பாய் வீதியில் தனக்கென ஒரு தனி இடத்தை பெற்று பாரிய கட்டடத்துடன் பல வேலைத்திட்டங்களைத் தன்னகத்தே கொண்டு இணுவில் பொதுநூலகம் என்ற பெயர் தாங்கி எழுந்து நிற்கின்றது.

ஸ்ரீபரராஜசேகரனின் அருளாட்ச்சியினால் காலத்துக்கு காலம் இளைஞர்கள் திருப்பணிக்கென்றே உருவாக்கப்படுகின்றார்கள்.இந்த வகையில் ஸ்ரீகணேசா வாசிகசாலையை உருவாக்குவதற்கு பதினைந்துக்கும் அதிகமான இளைஞர்கள் முதலாந்தலைமுறையினராகப் பணியாற்றி உள்ளனர்.இவர்களுட் பெரும்பாலானோர் தற்ப்பொழுது உயிருடன் இல்லை மேற்படி இளைஞர் குழுவின் தலைவராக க.கனகசபையும். நிர்வாக உறுப்பினர்களாக க.கதிரவேலு (ஆசிரியரும்) நா.முத்துலிங்கம் வைத்தியரும். இருந்து பணியாற்றினர் அவர்களுக்கு ஒத்திசையாக செ.இரத்தினப்பிரகாசம், இ.கனகலிங்கம். ,வ.சண்முகராசா (ஆசிரியர் கல்விப்பணிப்பாளர்) சி.நடராசா,சீ.நாராணி,வ.பொன்னுத்துரை (ஆசிரியர்) சி.கார்த்திகேசு (சங்கக்கடை),த.கனகசபாபதி, சொ.சோமசுந்தரம் த.குகதாசன்,சீ.அம்பலவாணர்.முதலியோர் இருந்து தொண்டாற்றினர் ஆலயத்தின் தென்கிழக்கு பகுதியில் துார்ந்த நிலையில் இருந்த கேணியை மன்னார்க்கடை வைத்திலிங்கம் என்பவரின் உதவியுடன் மூடி அதில் தற்காலிக கட்டடமாக மண்ணினாற் சுவர் வைத்து இரும்பு வலையடித்து ஸ்ரீகணேசா வாசிகசாலை என்ற பெயரில் சனசமூகநிலையத்தை 1948ம் ஆண்டு ஆரம்பித்தனர் பின்னர் அது நிரந்தரகட்டடமாக்கப்பட்டது 1948ம் ஆண்டு இலங்கையானது அன்னியராட்ச்சியில் இருந்து விடுபட்டுச் சுதந்திரம் பெற்றதாக கூறப்பட்ட காலமாகும். மக்கள் வாழ்கை எல்லாவகையிலும் பின்னடைவு பெற்றிருந்த காலமாகும் இக்காலகட்டத்தில் யாருடைய அனுசரணையோ உதவியோ இன்றி இளைஞர்கள் தமது சொந்தச் செலவிலும், உடல் உழைப்பாலும் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே ஸ்ரீகணேசா வாசிகசாலையாகும் இது பாரட்டத்தக்கதும் எல்லோருடைய உள்ளங்களிலும் பதிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இன்நிறுவனமானது திட்டமிட்டு அளப்பரிய சேவைகளைச் செய்தது கிராமமட்டத்தில் எல்லோருக்கும் செய்திகளை வழங்குதல் வாசிப்பு அறிவை மேம்படுத்துதல் நோய்தடுப்புப் பணிகள் செய்தல், சுகாதாரம் பேணல், படக்காட்சிகள் காண்பித்தல் ஐக்கிய பண்டகசாலை அமைத்தல் விளையாட்டுக்கழகம் அமைத்தல் முதலிய பணிகளை நிறைவேற்றி வெற்றி கண்டது மன்னார்க்கடை செல்லப்பாவின் துணைகொண்டு சனசமூகநிலையம் ஒரு வானொலிப்பெட்டியையும் பெற்றுக்கொண்டது இது மேலும் தனது செயற்ப்பாடுகளை விஸ்தரித்து நிறைவேற்றியது.

ஸ்ரீகணேசாவாசிகசாலை தனது விளையாட்டுக்குழு மூலம் தாச்சிவிளையாட்டு,வலைப்பந்து,போன்ற போட்டிகளில் முதன்மைநிலை பெற்றது வேறு எந்தப் போட்டியாளரும் வந்து இவ் விளையாட்டுக்குழுவை வெற்றிபெற்றுச் சென்றது கிடையாது அத்தகைய விளையாட்டு வீரர்களை இன் நிறுவனம் உருவாக்கி வைத்திருந்தது.

மேற்படி விளையாட்டுக் குழுவில் வ.பொன்னத்துரை ஆசிரியர் ஒய்வு பெற்ற விளையாட்டுத்துறை(கல்விப்பணிப்பாளர்),வ.சண்முகரசா.மஹாவித்துவான் ந.வீரமணிஐயா,எஸ்.இராமன்(தவில்) இராமையாகுருக்கள்,எஸ்.பதஞ்சலி ஆசிரியர், செ.இரத்தினப்பிரகாசம் மா.இராசரத்தினம் (ஆசிரியர்), சி.பரமலிங்கம், செ.கனகசபாபதி பொ.தியாகராசா,த.தணிகாசலம், த.கனகசபாபதி, வி.தம்பிப்பிள்ளை, இ.கனகலிங்கம், சு.நடேசபிள்ளை,திரு.சுந்தரம்,திரு.சிவஞானம் ஆகியோர் அங்கம் வகித்தனர் தற்பொழுது ந.வீரமணிஐயா, மா.இராசரத்தினம்,சு.நடேசபிள்ளை, செ.கனகசபாபதி,சி.பரமலிங்கம், வி.தம்பிப்பிள்ளை ஆகியோர் இருக்கின்றனர் ஏனையோர் காலஞ்சென்றுவிட்டனர்.

சகலதுறைகளிலும் ஆர்வம் காட்டி வந்த இன்நிறுவனமானது கலையை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டிற்று இன்நிறுவனத்தின் ஊடாக மஹாவித்துவான் ந.வீரமணிஐயர் அவர்களின் கதகளி நடனம் மேடைஏறியது **S.W.R.D** பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சரினால் ஐயா அவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

அவர்களின் பின் க.கதிரவேலு ஆசிரியர்அவர்களின் வழிகாட்டலின் பெயரில் இரண்டாவது தலைமுறையினர் ஸ்ரீகணேசாவாசிகசாலைப் பொறுப்பை ஏற்று நடாத்தினர் இதில் சு.இராசேந்திரம்,அ.ஸ்ரீதரன்,த.சொக்கலிங்கம்(ஆசிரியர்) த.பராபரம், வை.செகரசாசபிள்ளை, க.அருமைத்துரை,வே.கமலநாதன்,சு.திருநாவுக்கரசு, சி.இரத்தினசபாபதி, வி.தெய்வேந்திரம் அ.பாலசுப்பிரமணியும், சி.சிவலிங்கம், பிரம்ஸ்ரீ.வை.சோமஸ்கந்தக்குருக்கள், த.வேலாயுதபிள்ளை(ஆசிரியர்), தி.பரமலிங்கம், கா.சச்சிதானந்தம், கா.அருணகிரிநாதன் சு.முருகையா, இ.அம்பல்வாணர்,சொ.கனகசுந்தரம், மு.சண்முகம், இ.மகாராசா ஆகியோர் இன் நிறுவனத்தின் அங்கத்தவர்களாக கடமையாற்றினர்.

அவர்கள் முன்னர் செய்த செயற்ப்பாட்டுடன் மேலதிகமாக கோயில் திருப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தனர் 1960ம் ஆண்டு முதல் முதலாக ஸ்ரீகணேசா தண்ணீர்ப்பந்தலை அமைத்த பெருமை இவர்களுக்கே உரியது அதனைத்தொடர்ந்து தண்ணீர்ப்பந்தற் சேவை இன்று வரை நடைபெற்றுக் கொண்டே வருகின்றது மேலும் அவர்கள் நவராத்திரி விழாக்கள்,நால்வர் குருபூசைத்தினங்கள் கொண்டாடியும் விழாக்காலங்களில் பிரசங்கங்கள் வைத்தும் அன்னதானச் சேவை புரிந்தும் வந்துள்ளனர் கல்வியைப் பொறுத்த மட்டில் சைப்பிரகாச வித்தியாசாலையை புனர்அமைப்புத் தொண்டராகவும் பணியாற்றினர்.

சைவப்பிரகாசவித்தியசாலைப் பழையகட்டிடம் ஆலயத்தின் தெற்கு வாசலுடன் அமைந்திருந்தது அது ஐந்நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில போதுமான இட வசதி கொண்டது.இந்தக் கல்வி நிலையத்தை ஆலயத்தின் வடக்குப் புறத்திற்க்கு மாற்றி விட்டு (தற்ப்போது இணுவில் இந்துக்கல்லூரி) அதேஇடத்தில்

ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளளையார் கல்யாணமண்டபம் அமைக்கச்சில பிரமுகர்கள் ஏற்ப்பாடு செய்தனர் எனவே ஸ்ரீகணேசா வாசிகசாலையும் இடம் பெயரவேண்டிய நிலை உருவானது. இடம் பெயர்ந்த ஸ்ரீகணேசாவாசிகசாலை தாவடி மானிப்பாய் வீதியில் பின்னல் என்ற குறிஞ்சியில், கோயில் காணி ஒன்றில் தற்காலிகமாக அமைந்து சில காலம் விக்கினேஸ்வரா வாசிகசாலை என்ற பெயருடன் இயங்கி வந்தது.இவ்வாறக இவ்வாசிகசாலையானது முன்றாவது கைமாறியது.

1983ம் ஆண்டு ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வாசிகசாலை எடுக்கப்பட்ட பின்பு மீண்டும் அது அந்த ஆலயச்சூழலிலேயே அமையவேண்டு மென்ற விருபங் கொண்டு

இளைஞர்கள் இடம் தேடி அலைந்தனர்.அவ் வேளையில் ஆலயவீதி ஓரமாக பத்திரிகைகள் வைத்து வசித்து வந்தார்கள்.இவ்வாறு வாசிகசாலையானது தனக்கென ஓர் தனி இடம் இல்லாமல் நடமாடும் வாசிகசாலையாக இயங்கிவரும் நாளில், பெருமனங் கொண்ட இவ்வூர்ப்பிரமுகர்களின் முயற்சியால் தொழில் அதிபரும் (கல்கிபீடி)(கொடைவள்ளலுமாகிய) திருவாளர் திரு.சி.சின்னத்துரை அவர்களின் கட்டிடத்தை அவரது தொழில் முகாமையாளர் திரு.செ.பாலசுப்பிரமணியம் அவர்கள் தற்காலிகமாகச் சிறிது காலம் தந்துஉதவினார்கள், தற்காலிக வசதி பெற்று இன்நூலகம் இயங்கிவந்ததால் வெளிப்படையாக உதவிசெய்ய விரும்பாத ஊர்ப்பெரியார்கள் தளபாடவசதிகள், நூல்த்தொகுதிகள். நல்லெண்ங்கொண்ட இணுவில் வாழ்மக்கள், அயலூர் மக்கள்,நலன்விரும்பிகள், அபெரியார்களின் உதவியுடன் இளைஞர்களின் தலைமையில் 1986ம் ஆண்டு யூலை மாதம் 9ம் திகதி இன் நிலையத்தின் ஸ்ரீவிக்னேஸ்வரா வாசிகசாலை என்ற பெயர் மாற்றப்பட்டு இணுவில் பொது நூலகமும் சனசமூகநிலையமும் என்ற பெயர் சூட்டப்பட்டது. தொடந்து க.பாலசுப்பிரமணியம்(மணி) செ.குகன் செ.ஜெயக்குமர் இ.குகவரதன் ஐ.வரதன் வை.பிரபாகரன் சி.சண்முகலிங்கம்(ஸ்ரீ) போன்ற இளைஞர்களின் முயற்சியால் இப் பொதுநூலகம் பதிவு செய்யப்பட்டு, உடுவில் கிராமசபையில் நன்கொடையயையும் பெற்றதுது இப்பொதுநூலகத்தின் போசகர்களாகப் பண்டிதர் இ.இராசையா,க.அருமைத்துரை,அ.நித்தியானந்தன்,ஆகியோரும் தலைவராக சி.சண்முகலிங்கமும், உபதலைவராக ந.திவாகரனும், செயலாளராக ஜெயக்குமாரனும் உபசெயலாளராக ப.மதியழகனும், பொருளாளராக இ.குகவரதனும் பத்திராதிபராக க.கண்ணனும், கணக்காய்வாளராக வை.பிரபாகரனும் இருந்து பணியாற்றினர். மேலும் து.சிவகுமாரனும், மு.சண்முகம்,சி.இராசலிங்கம், ந.ஸ்ரீமான், பு.மயூரன், ஐ.விக்னேஸ்வரன், க.கணேசலிங்கம்,ஞா.திருக்கேதிஸ்வரன் - சு.பரமேஸ்வரன், .இசிவகுமாரன், க.மாணிக்கவாசகர்,சரவணபவன், த.சந்திரகுமார், வை.திருநாவுக்கரசு, ஆகியோர் செயற்க்குழு உறுப்பினர்களாக இருந்து பொதுநூலகத்தைச் சிறப்புடன் நடர்த்தி ஓராண்டு பூர்த்தி விழாவையும் 09.07.1987ல் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார்கல்யாணமண்டபத்தில் விமரிசையாக கொண்டாடினர்.

இவ்வாறு பொதுநூலகமானது சிறப்பாக இயங்கிவரும் நாளில் கட்டிடம் உரிமைமாற்றம் செய்யப்பட்டது இதனால் மீண்டும் பொதுநூலகம் இடமாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்ப்பட்டது.1988 - 1989 களில் நிலையத்தின் மூத்தஉறுப்பினர்கள் யா/இணுவில் இந்துக்கல்லூரி அதிபரினதும், கல்லூரி அபிவிருத்திச்சங்கத்தினதும் அனுமதியைப் பெற்று கல்லூரி மண்டபத்தில் நூலகத்தை இயங்கச் செய்தனர். இக்காலப்பகுதியில் ப.விக்னேஸ்வரன் (வவா) இன் நூலகத்தை மேற்ப்பார்வை செய்து வந்தார். நாட்டின் அசாதாரண சூழ்நிலைகாரணமாக பல இன்னல்களுக்கு உட்ப்பட்டார் 1990ல் மீண்டும் பொதுநூலகம் பழையகட்டிடத்தில் இயங்க ஆரம்பித்தது. இதனைக் சி.குகனேந்திரன் பொறுப்பேற்று நடார்த்தி வந்தார்.இவருடன் உறுப்பினர்களாக.க.சிவகரன்,த.சிவதர்சன், த.மைசூர்நாதன்,சி.ரஞ்சன்,ம.கஜந்தன்கு.விக்கினேஸ்வரன் போன்றோர் செயற்பட்டனர். தொடர்ந்து 17.02.1995ல் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக சி.குகனேந்திரனும், செயலாளராக ச.முகுந்தனும், பொருளாளராக இ.ஜெயாமூர்த்தியும் உபதலைவராக ந.ஸ்ரீமானும் ,உபசெயலாளராக ஸ்ரீஅரவிந்தனும், போசகர்களாக ந.வீரமணிஐயா,அ.தியாகராசா, பத்திராதிபராக கு.ஐங்கரனும், நிவாவாக உறுப்பினர்களாக,கா.திலீபன், த.சிவகாந்தனும்,கனக்காய்வாளராக அ.சுரேஸ்குமாரும் இருந்து செயற்பட்டனர். அவர்களின் முயற்சியால் புதிய வங்கிக் கணக்கு ஆராம்பிக்கப்பட்டு

பணம் வைப்பில் இடப்பட்டது. அத்துடன் லம்போதரா என்ற விளையாட்டுக்கழகமும் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை செயற்பட்டு வருகின்றது. 1995ம் ஆண்டு முதல் மிக நெருக்கடியான காலகட்டத்திலும் பொதுமக்கள் பல்வேறுவிதமான பங்களிப்புக்களை மனமுவர்ந்து செய்தனர் அதனைத்தொடர்ந்து 28.05.1997 புதியநிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. பொது நூலகத்தலைவராக தே.திருமுருகராஜனும் ,செயலாளராக க.சசிக்குமாரனும் பொருலாளராக கு.ஐங்கரனும்,பத்திராதிபராக சொ.கரிகரனும்,நூலகப் பொறுப்பாளராகச், சோ.முகுந்தனும,நிர்வாக உறுப்பினர்களாக,க.பார்தீபன், சொ.ஹரிகஜன ,த.குணசீலன், க.சிக்குமாரன், கி.அனந்தகோபன், கு.ஜெயசீலன், சி.ராஜ்குமார், த.சிவகாந்தன், செ.உமாகாந்தன், ஸ்ரீஅசோகனும்,போசகர்களாக, ந.வீரமணிஐயரும் க,தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டு நூலகச்செயற்படுகளை நடாத்தினர் தொடர்ந்து 29.08.1999ம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு நான்காவது தலைமுறையினரை இனங்கண்டது இதில் தலைவராக சொ.ஹரிகஜனும்,செயலாளராக க.பார்த்தீபனும் பொருளாளராக ம.நாகரூபனும் தெரிவுசெய்யப்பட்டார்கள் இதில் உபதலைவர் ந.ஸ்ரீமான், உபசெயலாளராக பா.சத்தியமூர்த்தி, க.சசிக்குமாரன் கு.ஐங்கரன், ஸ்ரீ.அரவிந்தன், ப.சுதாகரன்,ச.முகுந்தன சொ.ஹரிகரன், இராஜேஸ்வரன்,இ.இராஜசேகரன் க.அருனகிரிநாதன், அ.கிரிதரன், இ.ஜெயாமூர்த்தி போன்ற இளைஞர்கள் செயற்குழு உறுப்பினர்களாக இருந்து பொதுநூலகத்தைச் சிறப்புடன் நடார்த்தி வரும் நாளில் நூலகம் தனக்கென ஒரு நிரந்தரகட்டிடம் இல்லாத குறைஎல்லோர் மனங்களையும் வருத்தியது இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று லண்டனிலிருந்த இ.சிவகுமாரனை பொதுநூலக உறுப்பினர்கள் வேண்டிக்கொண்டனர். இந்தவேண்டுகோளை ஏற்று நூலகக்கட்டிடத்தை நிரந்தரமாக்க லண்டன் நண்பர்களுடன் கதைத்து ஆக்கபூர்வமான உதவிகளை உடனடியாகச் செய்வதாக இ.சிவகுமார் வாக்குறுதி கொடுத்திருந்தா இதற்கிணங்க இந்த நூலகம் சொந்தக்காணியில்,சொந்தக்கட்டடத்தில் இயங்கவேண்டும் என்பதற்க்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன இதன் விளைவாக லண்டனில் இ. சிவகுமாரன் மாணிக்கவாசகர், கா.திலீபன் ஆகியோரால் இணுவில் பொது நூலகத்திற்கான கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது இவர்களின் முன்னிலையில் தற்போதுள்ளகாணியையும் கட்டிடத்தையும் சுவிஸ்சில் உள்ள அதன் உரிமையாளரிடம் இருந்து 700000.00 (ஏழுலட்சம்ரூபா) இலங்கைப்பெறுமதிக்குச் சொந்தமாக வாங்கப்பட்டது. இதற்கு உறுதுணையாக இருந்தவர் சுவிஸ்சில் வசிக்கும் ஸ்ரீபத்மநாதன் ஆவார் இவர்களின் இன்னொரு முயற்சியாக சுமார் பத்துநாடுகளில் இணுவில் பொதுநூலகத்திற்கான கிளைகள் நிறுவப்பட்டன கனடாவில் இ.பரந்தில்லைராசா (பரம்) கா.கணேசு, சந்திரகுமார், பூ.சுரேஸ், இவர்களுடன் ஏனையநண்பர்களும் அன்பர்களும் சுவிஸில் சு.திருச்செல்வம், ம.சற்குருநாதன்,இ.பிரபாகரன்,ஆகியோரும். ஜேர்மனியில் சி.சிவாசித்துரை, பிரான்சில் த.குணசீலன் அவுஸ்திரேலியாவில் இ.பாலராமன் நோர்வேயில் இ.கிருபாமூர்த்தி டென்மார்க்கில் மு.காண்டீபன் க.சத்தியதாசன், கு.சிவதாசன், ஆகியோரும் பொறுப்பாகச் செயற்படுகின்றார்கள் அத்தோடு கொழும்பிலும் இணுவில் வாழ்அன்பர்கள் சேர்ந்து கிளைஒன்றை நிறுவியுள்ளார்கள் இதன் பின்னணியில் இருந்து வெளிநாடுகளில் வாழும் அன்பர்களின் முயற்சியால் சுமார் இருபத்தைந்து லட்சம்ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் புதுப்பொலிவுடன் 31.03.2002ல் போசகர் திரு க.தேவராஜா அவர்களினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வரலாற்றை நிறைவாக ஆக்குவதற்கு செவிவழியாகவும், எழுத்து வழியாகவும்,உள்ளதகவல்களையும், நூலகஆவணங்களையும் பயன்படுத்தினோம்.இவ்வரலாற்றில் தவறுகள்இருப்பின் குறைகளைந்து குணங்கொள்ளும்மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொகுத்தவர் – திருமதி.வை.கணேசபிள்ளை

**வரலாற்று ஆதாரங்களை வழங்கியோர்.**

திரு.த.சொக்கலிங்கம்
திரு.வை.பிரபாகரன்
திரு.சு.குகேந்திரன்

# இணுவில் பொது நூலகம்
# INUVIL PUBLIC LIBRARY
# சனசமூக நிலையம்
# COMMUNITY CENTRE

பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய் வீதி, இணுவில் தெற்கு இணுவில்

Web:www.inuvilpubliclibrary.com E-mail:info@inuvilpubliclibrary.com

**Redg.No.J/VC/43/CC 695**

Date: ..............................

இணுவில் பொதுநூலக அமைப்பு குழு, லண்டன்

திரு.க.மாணிக்கவாசகர்

திரு.இ.சிவகுமார்

திரு.கா.திலீபன் ஆகியோரின் பெரும்முயற்ச்சியால் மேற்படி நூலகத்துக்கு சொந்தமாக காணிகட்டிடத்தை வாங்குவதற்க்கு மனமுவந்து **நிதி உதவி செய்தோர் விபரம்** கீழ் வருமாறு இத்தொகை

01) திருமதி இராசையா இராசம்மா
02) திரு.க.காலிங்கராஜா (சின்னமணி) குடும்பம்
03) திரு.க.மாணிக்கவாசகர்
04) திரு.சு.சுரேஸ்குமார்
05) திரு.கு.கருணாமூர்த்தி
06) திரு.கு.மனோகரன்
07) திரு.சி.தணிகாசலம்
08) திரு.சொ.சுரேஸ்குமார்
09) திரு.இ.குகவரதன்
10) திரு.கு.மோகன்
11) திரு.இ.மதன்
12) திரு.செ.பாலகுமரன்
13) திரு.வே.சந்திரகுமார்
14) திரு.பொ.ஜங்கரன்
15) திரு.சொ.கேதீஸ்வரன்
16) திரு.தி.பாஸ்கரன்
17) திரு.இ.தேவமனோகரன்
18) திரு.இ.சத்தியமூர்த்தி
19) திரு.பொ.சிவசுப்பிரமணியம்

20) திரு.கு.தவத்தழகன்
21) திரு.இ.நவநீதன்
22) திரு.சு.ராமணதாஸ்
23) திரு.செ.தயாபரன்
24) திரு.க.சித்திவினாயகர்
25) திரு.க.தனஞ்செயன்
26) திரு.இ.செந்தூரன்
27) திரு.வி.கணேசமூர்த்தி
28) திரு.ப.றஞ்சன்
29) திரு.வி.சிறிகஜான்
30) திரு.ஏ.சசி
31) திரு.க.விவேகானந்தன்
32) திரு.க.விவேகானந்தன்
33) திரு.த.பிரதீபன்
34) திரு.செல்லத்துரை குடும்பம்
35) திரு.சி.காந்தன்
36) திரு.சி.கோபிகிருஸ்ணா
37) திரு.ந.குருபரன்
38) திரு.சி.நந்தன்
39) திருமதி.கௌரி செல்வன்
40) திரு.சு.திருக்குமரன்
41) திருமதி.சசி ஞானகரன்
42) திரு.கு.கருணாகரன்
43) திரு.அ.ஆனந்தமுருகன்
44) திரு.அ.சிவா
45) திரு.த.சிவதர்சன்
46) திருமதி.விஜி ஜெகதீஸ்வரன்
47) திருமதி சுதா சுதன்
48) திரு.சி.சண்முகலிங்கம் (சிறி) கனடா
49) திரு.சி.சிவாஜிதுரை (ஜேர்மனி)

## எமது இந்நூலக வளர்ச்சிக்கு சுவிசில் இருந்து மனமுவந்து நிதி உதவி செய்தோர் விபரங்கள்

01) திரு.ம.சற்குருநாதன்
02) திரு.சி.நந்தகுமார்
03) திரு.பா.திருச்செல்வம்
04) திரு.இ.பிரபாகரன்
05) திரு.சிறிபத்நாதன்
06) திரு.த.திருச்செல்வம்
07) திரு.பரமுருகானந்தன்
08) திரு.சிவபாலராசா
09) திரு.வே.ஆறுமுகதாஸ்
10) திரு.கு.இந்திரகுமார்

16) செல்வி.க.ஜெயராணி
17) திரு. இ.ராஜேந்திரகுமார்
18) திரு. அ.குகானந்தன்
19) திரு. ச.நாதன்
20) திரு. அ.தாசன்
21) திரு. ஐ.வரதன்
22) திரு. ப.விக்னேஸ்வரன்
23) திரு. க.விஜயரங்கன்
24) திரு. தி.விஜயதாஸ்
25) திரு. ச.ஆனந்தன்
26) திரு. ந.பாஸ்கரன்
27) திரு. பொ.ஜீவன்
28) திரு. கா.கந்தவேள்
29) திரு. செ.மனோகரன்
30) திரு. அ.பிரபா
31) திருமதி. வி.புனிதவதி
32) திரு. பு.ரமேஸ்
33) திரு. பு.ரவிநாதன்
34) திருமதி. மோ.சாந்தி
35) திரு. க.சிவகுமார்
36) திரு. ச.சோமாஸ்கந்த மூர்த்தி
37) திரு. செ.வதனகுமார்
38) திரு. து.பாலசேகரன்
39) திரு. ஐ.பாஸ்கரன்
40) திரு. து.சந்திரமேகன்
41) திரு. கு.குணா
42) திரு. சொ.ஜெயராஜா
43) திரு. க.கண்ணன்
44) திரு. பூ.லோகேஸ்வரன்
45) திரு. க.முருகேசம்பிள்ளை
46) திரு. து.நடராஜா
47) திருமதி. ஆ.நந்தினி
48) திரு. து.பார்த்தீபன்
49) திருமதி. வி.புஸ்பராணி
50) திருமதி. ம.ரதி
51) திரு. கா.சர்வேஸ்வரன்
52) திரு. து.தனபாலன்
53) திரு. அ.தயானந்தன்
54) திரு. அ.தயாபரன்
55) திரு. நா.ஆனந்தராசா
56) திரு. பு.பாஸ்கரன்
57) திருமதி. சு.மணிமாலா
58) திரு. மு.முருகதாஸ்
59) திரு. இ.நாகேஸ்வரன்
60) திரு. இ.நாகேஸ்வரன்
61) திரு. சி.பேரின்பசிவம்

11) திரு.வே.ஆனந்தசிவம்
12) திரு.வே.சுதர்சன்
13) திரு.சி.சிவராமன்
14) திரு.ப.கோபி
15) திரு.சு.நித்தியானந்தன்
16) திரு.கே.கைலாயநாதன்
17) திரு.ந.அகிலன்
18) திரு.சி.பரமானந்தம்
19) திரு.க.கணேசலிங்கம்
20) திரு.க.பத்மராசா
21) திரு.இ.பரராஜசேகரம்
22) திரு.செ.இராகவன்
23) திரு.பொ.சுபாஸ்கரன்
24) திரு.விஜயராஜா (குமரன்)
25) திரு.குலசிங்கம்
26) திரு.கு.செந்தில்குமரன்
27) திரு.ராஜராஜ்
28) திரு.த.சசிகுமார்
29) திரு.செ.ஞானேஸ்வரன்
30) திரு.சந்திரன்
31) திரு. காந்தி
32) திரு. தயாளகுரு
33) திரு.சண்முகராஜ்

**எமது இந்நூலக வளர்ச்சிக்கு கனடாவில் இருந்து மனமுவந்து நிதி உதவி செய்தோர் விபரங்கள்**

1) திரு. இ.பரம்தில்லைராசா
2) திரு. கா.கணேஸ்வரன்
3) திரு. சொ.சந்திரகுமார்
4) திரு. இ.பாலேந்திரராசா
5) திரு. ம.கோவர்த்தனன்
6) திரு.ச.கணேசலிங்கம்
7) திரு. பொ.கிரிதரன்
8) திரு. சொ.குணசீலன்
9) திரு. தி.மோகனதாஸ்
10) திரு. சு.முரளிதரன்
11) திரு. ஐ.பரமேஸ்வரன்
12) திரு. இ.பவளேந்திரன்
13) திரு. சு.சிறிராகவன்
14) திரு. கா.ராஜசேகரன்
15) திரு. ஐ.கங்காதரன்

62) திரு. சி. ராஜசேகரன்
63) திரு. அ.ரவீந்திரநாதன்
64) திருமதி. கு.சத்தியதேவி
65) திரு. மு.சிவா
66) திருமதி.ரா.விஜயலக்ஷ்மி
67) திரு. செ.ஜெகதீஸ்வரன்
68) திருமதி ம.உதயராணி
69) திருமதி க.சிவபாக்கியவதி
70) திரு. பூ.சுரேஸ்வரன்
71) திருமதி. க.தனலக்சுமி
72) திரு. ஐ.திவாகரன்
73) திருமதி. சி.விஜயா
74) திரு. பா.யோகேஸ்வரன்
75) திரு. ப.ஜெகநாதன்
76) திரு. ம.கண்ணதாசன்
77) திரு. செ.ஜெயராஜா
78) திரு. பொ.அருள்பிரகாசம்
79) திரு. பூ.மகேந்திரன்
80) திரு. பொ.ரவீந்திரன்
81) திரு. ந.செல்வரத்தினம்
82) திருமதி. பா.சிவமதி
83) திரு. ந.தெய்வேந்திரன்
84) திரு. செ.பவன்
85) திரு. ஐ.சிவசுப்பிரமணியம்
86) திரு. ப.அப்பன்
87) திரு. செ.தளையசிங்கம்
88) திரு. செ.சுரேஸ்
89) திரு. கு.லோகநாதன்
90) திரு. வை.பாஸ்கரன்
91) திருமதி. ரா.தவமணி
92) திரு. வி.மோகனதாஸ்
93) திரு. த.குணராசா
94) திரு. து.சிவனேஸ்வரன்

# ஐங்கரன்(டொட்)கொம்


ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில்தெற்கு,
இணுவில்

தொலை.பேசி 070.212636
வெளியூர்.0094.70.212636



Dealers in:

- Type setting
- Scaning
- internet




AINGARAN(DOD)COM

PARARAJASEGARAPPILLIYARKOVILADY,
INUVIL SOUTH,
T.P.070212636 IDD 0094070.212636
E..MAIL ainCOM@sltnet.lk



ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார்துணை

உள்ளம் சிறக்க வாழ்த்துகின்றோம்!!


# கணபதி தொலைத்தொடர்பு சேவை



local&idd


070.212644, 0094.70.212644

**24 மணி சேவை**



பக்ஸ் வசதியும் உண்டு

மலர் சிறக்கவாழ்த்துக்கள்



# ஜெயானேஸ் பிறிண்டேர்ஸ்

T.P. 021.3573

கே.கே.எஸ் வீதி,
இணுவில்.


**INTERNET&E.MAIL** சேவை

COMPUTER TYPESETTING ,OFFSET PRINTING

மலர்சிறக்க வாழ்த்துக்கள்

# ஸ்ரீராம் சைக்கிள் வேக்ஸ்

& உடல்வலுவூட்டும் பயிற்சி நிலையம்





**இணுவில் - மானிப்பாய் வீதி,
இணுவில்**

## இணுவில் பொது நூலக நிர்வாக சபை உறுப்பினர்கள் .

| | |
|---|---|
| போசகர் - | திரு.க.தேவராஜா (வணிகத்துறைத்தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்) |
| | திரு.து.சிவராசா (பிரபலவர்த்தகர்) |
| தலைவர்- | சொ.ஹரிகஜன் |
| உபதலைவர் - | ந.ஸ்ரீமான் |
| செயலாளர்- | க.பார்த்தீபன் |
| உபசெயலாளர்- | பா.சத்தியமூர்த்தி |
| பொருளாளர்- | ம.நாகரூபன் |
| பத்திராதிபர்- | கு.ஜங்கரன் , இ.ஜெயாமூர்த்தி |
| நூலகர்- | சொ.ஹரிகரன் , இ. திருக்குமரன் |
| ஒருங்கிணைப்பாளர் | திரு.ஞான.திருக்கேதீஸ்வரன் , ச.முகுந்தன் |
| கல்வித்துறை - | சு.கணேசலிங்கம் , இரா.அருட்செல்வம் |
| கணனித்துறை - | க.சசிக்குமாரன் அ.கிரிதரன் |
| இலக்கியமன்றம் | திருமதி.வை.கணேசபிள்ளை, க.சிறிநந்தகோபன் |
| கலை,கலாசாரப்பிரிவு - | த.சிவகுமாரன், தே.திருமுருகராஜன் |
| தொழில் நுட்பத்துறை - | ப.சுதாகரன் , வ.ஜெகதீஸ்வரன் |
| கிராம அபிவிருத்திப்பிரிவு- | வை.பிரபாகரன் , ச.தேவமுகுந்தன் |
| விளையாட்டுத்துறை - | இ.சிவநீதன் , இ. இராசேஸ்வரன் |

### செயற்குழு

1) க.பாலசுப்பிரமணியம்
2) க.கிருஸ்ணதாசன்
3) இ.முரளிராஜ்
4) து.ஜெயக்குமார்
5) ப.கலைச்செல்வன்
6) ப.சிவகரன்
7) தி.புஸ்பராஜா
8) கு.விக்கினரூபன்
9) நி.கஜேந்திரன்
10) அ.அருணகிரிநாதன்

### ஆலோசகர் குழு

1) திரு.வை.சேமாஸ்கந்தக்குருக்கள்
2) திரு.க.அம்பலவாணர்
3) திரு.சு.பொ.நடராஜா
4) திரு.ஆறு.ஸ்ரீஸ்கந்தராஜா
5) திரு.சு.இராமச்சந்திரன்
6) திரு.த.சொக்கலிங்கம்

கணக்காய்வாளர். திரு.அ.சுரேஸ்குமார்

## காலத்தினால் செய்த நன்றியை இதயத்தில் நிறுத்தி நன்றி கூறுகின்றோம்

எமது பிரதேசத்தில் உள்ளவர்களின் நலன் கருதி எமது பொதுநூலகம்31.03.2002புதுமெருகூட்டப்பட்டுதிறப்புவிழாசெய்துவைக்கப்பட்டது.திறப்புவிழாவின் ஞாபகச் சின்னமாக ஒரு மலரை வெளியிட வேண்டும் என்றஆர்வம்அனைத்துஅங்கத்தவர்களின் மனதிலும் நிலை கொண்டிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் அதனை அன்று வெளியிட முடியவில்லை. ஆனாலும் எமது அங்கத்தவர்களின் விடாமுயற்சியின் பயனாக இம்மலரை இன்று மிகவும் அழகாகவும் சிறப்பாகவும் வெளியிடக் கூடியதாகவுள்ளது.இம்மலர் வெளிவருவதற்கும் எமது பொதுநூலகம் மெருகூட்டப்பட்டு நிமிர்ந்து நிற்பதற்கும் உழைத்த லண்டன்,கனடா,சுவிஸ், டென்மார்க்,அவுஸ்திரேலியா, ஜேர்மனி,பிரான்ஸ்,நோர்வே. போன்ற நாடுகளில் வசித்து வரும் எமதுஅங்கத்தவர்களுக்கு இன்றைய நன்னாளில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் இம்மலர் சிறப்புறுவதற்குரிய வாழ்த்துச்செய்திகள், ஆசிச்செய்திகள், வாழ்த்துப்பா,விளம்பரங்கள்,என்பவற்றை தந்துதவிய பெருமக்களுக்கும் எமது நன்றிகள் உரியனவாகுக.

அத்துடன் இம் மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டுத்தந்த ஐங்கரன்(டொட்)கொம் நிறுவனத்திற்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. அத்துடன் எமது பொதுநூலகம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்த நாளிலிருந்து அதற்கு உறுதுணையாக விருந்து உழைத்து வந்த எமது அங்கத்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறுவதோடு இனிவரும் காலங்களிலும் எமது பொது நூலகம் சிறந்து விளங்க எல்லாம் வல்ல ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் அருள் புரிய வேண்டும் மென்று வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

இணுவில் பொது நூலகம் சம்பந்தமான சகலவிதமான தொடர்புகளுக்கும்,மற்றும் விபரங்களுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய எங்கள் முகவரிகள்.(E.MAIL)


வெளிநாடுகள் - **info@inuvilpubliclibrary.com**
கொழும்பு - **colombo@inuvillibrary.com**
இணுவில் - **inuvil@inuvillibrary.com**


**க.பார்த்தீபன்**
செயலாளர்
இணுவில் பொதுநூலகம்.

எங்கள் விளம்பரதாரர்களை
நீங்களும்



ஆதரியுங்கள்

ஐங்கரன்(டொட்)கொம் இணுவில். 070.212636

துரிதப்படுத்தப்பட்ட பத்தாயிரம் புத்தகங்கள் சேர்க்கும் திட்டத்தின் கீழ்---


இணுவில் பொது நூலகம்
கொழும்புக்கிளை

AYNGARAN

# AYNGARAN VIDEO

OUR FIRST TAMIL VIDEO SHOW ROOM IN LONDON

## VISIT US FOR ALL YOUR ORIGINAL




## SPECIALISTS IN HOME ENTERTAIMENT

30, HIGH STREET,
COLLIERSWOOD,
LONDON,
SW192AB.

அருந்துங்கள்!

# அண்ணா கோப்பி

உங்கள் அன்றாட உணவுத் தேவைக்கு உரிய அத்தனை மா வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## அண்ணா கோப்பிக்கடை

நவீன சந்தை யாழ்ப்பாணம்

## எங்களின் தயாரிப்புகள்

அண்ணா கோப்பி

| | |
|---|---|
| வறுத்த அரிசிமா | |
| இடியப்பமா | மிளகாய்த்தூள் |
| வறுத்த உழுத்தம்மா | சரக்குத்தூள் |
| ஆட்டாமா | மஞ்சள்தூள் |
| குரக்கன்மா | தனிமிளகாய்த்தூள் |
| தோசைமா | துண்டு மிளகாய் |
| அப்பமா | குமரன் விபூதி |
| சாயி சுகந்தா பத்திகள் | துர்க்கா பத்திகள் |

இவைகளும்

மற்றும்

உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு போஷாக்கு நிறைந்த

## ஜீவாகாரம்

உண்பதற்கு தயார் நிலையில் உள்ள முழு உணவு

அண்ணா தொழிலகம்

இணுவில்

T.Phone No-021-3565